Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஐப்பசி 28- ஆம் நாள். ஜமாதிஹவல் பிறை 12 (14-11-59) சனிக்கிழமை இதழ் 41.

டெம்பிள் ட்ரீஸ் மாளிகையில்

# தமிழரசுத் தலைவர்களை

## தகநாயக்கா அழைத்துப் பேசினர்

### "தனிச்சிங்களச் சட்டத்தை நீக்கினல் ஒத்துழைக்கலாம்"

### மந்திரிப் பதவிகளை ஏற்க தமிழரசார் நிபந்தனை:

### தமிழர்களின் குறைகளைத் தீர்க்கப் பிரதமர் உறுதி மொழி

— நமது அரசியல் நிருபர் —

சென்ற வாரம் திட்கட்கிழமையன்று, தமிழரசுக் கட்சித் தலைவர்களில் இரு முக்கியஸ்தர்களை பிரதமர் தக்நாயக்கா அழைத்து "டெம்பிள்ட்ரீஸ்" மாளிகையில் வெகு நேரம் பேசியதாக அறிகிறேன். மீண்டும் பேச்சு நடந்ததாகத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற பிரதமர் இப்போது அதிக ஆவலுடன் இருக்கின்றனர்.

பாஷா பெரமுனைத் தலைவர் என்ற முறையில் தாம் முன்னர் என்ன கூறியிருப்பினும், நாட்டின் பிரதமர் என்ற புதிய நிலையில் அதையெல்லாம் மறந்து, தமிழருக்குள்ள குறைகளை நீக்க, தாம் உண்மையில் விரும்புவதாக உறுதி கூறியிருக்கிருரெனத் தெரிகிறது.

அரசாங்கத்துடன் அக் கட்சியினர் சேருவதாக இருந்தால், அக் கட்சிக்கு இரு மந்திரிப் பதவிகள் மட்டுமன்றி இரு உதவி மந்திரிப் பதவிகளையும்அளிப்பதாகக் கூறப்பட்டதாம். ஆனல் தனிச் சிங்களச் சட்டம் நடைமுறையில் இருக்கும்வரை, தமிழரசுக் கட்சியால் அரசாங்கக் கட்சியுடன் சேருவதைப்பற்றி நினைக்கவே முடியாதென்றும் அச் சட்டத்தை நீக்கிவிட்டால் இது பற்றி யோசிக்கலாமென்றும் தமிழரசுத் தலைவர்கள் பதிலளித்ததாக அறிகிறேன்.


அரசாங்கக் கட்சியுடன் சேராவிடினும், அத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழரின் சங்கடங்களைக் கூடுமானவரை குறைக்க தமிழரசுக் கட்சி முயலுமென்றும், இதற்குப் பதிலாக, அரசாங்கத்துக்கு, தங்கள் கட்சிக் கொள்கைக்கு முரணில்லாத முறையில் தமிழரசுக் கட்சி எதிர்ப்பு காட்டாமலிருக்கலாமென்றும் தெரிகிறது.

### மொழிக் கொமிஷனர் நீக்கம்?

மொழிக்கொமிஷனரான திரு. செனவி ரத்னவை அப்பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று வட்டுக்கோட்டை எம். பி. பார்லிமெண்டில் பேசுகையில், பிரதமரைக் கேட்டார்.

இந்தக் கோரிக்கைக்கு பிரதமர் தகநாயக்கா சீக்கிரம் செவிசாய்ப்பாரென்றும், திரு. செனவரத்னவுக்கும் புதிய அரசாங்

(9ஆம் பக்கம் பார்க்க)



Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினல் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினல் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஒட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496
தந்தி: "ஒட்டோஸ்" யாழ்ப்பாணம்

### திரு. சுந்தரலிங்கம் கடைசியில் மனம் மாறலாம்?

#### வவனியா இடைத் தேர்தல்

வவனியாத் தொகுதி இடைத் தேர்தலில், திரு. ஸி. சுந்தரலிங்கம், மனம் மாறிக் கடைசி நேரத்தில் ஓர் அபேட்சகராக முன்வரலாமென்று சொல்லப்படுகிறது.

அவர் அப்படி வருவதானல் சமஷ்டிக்கட்சியினர் அவருக்குப் போட்டியாக யாரையும் நிறுத்தமாட்டார்களென்று தெரியவருகிறது.



அகில உலகக் குழந்தைகளின் சித்திரக்காட்சி சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்றது. 65 நாடுகள் இதிற் பங்குபற்றின. 60,000 குழந்தைகள் இக் காட்சிக்குத் தங்கள் சித்திரங்களை அனுப்பி வைத்தனர். சிறந்த ஓவியத்துக்கான இந்திய ஜனதிபதியின் தங்கப் பதக்சத்தை செல்வன் அவினஷ்குமார் பரிசாகப் பெற்ருர். இன்று 70 வயதாகியுள்ள பிரதமர் நேரு அப்பதக்கத்தைப் பரிசாகப்பெற்ற 7 வயது நிறைந்த குமாருக்கு அதை மகிழ்ச்சியுடன் அணிகின்ருர்.

### கோப்பாய்த் தொகுதிக்கு மூவர் போட்டி

#### நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்

கோப்பாய் இடைத் தேர்தலுக்கு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. தமிழரசுக் கட்சியின் சார்பில் காலஞ் சென்ற கோப்பாய் பிரதிநிதியின் பாரியார் திருமதி கோமதி வன்னியசிங்கமும், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. எஸ். பி. நடராசாவும், சுயேச்சையாக திரு. எஸ். சிவசுப்பிரமணியமும் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். தேர்தல் அதிகாரி திரு. டி. எஸ். இரத்தினதுரை அவற்றை ஏற்றுக் கொண்டார்.

**திருமதி வன்னியசிங்கம்** தமிழரசுக் கட்சியின் மாதர் சங்கத் தலைவராவார். அரசியல்வாழ்க்கையில்அவர் தமது கணவருக்கு வலது கை போல விளங்கினர்.

கொழும்பு புறக்டர் **திரு. எஸ். சிவசுப்பிரமணியம்** ஆதியில் தமிழ் காங்கிரசை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். பின்னர் அக்கட்சியினின்றும் விலகிவிட்டார். இந்து சமய முன்னேற்றத்தில் சிரத்தையுள்ளவர்.

**திரு. எஸ். பி. நடராசா** பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலந்தொட்டே மார்க்ஸீயக் கொள்கையில் பற்றுக் கொண்ட இவர், கொம்யூனிஸ்ட் கட்சியின் சிறந்த ஊழியர்களில் ஒருவராவர். இவர் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்ருர். வடமாகாண ஆசிரியர்சங்கச் செயற்குழுவில்அங்கத்தவராகக் கடமைபுரிந்த இவர், ஊரெழு சனசமூக நிலையத்தின் தலைவருமாவர்.

## வரி விளம்பரம்


**அறிவித்தல்**

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினுலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் யோகீஸ்வரரசம் என்ற பெயருடைய தமிழ்மருந்தினுல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்


## ஆசிரியருக்குக் கடிதங்கள்

### சில கூட்டுறவுச் சங்கங்களில் தலை காட்டும் சுயநலம்

சில கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு மனப்பான்மையற்று தனிப்பட்டவரின் செல்வாக்கு தலை தூக்கி வருவதைக் காண்கின்றோம். கூட்டுறவு என்ற போர்வையில் ஒரு சிலர் தம் சுய நலத்தையே பேணி வருகின்றார்கள்.

கூட்டுறவில் சேர்ந்து நாட்டுக்குத் தொண்டு செய்யுங்கள் என மேடையில் எழுந்து பிரசாரம் செய்யும் ஒரு சில நிர்வாகிகளிடம் எம்மை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டால் அதற்கு மறுப்புக் கிடைக்கின்றது. சட்ட விளக்கமற்ற ஒரு சிலரை அங்கத்தவராகச் சேர்த்துக் கொண்டு, அவர்களைத் தம் விருப்பப்படி ஆட்டி வைக்கும் சங்கங்களும் உள. இந்த ஊழல்களை மாவட்ட மேலதிகாரிகள் உடனே நீக்க வேண்டும்.

கூட்டுறவுச் சட்டங்களுக்கு சில சங்க நிர்வாகிகள் வேறு விதமான விளக்கங்கள் கொடுத்துத் தமது சொந்த விஷயம் போல் நடத்துகின்றார்கள். இவ்வித நிர்வாகிகளால் கூட்டுறவின் நோக்கமே பங்கமடைகின்றது.

மேலதிகாரிகள் இது சம்பந்தமான ஊழல்களைத் தயக்கமின்றி அகற்றி கூட்டுறவு இயக்கத்தைப் புனிதமுறச் செய்ய வேண்டும்.

கூட்டுறவுப் பிரியன்
சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

---

### சமய பாடப் பரீட்சையும் மேற்பார்வையாளரும்

வவனியாப பட்டினத்தில் 140 மாணவர்கள் வரை கொழும்பு விவேகானந்த சபையினர் நடத்தும் சமயப் பரீட்சை எழுதினர். பரீட்சை நடைபெறும் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவியாளர்களாக ஒத்தாசை புரிவது விரும்பத்தக்கதல்ல. ஆசிரியர்களின் கண்ணோட்டம் மாணவர்களுக்கு தன்னம்பிக்கையுடன் விடையெழுத முடியாத வண்ணம் தடை செய்துவிடும். இதனைக்கண்கூடாகப் பரீட்சை நடைபெறும் இடத்தில் அறிய முடிந்தது.

பரீட்சைமேற்பார்வையாளரும் ஏனைய உதவியாளரும் மாணவர்களோடு சம்பந்தப்படாதவர்களாக இருப்பதே விரும்பத்தக்கது. சிரமத்தை நோக்காது எதிர்காலத்தில் இவ்வித ஒழுங்கை விவேகானந்த சபையினர் கடைப்பிடிப்பதே மேலானதாகும்.

ஒரு மாணுக்கன்.
வவனியா.

## சுயேச்சை அபேட்சகருக்கு சிங்களப் பெரியாரின் ஆதரவு?

### வவனியாவும் இடைத் தேர்தலும்

— நமது நிருபர் —

வவனியா

வவனியாத்தொகுதி இடைத் தேர்தலுக்கு உதிரிகளாகவும், கட்சிச் சார்பாகவும் பலர் அபேட்சகராகமுன்னிற்கமுனைந்துள்ளனர். முல்லைத்தீவைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் பதவியை ராஜினுமா செய்துவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. இவர் உள்ளூரில் பிறந்தவர் என்ற காரணத்தால் போதிய ஆதரவு கிடைக்குமென ஆங்காங்கு பேசப்படுகின்றது. எப்படி இருந்த போதிலும் தமிழரசுக்கட்சி அபேட்சகருக்குத் தான் நல்ல ஆதரவு இருந்து வருகிறது. தமிழரசுக் கட்சியின் செயற்குழு வவனியாவைச் சேர்ந்த—சேவை மனபான்மை படைத்த, பட்டினசங்கத் தலைவர் திரு எஸ். சுப்பிரமணியம் அவர்களையே கட்சி அபேட்சகராக நிறுத்தும் என்ற பெரு நம்பிக்கையும் வாக்காளர் பலரிடத்தே நன்கு இடம்பெற்றுள்ளது. பிரமுகர் சிலரைக் கண்டு பேசியபோது தமிழரசுக் கட்சி அபேட்சகர் யாராய் இருந்தாலும் அவருக்கே தமது பூரண ஆதரவுண்டெனக் கூறினுர்கள். இதற்கிடையில் திரு. ஸி. சுந்தரலிங்கம் அவர்கள் மீண்டும் தேர்தல் களத்தில் குதித்து விடுவார் என்ற பேச்சும் அடிபடுகிறது.

**கட்சிமனப்பான்மை**

சென்றமுறை தோல்விகண்ட சிங்களப் பெரியார் இம் முறை போட்டியிட மாட்டாரெனவும் சுயேச்சையாக நின்று போட்டியிடும் ஒரு தமிழ் அபேட்சகருக்குத் தனது ஆதரவை அளிக்க முற்பட்டிருப்பதாகவும் அறியக் கிடக்கின்றது. சுயேச்சைவாதிகளால் நன்மை இல்லையெனவும் உண்மையான கட்சி மனப்பான்மை படைத்த அபேட்சகர்தான் வவனியாத் தொகுதியிற் போட்டியிடவேண்டுமென்றஎண்ணமும் இங்கு நிலவுகிறது.

**குறிக்கோள்**

தமிழரசுக்கட்சி மட்டக்களப்புப் பகுதியில் அபேட்சகர்களை நிறுத்தி ஏமாந்ததுபோல வவனியாத் தொகுதியிலும் ஏமாருதிருக்க வேண்டுமெனக் கட்சி அனுதாபிகள் பலர் வலியுறுத்துவதாகவும் கேள்வி. சமசமாஜிகளும் இடைத்தேர்தலில் ஒரு கைபார்க்க விரும்புகின்றனர். தமிழர் என்ற ஒரே குறிக்கோளில் கட்சிச்சார்பாகப் போட்டி போடும் தமிழ் அபேட்சகருக்கே இடைத்தேர்தலில் ஆதரவு கிடைக்கும். தமிழரசுக்கட்சி தீர்க்கபுத்தியுடன் யாரை அபேட்சகராக நியமிக்கப் போகின்றனர் என்பதை மக்கள் அறிய ஆவல் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

## மக்களுக்கு வழிகாட்டுவதே பத்திரிகைகளின் பணி

### தமிழினம் விழித்தெழ வேண்டும்

யாழ்ப்பாணம்.

இன்றைய சகாப்தம் மக்கள் சகாப்தமாக இருப்பினும் மக்கள் விரும்புவதையே பத்திரிகைகள் எழுதிக்கொண்டிருப்பின் மக்களை முன்னேற்றமடையச் செய்யும் பணியிலிருந்து பத்திரிகைகள் தவறிவிடும். ஆகவேதான் பத்திரிகைகள் மக்களுக்குப் பின்னுற் செல்லாது மக்களுக்கு வழிகாட்டிகளாகத் தொண்டாற்றவேண்டியது மிக அவசியமாகின்றது. இவ்வாறு முதலியார் எஸ். சின்னத்தம்பி 'கலைச்செல்வி' ஆண்டுமலர் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்விழா சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ்ப்பாணம், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்இலக்கியமன்றத்தின் செயலாளர் திரு. சு.இராசநாயகம்அவர்கள், அனைவரையும்வரவேற்றுப் பேசும்போது கலைச்செல்வி ஆற்றிவரும் இலக்கியப்பணி பற்றியும் அதன் எதிர்காலத் திட்டம் பற்றியும் குறிப்பிட்டார். அதன் பின்னர் பாரதி பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற செல்வி அ. சூர்யகுமாரி (குழந்தை) செல்வன். ச. மரியநூமன் (சிறுவர் பிரிவு) செல்வன் வை. சி. குணசேகரன் (மத்திய பிரிவு) செல்வன் சே. சக்திவேல் (மேற் பிரிவு) ஆகியோர் மகாகவி பாரதியாரைப் பற்றிச்சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்கள்.

யாழ்ப்பாணம் மேயர். திரு. ஏ. தங்கராஜா துரையப்பா, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உரிய பரிசில்களை (தங்கப் பதக்கங்கள், நூல்கள்) வழங்கினுர்.

தலைவர் அவர்கள் கலைச்செல்வி ஆண்டுமலரை வெளியிட்டபோது அதன் முதற் பிரதியை உடுவில் கிராம சங்கத் தலைவர் திரு. தர்மலிங்கம் பணம் கொடுத்துப் பெற்றுர்.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் நடாத்துவதில் உள்ள சிரமங்களைக் குறிப்பிட்டு 'கலைச்செல்வி' போன்ற இலக்கியமாத வெளியீடுகளைத் தொடர்ந்து நடாத்துவதற்குப் போதிய வசதியும் மிகுந்த தைரியமும் அவசியமெனவும், இவற்றையெல்லாம் சமாளித்து கலைச்செல்வி ஆண்டுமலர் வெளியிட்டிருப்பதை 'ஈழநாடு' ஆசிரியர் திரு. இராஜ. அரியரத்தினம் அவர்களும் கலைமதி ஆசிரியர் திரு. சி. ஆறுமுகம் அவர்களும் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கெனச் சொந்தமான தினப்பத்திரிகைகளின் அவசியத்தை வற்புறுத்திப் பேசிய வித்துவான். திரு. க. ந. வேலன் அவர்கள் தமிழர்கள் தமிழ் தினசரிப்பத்திரிகை நடாத்துவதுடன், இயலுமானுல் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தமிழ் மக்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கான பத்திரிகைகளை நடாத்த முன் வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். இன்று தமிழ் மக்கள் ஊமையராய் குருடர்களாய் செவிடர்களாய் உணர்ச்சியற்றிருக்கின்றுர்களெனவும் அவர்கள் விழித்தெழுந்து கடமை ஆற்றவேண்டிய காலம் வந்து விட்டதெனவும் அவர் உணர்ச்சி ததும்பப் பேசினுர்.

கலைச்செல்வி ஆசிரியர், சி. சரவணபவன் விழாவின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூறினுர்.

திருமதி. நீலா சத்தியலிங்கமும் அவருடைய கோஷ்டியினரும் அளித்த நாட்டிய நிகழ்ச்சிகள் சபையோருக்கு அரிய கலை விருந்தாக இருந்தது.

## மலை நாட்டுச் செய்திகள்

### லட்சுமி தோட்டத் தகராறு

#### தொழிலாளரின் அனுதாப வேலை நிறுத்தம்

நாவலப்பிட்டி மாவட்டத்தைச் சேர்ந்த லட்சுமி தோட்டத்தில் கடந்த 11 வருடங்களாகத்தொழிற் சங்கத்தை உருவாக்க தொழிலாளர் எவ்வளவோ முயற்சி செய்து வந்தனர். தொழிற்சங்க ஆர்வம் கொண்ட சுமார் 175 தொழிலாளர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அங்கத்தினர்களாகப் பதிவு செய்துகொண்டார்கள்.

தோட்ட நிர்வாகம் வெளியிலிருந்து ஏழு எட்டுப் பேர்களைக் காவற்காரர்களாக நியமித்தது மட்டுமல்லாமல், துப்பாக்கிகளையும் அவர்கள் கையில் ஒப்படைத்ததாகக்கூறப்படுகிறது. இந்தப் பேராபத்தான நிலையை உணர்ந்த இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் உதவி தொழில் அதிகாரியை அணுகி உடன் ஒரு கூட்டு மகாநாட்டைக் கூட்டும்படி வற்புறுத்தியது. முயற்சிகள் பயனளிக்காமல் போய் விட்டன.

இந்தக் காவற்காரர்கள் ஒரு நாள் தொழிலாளர் சிலரை வழிமறித்து அடித்துத்துன்புறுத்தியது மட்டுமல் லாமல், அவர்களைத் தோட்ட ஆபிஸிற்குஎடுத்துச் சென்றதாகவும் தெரிகிறது. இந்தச்செய்தியைக்கேட்ட தொழிலாளர், நடந்ததுஇன்னதென அறியத் தோட்ட ஆபிஸிற்கு விரைந்து வரும்போது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதன் விளைவாக 22 வயது நிரம்பாத இளம் வாலிபன் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு இரையாக உயிரிழந்தான். இந்தச் செயலைக் கண்டிக்கும் முகமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த 30,000 தொழிலாளர்கள் ஒருநாள் அனுதாப வேலை நிறுத்தம் செய்தனர்.

இதன் பின்பு தோட்ட நிர்வாகத்திற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்களுக்கும் இடையே நடைபெற்ற மாநாடு தோல்வி அடைந்ததன் பயனுக லட்சுமி தோட்டத்தில் மீண்டும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தற்போது ஒரு சமரசமுடிவின் கீழ் லட்சுமிதோட்டத்தொழிலாளர் வேலைக்குத் திரும்பி விட்டதாகவும், இந்தத் தகராறைத் தொழில் கோட்டின் தீர்ப்புக்கு விட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

**12 குடும்பங்களுக்கு வேலையில்லை**

தலவாக்கொல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரமலை தோட்டத்தில் கடந்த மாதம்

[15ஆம் பக்கம் பார்க்க]

## சேறு தேங்கி நிற்கும் தெருக்கள்

### பாதசாரிகள் படும் வேதனை

மழை பெய்யும் பொழுது மட்டுமல்ல மழை ஓய்ந்தவுடனும் கூட தெருவிற்செல்ல முடியாத நிலை யாழ்ப்பாணத்தில் இப்பொழுது இருந்து வருகிறது.

வெள்ளை உடைதரித்து அலுவலகத்துக்குப் போவோமென்று வீதியில் சென்றுல் சேறு தெறித்து உடையில் வண்ணவேலை செய்கிறது. மோட்டார் வாகனங்கள் பன்னீர் தெளிப்பது போல், தேங்கிக் கிடக்கும் சேற்றை உடைகளின் மீது அலட்சியமாகத் தெளித்துவிட்டுப்போகின்றன. முகத்தில் கரிபூசப்பட்டது போல் உடையில் சேறுபூசப்பட்ட கோலத்துடன் எப்படி அலுவலகத்திற்கோ நாலுபேர் கூடும் இடத்திற்கோசெல்வது? தார் செம்மையாகத் தெருக்களில் பூசப்படாததினுல் தான் நமது உடைகளில் சேறு பூசப்படுகிறது. இத்தகைய நிகழ்ச்சி நடைபெறுவது கிராமத்திலல்ல, யாழ்ப்பாண நகரத்தில். சேறும் சகதியும் தெருவில் சேர்ந்திருக்கும் பொழுது, ஊர்மக்களிடம் 'இது உங்கள் நகரம். சுத்தமாக வைத்திருங்கள்' என்று சொல்லுவதால் மட்டும் பயன் விளையாது. தெருக்களைத் திருத்தி மக்களையும் திருந்திவாழ நகரசபை வழி வகுக்க வேண்டும்.

க. செ.
நல்லூர்.

## யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழும் ஆங்கிலமும் போதனு மொழிகள்

### கொழும்பில் தொடர்ந்து ஆங்கிலம்

கொழும்பிலுள்ள தமிழ் நுட்பக் கல்லூரியில் படிப்படியாகச் சிங்களம் புகுத்தப்பட்டு வருவதை ஆட்சேபித்து இலங்கை இளந் தமிழர் இயக்கம் சென்ற ஓகஸ்டில் பிரதமருக்கு அனுப்பி வைத்த தீர்மானத்தில் தமிழில் நுட்பக்கல்வி புகட்டக் கூடிய ஒரு பூரணத்துவமுடைய தொழில் நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டுமெனவும், அதற்கான நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுமாறும் அரசாங்கத்தைக் கேட்டிருந்தது. அத்துடன் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் சிங்களம் மட்டும் புகுத்தப்படுவது மூலம் தமிழ்ப் பேசும் மாணவர் வஞ்சிக்கப்பட்டு வருவதையும் அரசினருக்கு எடுத்துக் காட்டியது.

இது சம்பந்தமாகக் கொழும்பு நுட்பத் தொழிற் கல்லூரி அதிபர் திரு. எஸ். எவ். டி. சில்வா இளந் தமிழர் இயக்கச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கொழும்பிலுள்ள நுட்பத் தொழிற் கல்லூரியின் போதனு மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருந்துவருமெனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள கனிஷ்ட நுட்பத் தொழிற் கல்லூரியில் தமிழும் ஆங்கிலமும் போதனுமொழிகளாக இருந்து வருமெனவும், காலக் கிரமத்தில் இக்கல்லூரி சகல வசதிகளும் நிறைந்த ஒரு பூரணநிலையை அடையுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மகாராணி எலிசபெத் அடுத்த ஜனவரியில் குழந்தை யொன்றைப் பிரசவிக்கவிருக்கிருர். பிரிட்டனில் அரச குடும்ப பிரசவங்கள் பற்றிய சுவையான சில செய்திகளை இதோ இக் கட்டுரையில் படியுங்கள்.

# அரச குடும்பப் பிரசவம்

## ஆரவாரம் மிக்க ஒரு வைபவம்

### பண்டுதொட்டு பிரிட்டிஷ் மக்கள் காட்டி வரும் ஆர்வம்

**1. உத்தியோக உயர்வு**

சாதாரணமாகக் குழந்தையை எதிர்நோக்கும் அரசி அல்லது கோமகள் சென்ற் யேம்ஸ் மாளிகைக்கு அனுப்பப்படுவார். அங்குதான் பிரசவம் நடந்தேறும். இம்மாளிகையின் காவலர் தலைவன் அரச குழந்தையின் பிறப்புடன் உத்தியோக உயர்வு பெறுவான்.

ஏழாவது எட்வேர்ட் அரசர் பிறந்தபோது சென்ற் யேம்ஸ் மாளிகையின் காவலர் தலைவன் மாற்றம் பெற்ருன். அப்பதவி வேருெருவனுக்கு அளிக்கப்பட்டது. இப்பதவி மாற்றம் இரு வகை ஆட்சேபங்கட்கு இடமாயிற்று. 1. பழைய காவலர் தலைவனின் சம்பள உயர்வை இது பாதித்துவிட்டதென வாதித்தனர் ஒரு சாரார். 2. புதிய காவலர் தலைவன் மாளிகையின் காவற் பொறுப்பையேற்றபடியால் அவனுக்கே சம்பள உயர்வு அளிக்கப்பட வேண்டுமென வாதித்தனர் மறுசாரார். பிரதம சேனுதிபதியே இப்பிரச்சினையில் தீர்வு காண வேண்டியதாயிற்று. குழந்தை பிறக்கு முன்னரே புதிய காவலன் பதவியை யேற்றுக்கொண்டானென்பது சரிவர நிரூபிக்கப்படாமையால் பழைய காவலர் தலைவனே சம்பள உயர்வு பெற்ருன்.

**2. அரச மகவென உத்தரவாதம்**

அரசபீடத்தை அபகரிப்பதற்கெனவோ அல்லது வேறு பல பிரச்சினைகளைக் கிளப்பவோ அரசகுடும்ப பிறப்புகள் காலாயிருந்தபடியால் பிரசவத்தின் போது பிரதான அமைச்சர்களும் கன்ரர்பரி அதிமேற்றிராணியாரும் பிரசன்னமாயிருப்பது வழக்கம்.

இரண்டாவது யேம்ஸ் மன்னரின் துணைவியான மேரியரசியின் கட்டில் அருகே இவ்விதம் 67 பிரமுகர்கள் காத்திருந்தார்களாம். அவ்வித கண்காணிப்பிருந்தும் குழந்தை பிறந்த மறுதினமே அது இறந்தமையால் வேருெரு குழந்தையை மாற்றி வைப்பது அரசகுடும்பத்தவர்க்குச் சுலபமாயிற்று. எனினும் இராணி ஆன் வருடத்திற்கொரு குழந்தையைப் பெற்றமையால் அவளது மந்திரிமார் அடிக்கடி அந்தப்புரம் செல்ல நேரிட்டது. அவள் பதினேழு குழந்தைகளைப் பெற்றும் அவற்றுள் ஒன்ருவது ஒரு வயதுக்கு மேல் உயிருடன் இருக்கவில்லை.



விக்டோரியா மகாராணியின் முதற்குழந்தை பெண்ணுயிற்று. பிரசவம் முடிந்த பின் சூழநின்ற அமைச்சர்களில் ஒருவர் சலிப்புடன் "ஓ இளவரசியா?" என்று கூறினுர். உடனே மற்ருெருவர் "கவலை வேண்டாம். அடுத்த முறை இளவரசர் உதிப்பார்" என்ருர். மறுகணம் எல்லோரும் கூடிச்சிரித்தனர். இது மகாராணிக்கும், அவர் கணவர் அல்பட் இளவரசருக்கும் மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. அடுத்த பிரசவத்தின்போது இளவரசரின் கடுமையான ஆட்சேபங்களின் விளைவாக உள்நாட்டு விவகார அமைச்சர் மட்டுமே பிரசவத்தின்போது சமுகமளிக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. மாகிரட் இளவரசியின் ஜனனத்தின் போது தவருன கணக்கெடுப்பின் காரணமாக உள்நாட்டு விவகார அமைச்சர் ஒரு மாதத்திற்கு மேலாக அரச மாளிகையில் காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. எனவே இவ்வழக்கம் பின்னர்கைவிடப்பட்டது.

**3. குழந்தையைப் பார்க்க கியூ வரிசை**

அரச குடும்பத்தில் பிரசவம் என்ற செய்தி ஆங்கில மக்களுக்கு மிகுந்த அக்களிப்பையுண்டாக்கும் நிகழ்ச்சியாகும். குதூகலம் அதிகரிக்கும்போது அக் கூட்டம் சிலவேளைகளில் அசாதாரண சம்பவங்களிலும் ஈடுபடுவதுண்டு.

அரச குழந்தையை ஒரு குறிப்பிட்ட காலம்வரை பொதுமக்கள் பார்வையிலிருந்து புறம்பாக்கி வைத்திருப்பது வழக்கமாகும். மூன்ருவது ஜோர்ஜ் அரசனின் பாரியாரான மகாராணி கடோலற் குழந்தை பெற்றபோது மக்கட் கூட்டத்தின் மகிழ்ச்சி கட்டுக்கடங்கவில்லை. அரச மாளிகையின் முன் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டனர். புதிய இளவரசனைத் தாங்கள் பார்வையிட வேண்டுமென வற்புறுத்தினர். நேரஞ் செல்லச்செல்ல, கூட்டம் அதிகரித்ததுடன் அவர்கள் பலத்த கூச்சல் போடவும் ஆர்ப்பாட்டஞ் செய்யவும் தலைப்பட்டனர்.

அரச மாளிகைக்குள் கூடிய அமைச்சர்குழு அரசருடன் ஆலோசித்து குழந்தையை மக்கட்குக் காட்டுவதென முடிவு செய்தது. இரும்புக் கிருதிகளால் இளவரசனின் தொட்டிலைச்சுற்றிப் பலத்த வேலி போடப்பட்டபின் மக்கள் கியூ வரிசையில் நின்று தங்கள் எதிர்காலக் காவலனைக் கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தனர். இவ்வழக்கமும் பின்னர் கைவிடப்பட்டது.

**4. வைத்தியர்களின் அறிக்கை**

ஒவ்வொரு பிரசவத்தின்போதும் வைத்தியர்கள் அரசியினதும் மகவினதும் உடல்நிலை பற்றி அறிக்கை விடுவது வழக்கம். இவ்வறிக்கைகள் பிரசுரிக்கப்படுமுன் சட்ட நிபுணர்களால் ஒவ்வொரு வரியும் மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்படுகிறது.

விக்டோரிய அரசி ஆண்மகவொன்றைப் பிரசவித்தபின் வைத்தியர்களின் அறிக்கை அவரது பார்வைக்கு அனுப்பப்பட்டது. "அரசியும் இளவரசரும் சுகமாக இருக்கின்றனர்" என அறிக்கையிற் கண்டிருந்தது. இதைப்படித்த அரசி வாய்விட்டுச் சிரித்தார். "நானும் எனது கணவரும் (இளவரசர் அல்பேட்) சுகமாக இருக்கின்ருேம் எனவும் மக்கள் விளங்கிக் கொள்வர்" எனக் கூறினுர். எனவே சட்ட வல்லுநர் அறிக்கையை மாற்றி அமைத்தனர். "அரசியும் புதிய இளவரசரும் சுகமாக இருக்கின்றனர்." என்பதே புதிய வாசகமாகும்.

**5. மக்களுக்காக**

அரச குழந்தையின் பிறப்பைத் தெரிவிக்க டவர் கோட்டையிலிருந்து பீரங்கிகள் மரியாதைக் குண்டுகளை வெடிக்கும். இதைக் கேட்டவுடன் மக்கள் குதூகலத்துடன் 'ஹைட்பாக்' மைதானத்தை நோக்கிச் செல்வர். சிறிது நேரத்துள் ஹைட்பாக் மைதானத்தை ஜனசமுத்திரம் நிரப்பிவிடும். இதே தருணத்தில் ரூேயல் குதிரைப்படையினர் அணிவகுத்து மைதானத்திற்குள் செல்வர். அங்கு ஆகாயத்தை நோக்கித் தங்கள் துப்பாக்கிகளால் வெடி தீர்ப்பார்கள்.

இவ்வழக்கம் ஏன் கையாளப்படுகிறது? முன்னெல்லாம் அரச குழந்தை பிறந்த சேதியை அறிந்தவுடன் மக்கள் தங்கள் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு வீதிகளிலோடி மகிழ்ச்சியுடன் வெடி தீர்ப்பார்கள். இந்நிகழ்ச்சி வரவர அதிகரித்தது. இதனுல் பொதுசன பாதுகாப்புக்குப் பங்கம் விளையுமென்பதை யுணர்ந்த இராணுவம் இப்பொறுப்பைத் தானே கையேற்றுக் கொண்டது. ஆகவே மக்களுக்காக இராணுவத்தினர் வெடி தீர்க்கின்றனர்.

**6. பரிசு வழங்குதல்**

அரச குழந்தை பிறந்த அதே தருணத்தில் இங்கிலாந்தில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பரிசு வழங்குதலும் பழமையான சம்பிரதாயங்களில் ஒன்று. சாரல்ஸ் இளவரசர் பிறந்த சில தினங்களில் இவ்விதமாகப் பல தாய்மார் தங்கள் புதுமகவுகளின் பிறப்புச் சாட்சிப்பத்திரங்களை அனுப்பி வைத்தனராம். சில பத்திரங்கள் அவுஸ்திரேலியா, கனடா முதலிய இடங்களிலிருந்தும் வந்தனவாம். அவற்றையெல்லாம் அதிகாரிகள் திருப்பி விட்டனர்.

ஜேர்மனியிலிருந்து ஒரு மங்கை இளவரசர் சார்ல்ஸ் பிறந்த அதே தருணத்தில் தனது குழந்தையும் பிறந்ததை நினைவுறுத்தி, தனது மகவும் புதிய இளவரசனின் பெயராலேயே அழைக்கப்படவேண்டுமெனவும், இரு குழந்தைகளும் ஒருங்கே நின்று புகைப்படம் பிடிக்கப்பட வேண்டுமெனவும், இதன்மூலம் இரு நாடுகளிடையும் நெருங்கிய நட்புறவு நிலவச் செய்யலாமெனவும் தெரிவித்தாளாம்.

—சா. பெ.

# காணிவரி வசூலிப்பதில் பழைய முறையே ஏற்றது

## நாயன்மார் குளத்தை ஆழமாக்குதல்

### மாநகரசபைக் கூட்டத்தில் இரு பிரேரணை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நவம்பர் மாதப் பொதுக் கூட்டத்தில் (13-11-59) விவாதிக்கப்படவிருக்கும் பல விஷயங்களில் முக்கியமானதொன்று வரி வசூலித்தல் பற்றியதாகும். காணி வரி இறுப்பவர்கள் நகர சபைக்கு வந்து கட்டவேண்டுமென்ற சட்டம் பலருக்கு சொல்லொணுத சிரமத்தைக் கொடுக்கின்றபடியினுல், உடனே இதுபற்றி ஸ்தல ஸ்தாபன மந்திரியுடன் ஆலோசித்து, பழையபடி வரி வசூலிப்பவர்கள் மூலம் வரிப்பணத்தை அறவிடும் முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்று திரு. எஸ். இராசரத்தினம் ஒரு பிரேரணையைப் பிரேரிப்பார்.

பெரிய கடையிலுள்ள கடைகளின் வரி சம்பந்தமான ஒரு பிரேரணையும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கி. துரைசிங்கம் பின்வரும் பிரேரணைகளைப் பிரேரிப்பார்:

யாழ்ப்பாணப் பட்டினத்தின் நகரக் கோட்டையைச் சூழ்ந்திருக்கும் அகழியை ஆழமாக்கி, சேறுவாரி, முன்னைய நாட்களில் இருந்தது போல நன்னீருள்ளதாகச் சுத்தமாக்கி சுகாதாரத்துக்கு ஒப்புடையதாக உடனடியாகச் செய்யுமாறு புதைபொருள் ஆராய்ச்சி அலுவலக மேலதிகாரிகளையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

ஏழாம் வட்டாரத்திலுள்ள நாயன்மார் குளத்தை ஆழமாக்கி, சூழவுள்ள சுவர்களைக் கட்டி, தண்ணீர் இறைக்கும் யந்திரங்களைப் பொருத்தி அருகிலுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் ஒழுங்குகளைச் செய்து உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆகவேண்டியவற்றைச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் ஒரு பிரேரணையையும் திரு. கி. துரைசிங்கம் பிரேரிப்பார்.

# எட்டுமாத வெயிலின் பின் மழை கொட்டியது

## வெள்ளத்தில் தலை நீட்டும் பச்சைப் பயிர்

யாழ்ப்பாணத்து விவசாயிகளுக்கு மழையும் வெய்யிலும் துரோகம் செய்வது இன்று நேற்றல்ல. ஒரு வருடமில்லாவிட்டால் இன்னெரு வருடம் நிச்சயமாக நடக்கும். பாசன வசதி சற்றுமில்லாத இக் குடாநாட்டிலுள்ள கமக்காரர், அதுவும் பிரதானமாக வருடத்தில் ஒரே போகம் நெல் சாகுபடி செய்யும் கமக்காரர், வாடைக்காற்று கொண்டுவரும் மழையையே நம்பியிருப்பார்கள்.

**மழை கொட்டியது**

வழக்கமாக ஆடி ஆவணியிலேயே இந்தமழை தொடங்கிவிடும். ஆனுல் இவ்வருடம் ஐப்பசியில்தான் பெய்தது— இல்லை, கொட்டு கொட்டென்று கொட்டியது. எட்டு மாசக் கடும் வெய்யிலால் காய்ந்து வரண்டிருந்த இடங்களிலெல்லாம் ஒரு வாரத்துக்குள் வெள்ளம் தளும்பிக்கொண்டிருந்தது. குளம் குட்டைகளெல்லாம் முட்டி வழிந்து மேலதிகமான மழைத் தண்ணீரை நெல்வயல்களுக்குள் கக்கின. பிஞ்சுப் பயிர்களின் பச்சை நுனியே தெரியாமல் தண்ணீர் மூடிவிட்டது. நல்லவேளையாக இரண்டு மூன்று நாள் கடும் மழை இல்லாதபடியினுல் பயிர் மீண்டும் வெள்ளத்துக்குமேல் தலைதூக்கியது.

**நிலத்துக்குள் நெல்**

சில வருடங்களில் விதைத்தவுடனேயே இப்படி வெள்ளம் பெருகாவிட்டால் எத்தனையோ வயல்களில் நெற்பயிர் மிதமிஞ்சி வளர்ந்திருக்கும். மேலதிகமான பயிர்களை நாற்றுகளாக விற்பார்கள். அனுல், இம்முறை விற்பதற்கோ வாங்குவதற்கோ பயிரே கிடையாது. வெள்ளம் போட சில நாட்களுக்கு முன் விதைக்கப்பட்ட நெல் அப்படியே நிலத்துக்குள் புதைந்துவிட்டது. இந்த வயல்களில் வெள்ளம் துப்புரவாக வடிந்தோடினுல்தான் பயிர் முளைக்கும். எல்லா இடங்களிலும் வேளாண்மை பழுதென்று சொல்லமுடியாது. சிற்சில வயல்களில் என்னவிதமான கெடுபிடியுண்டானுலும் பயிர் வளர்ந்தோங்கிவிடும். ஆனுல், பொதுப்படையாக இவ்வருடம் விளைச்சல் குறைவுதான் என்று கமக்காரர்கள் நினைக்கிருர்கள்.

# பரந்தன் இரசாயன தொழிற்சாலை

## தொழிலாளர் சம்பளப் பிரச்சினை

பரந்தன் இரசாயன தொழிற்சாலை தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று சமீபத்தில் அதன் தலைவர் திரு. சி. எச். எஸ். நாதனின் தலைமையில் நடைபெற்றபோது, பின்வரும் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது:

1958-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கொடுபடாமல் விடப்பட்ட சம்பள அதிகரிப்பு விகிதத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமெனச் செய்யப்பட்ட முடிவைப் பரந்தன் இரசாயன கோப்பரேஷன் தலைவர் இதுவரை நடைமுறையில் கொண்டுவராததையிட்டு இக்கூட்டம் வருத்தம் தெரிவிக்கிறது. கொடுபடாமல் விடப்பட்ட விகிதங்கள் அனைத்தும் முற்ருக கொடுக்கப்படும் வரையில் 1959-ம் வருடம் ஒக்டோபர் மாதத்துக்குரிய சம்பளத்தைப் பெறுவதில்லை எனவும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

டைரக்டர்களும் சங்கமும் 31-7-59 இல் கூடிப் பேசிய போது டைரக்டர் குழு தொழிலாளர்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று அனுமதி அளித்திருந்தும் தொழிற்சாலைத் தலைவர் அதற்கு முட்டுக்கட்டையாயிருப்பதையிட்டு இக்கூட்டம் ஆழ்ந்த ஏமாற்றம் தெரிவிக்கிறது.

இப்பேர்ப்பட்ட நடத்தையினுல் தொழிற்சாலைத் தலைவ

(6ஆம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 10. வயதும் வம்பும்

குடிசையை நோக்கி நடந்துகொண்டிருக்கையில் தன் இளைய மகன் செல்லனின் நினைவு வந்தது, வேலாயுதத்திற்கு. காலைச்சாப்பாடு கொண்டு வந்தவன் எங்குதான் போனானோ? விளையாட்டுப் பயல், காடு கரம்பென்று திரிவான். வரும்போது சுண்டங்காயுடனும் மாங்காயுடனும் வருவான். அவன் எங்குதான் போயிருப்பானோ?

மத்தியானமாகி விட்டதால் வேலாயுதத்திற்குப் பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. மத்தியானச் சாப்பாட்டை இங்கேயே பார்த்துக் கொள்வதா? அல்லது மகனை வீட்டுக்கனுப்பிச் சோறு கொண்டுவரச் சொல்வதா? என்ற யோசனையில் ஆழ்ந்தான் வேலாயுதம். எதற்கும் செல்லனை இன்னும் காணவில்லையே!

குடிசைக்கு மேலே நிழல் கவிந்து நின்ற வேப்பமரத்தின் உச்சாணிக் கிளையிலிருந்து காகம் ஒன்று சன்னமான குரலிற் கரைந்து கொண்டிருந்தது. உச்சி வெய்யிலை அதனாற் கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லைப் போலும்!

ஆனாலும் என்ன? எத்தித் திரியும் அந்தக் காகம், இதுவரையும் எப்படியோ தன் வயிற்றுப்பாட்டை முடித்துக் கொண்டிருக்கும். கரை வலைக்காரன் மீனோடு சேர்த்துக் கரையில் இழுத்துப் போட்ட பாசித்திரளைகளிலிருந்து, கண்சிமிட்டும் மீன் குஞ்சுகளையோ, மீன்பிடிகாரர்கள் எச்சிற் தட்டைக் கழுவியூற்றிய இடத்தில் மிஞ்சியிருந்த பருக்கைகளையோ, எதையெதையெல்லாமோ தின்று இந்நேரம் வயிற்றை நிரப்பியே இருக்கும். ஆனால் எதைத் தின்றாலும், தன் இனத்தோடு சேர்ந்துதான் சாப்பிட்டிருக்கும். ஆனால் வேலாயுதத்தைப் போன்ற மனிதன் மட்டும், ஒவ்வொருத்தனும் தான் தான் சாப்பிடுவதற்காக, தன் இனத்தவனை உயிரோடே பட்சித்துவிடப் பார்க்கிறான். தன்னுடைய இரக்கமற்ற தன்மைக்குச் சப்பைக் கட்டுக் கட்டுவதற்காகப் 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்று பழமொழி வேறு உண்டாக்கி வைத்திருக்கிறான்.

வேலாயுதத்துக்கு நேற்று நடந்த சண்டை நினைவுக்கு வந்தது. பக்கத்திலுள்ள தென்னந் தோட்ட முதலாளி, தன் தோட்டத்தில் வேலை செய்பவருக்கு நாளுக்கு இரண்டரை ரூபாய்தான் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அப்படியும் அவனுக்கு நட்டம் வருகிறதாம். அதற்காக இருபத்தைந்து சதத்தைச் சம்பளத்திலிருந்து குறைத்தான். தொழிலாளர்கள் இந்தச் சம்பளக் குறைவை எதிர்த்தார்கள். ஆனால் அதற்குள் வேறு சிலர் இரண்டேகால் ரூபாய்க்கே வேலைக்கு வர ஒப்புக்கொண்டு விட்டார்கள். வந்தது அனர்த்தம்! ஒருவன் சோற்றை ஒருவன் பறிக்கப்போய், இருவருக்குமே இரத்தக்காயம் ஏற்பட்டு இப்போது ஆஸ்பத்திரிச் சோறு சாப்பிடவேண்டியேற்பட்டுவிட்டது! இந்த மனிதர்களை விட வேப்ப மரத்திற்கு மேலிருந்து கரையும் காக்கை எவ்வளவோ மேல்!

வேலாயுதத்தின் சிந்தனையோட்டம் அந்த அளவோடு ஸ்தம்பித்து விட்டது. சுற்றுப்புறத்துக் கோரைப் புற்களும், வேப்ப மரமும், ஏன்? மகாவலித் தேவியே சலனமற்று ஸ்தம்பித்து நிற்பதைப் போலத் தோன்றிற்று. வெளியே வந்து பார்த்தால், கிழக்குப்பார்த்த கடற்கரை மணலில் கானல் நீரைத் தவிர வேறேதுவுமே அசையவில்லை.

வேலாயுதம் தோளிற் கிடந்த துண்டை எடுத்துத் தலையிற் கட்டிக் கொண்டான். கண் வைத்த தொலைவிலேயும் செல்லனைக் காணவில்லை.

ஆனால், குரல் கேட்டுக் கடற்கரையைப் பார்த்தபோது, பரமசிவம் வந்துகொண்டிருந்தார்.

“என்னண்ணே இந்த நேரத்திலே”. என்று கேட்டான் வேலாயுதம்.

“நேரம் எங்கே கிடைக்குது தம்பி? பத்துப் பதினொருமணியாப் போச்சு வெளிக்கிட. இன்றைக்குக் கட்டாயம் வரவேண்டும் என்று துரை சொல்லியனுப்பியிருந்தார்” என்றான் பரமசிவம்.

சட்டையே கண்டறியாத பரமசிவத்தின் கட்டுமஸ்தான மார்பில், வேர்வையூற்று பிரவாகித்துப் பாய்கையில், அந்தப் பிரவாகத்தில், நெஞ்சை நிறைத்திருந்த அவரின் செம்பட்டை உரோமங்கள் நனைந்து உடம்போடு ஒட்டிக்கொண்டு கிடந்தன. அறுபதாண்டையும் தாண்டிவிட்ட அந்த முதியவர், இளைக்க இளைக்க அந்த வெய்யிலில் நடந்துவந்தது வேலாயுதத்தின் இரக்க உணர்ச்சியைத் தூண்டிற்று. உச்சி வெய்யிலில் அவரே வராமல் மகனை அனுப்பியிருக்கலாம் என்று அவன் எண்ணிக்கொண்டு வெளிப்படையாகவே கேட்டான், “ஏனண்ணே உங்க மகனை அனுப்பியிருக்கலாமே” என்று.

“அவனையா தம்பி, பெரிய எடத்துக்கெல்லாம் அவனையா தம்பி அனுப்புகிறது? மூத்ததெல்லாம் பெண்ணாப் பொறந்தது. அவனை நாலு எழுத்துப் படிக்க வைச்சேன். அவன் எதையெதையெல்லாமோ படிச்சுட்டு என்னென்னவெல்லாமோ பேசுறான். ‘எல்லாரும் சமமாம். மனுசனிலே கீழ்சாதி மேல்சாதி என்று இல்லையாம். இதெல்லாம், மேல்சாதிக்காரர் என்று சொல்றவங்க சூழ்ச்சியாம்.’ தம்பி; அவன் நம்ம குலத் தொழிலையே செய்யமாட்டான் போல வல்ல இருக்குது” என்று அலுப்பாகப் பேசினார் பரமசிவம்.

வேலாயுதத்துக்கு மூன்று மாசத்திற்கு முன்பு நடந்தது ஞாபகத்துக்கு வந்தது. அன்று பரமசிவமும், சுருட்டுக்காரரும் இன்னும் பலரும் வள்ளத்தில் ஏறிக்கொண்டார்கள். வழக்கமாகப் பரமசிவம் என்கின்ற பரமு தோணியிலே இருக்கும் ஆசனப் பலகையில் இருப்பதில்லைத்தான். ஆனால் வள்ளத்துள்ளே தண்ணீர் கிடந்ததால் வேலாயுதந்தான் அவரைப் பலகையிலே இருக்கும்படி சொன்னான். அவரும் இருந்துவிட்டார்.

ஆனால், அது சுருட்டுக்காரருக்குப் பிடிக்கவில்லை. பரமசிவத்தின் வயதைக்கூட ஒரு பொருட்டாக எண்ணாமல், “இறங்குடா கீழே, அம்பட்ட நாயே” என்று உறுமினார். பாவம்! அன்றைக்குப் பரமசிவம் தண்ணீருக்குள்ளேயே குதித்துக்கொண்டு உடுப்பையெல்லாம் நனைத்தெடுத்துக் கொண்டார்.

அப்படி நனைத்ததும் போதாமல், அக்கரைக்குப் போகுமட்டும், சுருட்டுக்காரரின் திட்டுக்களையும் வசவுகளையும் வாங்கிக்கொண்டார். “பள்ளுப்பறை அம்பட்டன், வண்ணான் எல்லாம் இனி நம்மிடம் பெண்ணே கேட்டுவிடுவானாம். எங்கட ஊரில் என்றால் எலும்பு எலும்பா நொறுக்கிவிடுவோம்” என்று எத்தனை ஆக்ரோஷத்தோடு அவர் பேசினார்?

அவரின் வசவுகளை வேலாயுதத்தாலேயே சகிக்க முடியவில்லை. “என்ன இருந்தாலும் அவர் வயதுக்காவது மரியாதை பண்ணவேண்டாமா?” என்று மனம் பொறுக்காமல் சுருட்டுக்காரக் கந்தையாவிடம் கேட்டான்.

அப்பாடா! அதற்கு அந்தச் சுருட்டுக்காரர் பேசிய பேச்சு! ஐயையோ; அன்றைக்குத் தொடக்கம் வேலாயுதத்திற்கு யாழ்ப்பாணம் என்றாலே ஒரு எரிச்சல் அவனை அறியாமலே வந்தது. அங்கே படித்தவர்கள் இருக்கலாம். பெரியவர்கள் இருக்கலாம். பெரிய பெரிய பாடசாலைகள் இருக்கலாம். என்ன இருந்தும் என்ன? பள்ளுப்பறைகட்கு எலும்பை நொறுக்கும் படிப்பைத்தானா அவர்கள் இத்தனைகாலமும் படித்திருப்பது?

வேலாயுதத்தின் யோசனை நீண்டதூரம் சென்றுகொண்டிருக்கையில், பரமசிவம் தன் துண்டினால் முகத்தைத் துடைத்து விசிறித் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டார். இன்னமும் ஓரிருவர் வராமல் வேலாயுதம் தோணியை அக்கரைக்கு விடமாட்டான் என்று அவருக்குத் தோன்றியது. எனவே, தன் கைப் பெட்டியைத் தரையில் வைத்துவிட்டுத் தானும் உட்காரப் போனார்.

“ஏனண்ணே போறதில்லையா?” என்றான் வேலாயுதம்.

“போகத்தான் வேண்டும். ஒருத்தரையும் காணவில்லையே” என்று குழைந்தார் பரமசிவம்.

“வராட்டி என்ன. நாம போகலாம் வாங்க, நீங்களும் போய்த் திரும்பி வரவேண்டும் இல்லையா?” என்று கொண்டே தோணியை நோக்கி நடந்தான் வேலாயுதம்.

பரமசிவமும் பின்னால் நடந்தார்.

வள்ளத்தில் ஏறிக் கொண்டதும் பரமசிவம் தண்டு வலிக்கத் தொடங்கினார். சுங்கான் பிடித்தபடி சோம்பியிராமற் தண்ணீரைத் துழாவிச் சவள் வலித்தபடியே வேலாயுதம் யோசிக்கத் தொடங்கினான்.

பரமசிவத்தாருக்கு அறுபது வயதாகியும் இன்னமும் வெய்யில் பனி என்று பாராமல் உழைக்கிறார். பாவம்: அவருக்கு முதல் மூன்றும் பெண்ணாகவே பிறந்து விட்டன. இன்னமும் ஒரு குமர் கரை சேராமல் இருக்கிறது!

ஊரெல்லாம், “சலூன்” என்ற சிகையலங்கார மண்டபங்கள் வந்தாலும், பரமண்ணன் இன்னமும் அதே குடிலிற்தான் தன் தொழிலை நடத்துகிறார். பெரியவர் சின்னவர் என்று பார்க்காமல், எவரைக் கண்டாலும் தோளிற் கிடக்கும் துண்டை எடுத்து விடுவது இலகுவாகவே அவருக்கு இருக்கலாம். ஆனால் இதனால் வயிறு நிறைந்து விடுமா?

அதிலும் இந்தக் காலத்து இளவட்டங்களுக்கு அவர் முடிவெட்டுவது பிடிக்கவே பிடிக்காது. அவரிடம் என்ன கிறீம் இருக்கிறதா? வெஸ்லின் உண்டா? சவர்க்காரம் மட்டுந்தான் வைத்திருக்கிறார். ஒரு நிலைக் கண்ணாடி கூடக் கிடையாது. இந்த நிலையில் அன்றாடச் சோற்றுக்கே அவருக்குத் திண்டாட்டமாகத்தான் இருக்கும். கல்யாணமாகிய அவருடைய இரண்டாவது பெண்ணை அவள் புருஷன் வேறு தந்தையிடமே துரத்தி விட்டான். அந்தப் பெண்ணும் அவள் குழந்தைகள் இரண்டும் குடும்பத்துக்குப் பாரமாக இருக்கின்றன.

இதற்காகத்தான் தூரத் தொலைவிலுள்ள ‘பெரிய மனிதர்கள்’ கூப்பிட்டனுப்பினால் பரமசிவம் நடையாக நடந்து செல்கிறார்.

ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அவர், அந்தத் தோட்ட முதலாளியிடம் செல்வது வழக்கமாகி விட்டது. ஐந்து கட்டை நடந்தால் என்ன? பாவம்! இன்றைக்கு அவருக்கு எப்படியும் அந்த முதலாளி இரண்டு ரூபாவாவது கொடுப்பார். அது மட்டுமா? வரும்போது வெறுங் கையுடன் வரமாட்டார். பத்துத் தேங்காயாவது கொண்டுவருவார். இரண்டு ரூபாய்க் காசுக்கும் பத்துத் தேங்காய்களுக்குமாக அவர் இந்த வேகும் வெய்யிலிலே, தன் தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் நடக்கிறார். என்ன செய்வது? வயிறு என்ற ஒன்று இருக்கிறதே.

வேலாயுதம் பெருமூச்சு விட்டான். அவனுக்கு மட்டும் சக்தி இருந்தால் அறுபது வயதுக் கிழவன் கிழவி எல்லாரையுமே வேலைக்குச் செல்லக் கூடாது என்று சட்டம் கொண்டு வருவான். எல்லாக் கிழங்கட்கும் தன் செலவிலேயே சோறு போடுவான். சோற்றைக் கவலையின்றித் தின்று விட்டு எல்லாக் கிழவர்களும் சாகும் மட்டும் குழந்தைகளைப் போலத் துள்ளித் திரிந்து கும்மாளமடிக்கச் செய்வான்.

எண்ணங்கள் இனிமையாகத்தான் இருந்தன. ஆனால் எண்ணங்களின் இனிமையால் கொதிக்கும் கும்பி நிறையவே நிறையாது என்ற யதார்த்த உண்மை அவன் மனத்திற் பளிச்சிட்டபோது வேலாயுதத்தின் உள்ளம் மறுபடியும் கூம்பிச் சாம்பிற்று

தோணி அக்கரையை அடைந்து விட்டது. பரமர் இறங்கிக் கொண்டு நடந்தார்.

தன் கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொள்வதற்காக வேலாயுதமும் பக்கத்திலுள்ள தேநீர்க் கடையை நோக்கி நடந்தான்.

(தொடரும்)

‘ஹென்றி’
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

வெல்லம் நாட்டின் செல்வம்: 2

# தொழில் வளப் பெருக்கத்துக்கு வெல்லத்தின் பல்வகை உபயோகம்

— நிம்பை தாசரதி —

இயற்கையாகவே தென்னை மரங்கள் மலிந்த நாடுதான் நம் நாடு. என்றாலும் அதைச் சீரமைத்துப் பாதுகாத்தால், சிறந்த பயனுண்டு என்பது திண்ணம். சீனி, வெல்லம் முதலியவைகளின் உற்பத்திக்கு ஏற்ற சூழ்நிலை அமையப்பெற்ற நம் நாட்டில், பெருவாரியான அளவு வெல்லம் உற்பத்தி செய்யலாம். அப்படி உற்பத்தி செய்தால், அவற்றால் பயன் உண்டா? நம் நாட்டின் சுய தேவைப் பூர்த்தி போக மிகுந்தவற்றை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்ய முடியுமா? நம் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, றப்பர் இவைகளைப்போல், வியாபாரமுறையில் வெல்லத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்தால் வெளிநாடுகளில் இதற்கு வரவேற்பு இருக்குமா? இவற்றையெல்லாம் நாம் அலசி, ஆராய்ந்து அறியவேண்டியது அவசியம்.

### தொழில் விருத்திக்கு உதவி

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெல்லம், சீனி முதலியவை பெரும்பாலும் உணவுக்காகவே பயன்படுத்தப் படுகின்றன. மேல் நாடுகளிலோ, உணவுக்காகமட்டுமின்றி, பலவகையான தொழில்களுக்கும் இவை உபயோகிக்கப்படுகின்றன. நம் நாட்டிலும் அதேபோன்று செய்தால் நாட்டின் செல்வநிலை, தொழில் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு முதலியவை அதிகரிக்க அது வெகுவாக உதவக்கூடுமல்லவா?

அமெரிக்காவில் வெல்ல ஆராய்ச்சிக்கென்றே ஒரு நிலையம் நிறுவப்பட்டுள்ளது. வெல்ல ஆராய்ச்சி ஸ்தாபனம் என இதற்குப் பெயர். வெல்லத்தைப்பற்றித் தலைசிறந்த ஆராய்ச்சிக்கு இந்த ஸ்தாபனம் வருடாவருடம் ஐயாயிரம் டலர் பரிசு வழங்கிவருகிறது. இந்த ஸ்தாபனத்தின் கூட்டுறவுடன், 'அட்லஸ் பவுடர் கம்பெனி' என்னும் அமெரிக்க தொழில் ஸ்தாபனம் ஒன்று இப்பொழுது, 'மானிடால்' 'சோர்பிடால்' என இரண்டுவிதமான புதிய ரசாயன பொருள்களைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இவ்விரண்டு ரசாயனப் பொருள்களும் வெல்லத்திலிருந்தே தயாரிக்கப்படுகின்றன! இவற்றில் 'சோர்பிடாலி' லிருந்து ஒருவகை 'கிளிசரின்' தயாரிக்கலாம். 'கிளிசரின்' பலவகை அழகுப் பொருள்கள் தயாரிக்கப்பயன்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன் 'தி கிரேட் வெஸ்டர்ன் ஷுகர் கம்பெனி' என்னும் அமெரிக்க ஸ்தாபனம் ஒன்று 30 லட்சம் டலர் செலவில் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவியது. இத் தொழிற்சாலை, வெல்லத்திலிருந்து 'மனோ சோடியம் குளூடனட்' என்னும் ஒருவகைரசாயனப் பொருளைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த ரசாயனப்பொருள் உயர்ந்தவகை சாக்லெட், மதுவகைகள், ரொட்டிகள், கேக்குகள் முதலியவை தயாரிக்கப் பெரிதும் உபயோகப்படுகிறது.

### நவீன சோப்

பென்ஸில்வேனியாப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பிலிம்ஸ் கேல் என்பவர் வெல்லத்திலிருந்து பனியன், 'கால்மேஸ்' முதலியவை தயாரிக்க ஏற்ற நூல் உற்பத்தி செய்யும் முறை ஒன்றைச் சமீபத்தில் கண்டறிந்துள்ளார். கனடாவைச் சேர்ந்த பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர் எல். டி. ஹாவர்டு என்பவர் வெல்லத்திலிருந்து நனையாத புதுவகைப் 'பிளாஸ்டிக்' குடைத்துணி தயாரிக்கும் முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். தண்ணீரில் கடின நீர், மிருது நீர் என இருவகைகள் உள. மிருது நீரில் சோப்பைத் தேய்த்தால் நுரை நன்கு கிளம்பும். கடின நீரில் தேய்த்தால் அப்படிக் கிளம்பாது. திரிதிரியாகக் கரைந்தோடும். இதனால் கடின நீரில் சோப்பைத் தேய்த்தால் சோப்புத்தான் கரையுமே தவிர, உடலோ, உடையோ சரியானபடி சுத்தமாகாது. மிருது நீரைப் போலவே கடின நீரிலும் நன்கு நுரை கிளம்பி, உடலையும், உடையையும் சுத்தம் செய்யக்கூடிய உயர்ந்தரக சோப் ஒன்றை அமெரிக்காவில் இப்பொழுது தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த சோப் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கக் கடைகளில் விற்பனையாகத் தொடங்கிவிட்டது. இந்த நவீன சோப்பைத் தயாரிக்க உதவுவது வெல்லம் தான்!

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பல ரசாயனக் கொம்பெனிகள் வெல்லத்திலிருந்து இரத்தபிளாஸ்மாவை அதிகரிக்கக்கூடிய மருந்தொன்றைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளன. அங்கே வளையும் பண்புள்ள 'எகொனைடெட் பிளாஸ்டிக்' தயாரிக்கவும் வெல்லம் பயன்படுகிறது.

இது மட்டுமல்ல, தாவரங்களில் தெளிக்கப்படும் பூச்சிகொல்லி மருந்துகள் அவற்றில் அதிகநாள் நீடித்து ஒட்டியிருந்து பலன் தரவும், வெல்லம் உபயோகமாகிறது. ஷாம்பு, பற்பசை, சோப், சிகரெட் முதலியவைகளில், ஒருவகை இனிய மணம் கிளம்பவும் வெல்லம் பயன்படுகிறது.

### வெல்லத்திலிருந்து திரவம்

பிரிட்டனிலுள்ள பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் 23 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற சேர். நார்மன் ஹெவோத் என்பவர் வெல்லத்திலிருந்து லெவுலினிக் அமிலம் தயாரிக்கும் முறை ஒன்றைச் சமீபத்தில் கண்டறிந்தார். இவ்வமிலம் பலவகையான மருந்துகள், நைலோன் பிளாஸ்டிக்முதலியவை தயாரிக்கப்பயன்படுகிறது. 'மோபில் ஆயில்' என்னும் மோட்டார் எண்ணெய்யுடன் இந்த அமிலத்தைக் கலந்தால், அது அதிக நாள் நீடித்து உழைக்கிறதெனவும் தெரிய வந்துள்ளது. சர்க்கரையிலிருந்து லெவுலினிக், நைட்ரிக், டைகோனிக் அமிலங்கள் தயாரிக்கும் முறைகளை, ஹைதராபாத் ரீஜனல் ரிஸர்ச் லெபாரட்ரி கண்டறிந்திருக்கிறது. வெல்லத்திலிருந்து 'அலைல் சுக்ரோஸ்' என்னும் ஒருவகை திரவப் பொருளைத் தயாரிக்கும் வகை ஒன்றை பி. எல். நிக்கல்ஸ், ஈ—யானேவ்ஸ்கி என்னும் இரண்டு ருஷிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இத்திரவம் இலேசான மஞ்சள் நிறமுடையது. இதைச் சுவர், தரை, மரச்சாமான்கள் மீது பூசினல் அவற்றிற்கு அழகிய நிறத்தைக் கொடுக்கும். இத்திரவம் காய்ந்ததும் கண்ணாடிபோல் ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய பொருளாக மாறிவிடுகிறது. ஆகையால் இது சுவர், தரை, மரத் தளபாடங்கள் முதலியவற்றிற்குப் பாதுகாப்பாக இருப்பதோடு, வனப்பும் கவர்ச்சியும் கொடுக்கிறது. நீர், நெருப்பு முதலியவை இதைப் பாதிப்பதில்லை.

இப்பொழுது மேனடுகளில்—முக்கியமாக அமெரிக்காவில் செயற்கை றப்பர் தயாரிக்கும் தொழில் வெகுவாக வளர்ந்து வருகிறது. இப்படி செயற்கை றப்பர் தயாரிக்கப் பலவிதமான முறைகள் இப்போது கையாளப்பட்டு வருகின்றன. அவற்றில் வெல்லத்திலிருந்து தயாரிக்கும் முறையும் ஒன்று. வெல்லத்தைப் பிரித்து சுத்தம் செய்யும்போது, அதிலிருந்து 'லாக்டிக்' என்னும் ஒருவகை அமிலம் கிடைக்கிறது. இது வெல்லப் பாகுபோன்றிருக்கும் ஒருவகைத்திரவம். ஆனல் நிறமற்றதாக இருக்கும். ஆங்கில வைத்தியத்தில் இது பலவிதங்களில் வெகுகாலமாகப் பயன்பட்டு வருகிறது.

வெல்லத்திலிருந்து கிடைக்கும் இத்தகைய செல்வங்களை நாமும் தக்கபடி பயன்படுத்த முற்பட்டால், மேல் நாட்டினரைப்போல், நம் நாட்டிலும் தொழில் வளம் பெருகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!





உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணிரையே

வாங்குங்கள்.

'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய

லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.


# பழம் பெருமை பேசுவதிற் பயனில்லை தமிழர் நலம் பேணி உழைப்பதே நமது பணி

— எஸ். வி. எல். செல்வநாயகம் —

இன்று தமிழ் உணர்ச்சிபற்றி எங்கணும் பேசப்படுகிறது. தமிழ் உணர்ச்சியல்லாத தமிழர்கள் அப்பெயருக்கே அருகதையற்றவர்கள் என்பது பலரது அபிப்பிராயம். தமிழகத்தில் தோன்றிய மாபெரும் அறிஞர்களும் புலவர்களும், இதுபற்றி விளக்கமாக எழுதியிருக்கின்றனர்.

தமிழருக்கு தமிழ் உணர்ச்சி அவசியம் வேண்டுவதே! அது போன்றே பிறமொழியைத் தாய்மொழியாகக்கொண்டுள்ளவர்களுக்கும் அவர் தம் மொழிகளில் ஆர்வம் இருத்தல் வேண்டும். இது உலக இயற்கை.

### அபிமானம் இல்லை

இன்று தமிழ் பேசும் மக்களிடையே தமிழில் போதுமான அறிவு, உணர்ச்சி, பற்று, அபிமானம் என்பன காண்பதற்கில்லையெனப் பலரும் மனமுருகிப் பேசுகிறார்கள். இதை, யாமெல்லாம் ஒப்பியே தீரவேண்டியுள்ளது. தமிழர் எல்லோரும் தமிழ் உணர்ச்சியைப் பெறுதிருப்பதற்கு அவர்கள் மட்டும் பொறுப்பாளிகள் என்று கூறுவதை நாம் ஏற்கக்கூடியதாகவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளும், சுற்றுடலில் அமைந்துள்ள பழக்கவழக்கங்களும் இதற்கு ஓர் காரணமாகும்.

பொதுவாக நோக்கும்போது ஆங்கிலப் புத்தகங்களிலும் பார்க்க தமிழ் புத்தகங்களின் விலை அதிகமாகவே காணப்படுகிறது. ஆங்கிலத்தில் இன்று ஏராளமான புத்தகங்களை மலிவான விலையில் அச்சிட்டு உலகமெங்கும் விற்றுவருகிறார்கள். தமிழில் ஐந்து, ஆறு ரூபாய் பெறுமதியான புத்தகங்கள் ஆங்கிலத்தில் ஒன்று அல்லது ஒன்றரை ரூபாய் விலைக்குச் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது. ஒரு சில நன்னேக்குடையவர்கள் இதுபற்றி ஆராய்ந்து தமிழகத்திலும் புத்தகங்களை மலிவான விலைக்கு அச்சிட்டு வழங்கவேண்டுமென்று ஆசித்து அதை நடைமுறையிலும் கொண்டுவந்து பெரும் வெற்றியைக் காட்டியுள்ளனர். இன்று அநேக புத்தகங்கள் மலிவுப் பதிப்பாக வெளிவருகின்றன. ஆனல், குறிப்பாக இலங்கையில் அதனால் நாம் எல்லாரும் நன்மைபெற முடிகிறதா என்பதே கேள்வி.

### தவறு பிறரிலும் உண்டு

ஈழநாட்டில் தமிழ் நூல்நிலையங்களோ மிகமிகக் குறைவு. ஆங்கில நூல்நிலையங்களுடன் தமிழ் நூல்நிலையங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் பின்னது கால் பங்கும் இல்லை என்றே சொல்லவேண்டும். ஒவ்வொரு ஆங்கிலப் பாடசாலையிலும் அநேகமாக ஒரு சிறிய நூல்நிலையமாகிலும் காணப்படும். ஆனல், அங்கிலை எல்லாத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும் இல்லை.

மேலும், ஆங்கிலப் பத்திரிகைகளையும், அவற்றுடன் தமிழ்ப் பத்திரிகைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! ஆங்கிலப் பத்திரிகைகளில் கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளும் இன்னும் பிற விடயங்களும் நிரம்ப நிரம்ப உண்டு. தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்த மட்டில் அவ்வளவாக இல்லை. எமக்குப் போதிய தமிழ் அறிவு இல்லையே, போதுமான தமிழ் உணர்ச்சி இல்லையே என்று கூறும்போது, அத்தவறு நம்மைச் சார்ந்த பிறரிலும், எம் சகோதரர்களிலும், எம் தாய் தந்தையரிலும், எம் சுற்றத்தாரிலும் கூடவே உண்டு.

### தமிழ் ஆசிரியர் நிலை

தபாலில் இடும் கடிதங்களுக்கு தமிழில் முகவரி எழுதினல் என்ன? என்று சிலர் கேட்கிறார்கள். இன்றுள்ள நிலைமையில் தமிழில் முகவரி எழுதப்படும் கடிதங்கள் குறிப்பிட்ட ஆளுக்குப் போய்ச் சேருமோ என்பது வியப்பான காரியமே. இன்னும் தமிழில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும், ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் ஆராய்ந்து பாருங்கள். முன்னவரிலும் பார்க்கப் பின்னவருக்கு இரட்டிப்பான மடங்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந் நிலையில் எவருமே இயற்கையாகத் தமிழ் சேவையை விட்டு பிற சேவைகளில் நாட்டம் செலுத்த ஏதுவாகிறது. இதற்கு எம்மவரை மட்டும் குறைகூறினல் அது பொருத்தமான குற்றச்சாட்டு என்று எனக்குப்படவில்லை. எப்படியோ நாமும் ஒருபங்கு குற்றத்தை ஏற்றுத்தானக வேண்டும்!

இத்தகைய நிலையிலும், கஷ்டங்களை எதிர்த்து நின்று

[13ஆம் பக்கம் பார்க்க]

## பூஜ்யம் தபால்

விஜயானந்த தகநாயக்கா
அவர்கள்,
பிரதம மந்திரி,
"டெம்பிள் ட்ரீஸ்"
கொழும்பு.

பிரதமரே!

தமிழில் எழுதுகிறேனே என்று இக்கடிதத்தைத் தாங்கள் படிக்காமல் குப்பைக் கூடையில் போட்டுவிடக் கூடாது. தங்கள் நன்மையைக் கருதியே இதை எழுதுகிறேன்.

சிங்கள வர்த்தகர்களுக்கு பொற்காலம் ஆரம்பித்து விட்டதாக சில வாரங்களுக்கு முன் இலங்கை வானொலியின் ஸ்ரீமான் அரசியல் குறிப்பாளர் மூலம் அறிவித்தீர்கள். கொழும்பிலே புறக்கோட்டையிலுள்ள பெரிய காணி, சிங்கள வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு ஒதுக்கப்படுமென்றும், பருப்பு, முதலிய உணவுப்பொருள் இறக்குமதி உரிமை சிங்கள வர்த்தக சங்கத்தாருக்கு அளிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீமான் அரசியல்குறிப்பாளரை யார் கேட்டாலும் கேட்காவிடினும், நான் தினசரி தவருமல் கவனமாகக் கேட்டு வருகிறேன். தயவு செய்து அவரை எக்காரணங்கொண்டும் நிறுத்தி விடாதீர்கள்.

இனி வர்த்தகர்கள் அரசாங்கத்துடன் சிங்களத்தில்தான் கடிதப்போக்குவரத்து நடாத்த வேண்டுமென்று தாங்கள் சுற்றறிக்கை விடுத்துள்ளீர்கள். சிங்கள வர்த்தகர்களுக்குப் பொற்காலம் ஆரம்பித்து விட்டதென்று ஸ்ரீமான் அரசியல் குறிப்பாளர் கூறிய சோதிடம் மெய்யாகி வருவதை உணர்கிறேன். மிகவும் மகிழ்ச்சி.

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா தானும் செய்யத் தயங்கியதை நீங்கள் துணிச்சலுடன் செய்கின்றீர்கள். இதனுல் சிங்கள வர்த்தகர் அனைவரும் தங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிருர்கள்.

ஆனுல் பாருங்கள். சிங்கள வர்த்தகர் சங்கத் தலைவரான அல்பேர்ட் பெரேரா அவர்கள், அருமையான உங்கள் யோசனையை எதிர்க்கின்ருர். அவசரப்பட்டு சிங்களத்தை வர்த்தகத்தில் புகுத்தினுல், வர்த்தகம் சீர் குலைந்து வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்குமென்றும், அரசாங்கம் வர்த்தக நிர்வாகத்தில் குறுக்கிடக் கூடாதென்றும் கேட்கின்ருர். பொற்காலத்தை தாங்கள் அதி சீக்கிரத்தில் கொண்டுவர விரும்பியும், அவர்கள் குறுக்கே நிற்கிருர்களே! என்ன செய்வது.

அது மட்டுமல்ல. 115 அரசாங்க இலாகாக்களில், தனிச் சிங்களத்தைப் புகுத்திவிட்டதாகப் பெருமைப்படுகிறீர்கள். ஆனுல் ரகசியம் என்ன தெரியுமா? பல சிங்கள அதிகாரிகளுக்கே, அந்த மொழி புரியாமல் சங்கடப்படுவதாகக் கேள்விப்பட்டேன். இதனுல் அரசாங்க அலுவல்களில் முன்னை விட அதிக தாமதம் ஏற்படுவதாகவும் தெரிகிறது. பனங்காட்டு நரியான தங்களுக்கு இவையெல்லாம் தெரியாமலா இருக்கும்?


மேலும் தங்களுக்கு ஆங்கிலத்தின்மீது உள்ள மோகத்தையும் நானறிவேன். இல்லாவிட்டால், பார்லிமெண்டிலே தாங்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அரசாங்க மொழியான சிங்களத்தில் பதிலளிப்பதை விட்டு, ஏன் ஆங்கிலத்தில் பேசவேண்டும்? அந்த நான்கு நாள் நடவடிக்கைகளும் பார்லிமெண்ட் சபையில் அநேகமாக ஆங்கிலத்தில் தான் நடந்ததைப்பார்த்தேன். தனிச் சிங்களப் பேச்செல்லாம் வெறும் அரசியல் செப்படி வித்தை என்றும், உண்மையில் ஆங்கிலத்தைக் கைவிட நீங்கள் யாரும் தயாராக இல்லை என்றும் கேள்விப்பட்டேன். உண்மைதானு?

இப்படிக்கு
"பூஜ்யம்"

குறிப்பு:-

ஓர் எச்சரிக்கை. இப்போது தங்கள் அரசாங்கத்தைக் கீழே விழாமல் தாங்கிக்கொண்டிருப்பது நியமன மெம்பர்கள் தாம். அவர்களில் ஐந்துபேருக்கு சிங்களம் தெரியாது. தனிச் சிங்களத்தை எக்காரணம் பற்றியும் தாங்கள் புகுத்தினுல் அவர்கள் கோபம் கொண்டு ஆட்சேபித்து, உங்கள் அரசாங்கத்தையே வீழ்த்திவிடக்கூடும். ஆகவே உஷார். ஆழந் தெரியாமல் காலை விடாதீர்கள்!

"பூஜ்யம்"



இவ்விரு 'ஹெலிகொப்றர்' விமானங்களும், எந்த இடத்திலும் இறங்குவதற்கான வசதியையளிக்கும் தளபாடங்களைத் தாமே கொண்டு செல்கின்றன. இங்கிலாந்தில் நடைபெற்ற பார்ன்பரோ விமானக் கண் காட்சியில் இவை காண்பிக்கப்பட்டன.

# சமரசத்துக்கு இடமில்லையேல் பலாத்கார நடவடிக்கை

### பிரதமர் நேருவின் கூற்று

சீனம் கைப்பற்றியுள்ள பிரதேசங்களை சமரச வழிகளில் மீட்க முடியாவிட்டால் பலாத்கார நடவடிக்கைகளை மேற் கொண்டு மீட்க வேண்டும்எனப் பிரதமர் நேரு கூறியிருக்கிருர்.

சீனம், இந்தியாவுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ள பத்துக் கைதிகளையும், இறந்தவர்களில் ஒன்பது சடலங்களையும் இதுவரை அது கொடுக்கவில்லை. இந்திய அரசாங்கம் இது குறித்து 26-10-59இல் சீன அரசாங்கத்திற்கு அனுப்பிய அறிக்கைக்குக் கிடைத்த சீன அரசாங்கத்தின் பதில் மிகவும் திருப்திகரமற்றது. கைதிகளையும் இறந்தவர்களின் சடலங்களையும் ஒப்படைக்கும்படி இந்

## இந்தியா

தியா இரு முறை ஞாபகமூட்டியும் போக்கு வரத்து வசதிகள் கஷ்டமாயிருப்பதை சீனம் அளித்த பதில் சுட்டிக்காட்டியிருக்கிறதாம். எல்லைப் பிராந்தியங்களில் இந்திய இராணுவத்தினரின் வீதிகள் அமைக்கும் பொறுப்பை மேற் கொண்டிருக்கின்றனர்.

இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையையோ அல்லது பாதுகாப்புக் கொள்கையையோ மாற்றியமைத்தால் அது இந்தியாவுக்கே கெடுதியாக முடியும் எனப் பிரதமர் நேரு கூறியிருக்கிருர். இந்தியாவின் எல்லைப்புறக்காவல் நிலையங்களை இயக்கும் பொறுப்பை இந்திய இராணுவம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இக்காவல் நிலையங்கள் லடாக், திபெத்து, சிங்கியாங் எல்லைகளில் இருக்கின்றன.

இரு தரப்பினரும் 12 மைல் தூரம் காவற் படைகளை பின் வாங்கச் செய்து மேலும் எல்லைப்புறக் கைகலப்புகளை நிகழாது தடுக்க வேண்டும் எனச் சீனப் பிரதமர் சௌ என் லாய் சென்ற ஞாயிற்றுக்கிழமை அனுப்பிய அறிக்கையை இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்கின்றது.

பிரதமர் நேருவும் சீனப் பிரதமர் சௌ என் லாயும் விரைவில் சந்தித்து எல்லை விவகாரம் குறித்து ஆலோசனைகள் செய்ய வேண்டும் என்றும் இவ்வறிக்கை வற்புறுத்துகின்றது. சீன-இந்திய எல்லை விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கு தன்னுல் இயன்றவற்றைச் செய்வதற்குச் சித்தமாக இருப்பதாக ருஷியப் பிரதமர் குருசேவ் கூறியிருக்கிருர்.

### இந்தியா - பாகிஸ்தான் உறவு

அசாம் இராச்சியத்தின் தலைநகராகிய சிலோங்கில் இந்தியா-பாகிஸ்தான் உத்தியோகத்தர்களிடையே அசாம்-கிழக்கு பாகிஸ்தான் எல்லை குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் கடந்த சனிக்கிழமை முடிவடைந்து விட்டன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள எல்லைத் தகராறு தீர்க்கப்படுவதை பிரதமர் நேருவும் ஜனதிபதி அயூப் கானும் வரவேற்றிருக்கின்றனர். இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என ஜனதிபதி அயூப்கான் கூறிய யோசனையை பிரதமர் நேரு நிராகரித்து விட்டார்.

### கோன்பூரில் கலவரங்கள்

ஒரு பொலிஸ்காரர் ஒரு பெண் கைதியுடன் முறைதவறி நடந்ததைத் தொடர்ந்து கோன்பூரில் கடந்த 2-ம் 3-ம் திகதிகளில் நடைபெற்ற கலவரங்களில் பொலிஸாரின் துப்பாக்கிக்கு 17 பேர் பலியாகினர். அமைதி நிலவுவதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சுமார் 200பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிருர்.

### மலையேறும் வீரர் பத்திரமாக இருக்கின்றனர்

நேபாளத்தில் கௌரி மலைச் சிகரத்தில் ஏறிக்கொண்டிருந்த 32 மலையேறும் வீரர்களைப்பற்றி கடந்த 3 வாரகாலமாகச்செய்தியொன்றும் கிடைக்காதபடியால், அவர்கள் பனிப்புயலில் சிக்கி உயிர் நீத்திருக்கலாம் அல்லது வழிதவறி திபெத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பம்பாயில் பேனு மன்னர்கள்

"பம்பாயில் பேனு மன்னர்கள்" என்ற நிகழ்ச்சி இம்மாதம் முதலாந் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணி முதல் 10-10 மணிவரை இலங்கை வானொலியில் ஒலி பரப்பப்பட்டது.

பம்பாயில் அண்மையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாடுபற்றியது இந் நிகழ்ச்சி. மூன்றுநாட்களாக நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகளின் ஒலிப் பதிவுகளைத் தொகுத்து, அம் மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து சென்ற சில்லையூர் செல்வராஜனும், இலங்கை வானொலியைச் சேர்ந்த வீ. சுந்தரலிங்கமும் இந்த நிகழ்ச்சியை அளித்தார்கள்.

மாநாடு ஆரம்பமாகிய தினத்தன்று மராத்தி எழுத்தாளர் வி. ஸ். காண்டேகர், குஜராத்தி எழுத்தாளர் திரு. கே. முன்ஷி ஆகியோருக்கும், தமிழில் வேதநூல்களை வெளியிட்ட திரு. ஜம்புநாதனுக்கும் "பாவைவிளக்கு"கள் வழங்கிக் கௌரவிக்சப்பட்டது முதல் இறுதிநாள் நடைபெற்ற நாடகம் வரையிலான ஒவ்வொரு நிகழ்ச்சியைப்பற்றியும் வெகு விபரமாக எடுத்துரைத்து இடையிடையே ஒலிப்பதிவுகளையும் சேர்த்திருந்தார்கள். பேனுமூலம் எமக்கு அறிமுகமான பல எழுத்தாளர்களது உரைகளை நாம் கேட்கக்கூடியதாக இருந்தது. மாயாவி, சோமு, கி. வா. ஜகந்நாதன், வி.ஸ்.காண்டேகர், அனுத்தமா, ஆர்வி, கோமதி சுவாமிநாதன், ரஸவாதி போன்ற எழுத்தாளர்களது பேச்சுக்களிலிருந்து சில பகுதிகளைக் கேட்டோம் "பம்பாயில் பேனு மன்னர்கள்" என்ற இந்த வானொலி நிகழ்ச்சியைக் கேட்ட நேயர்கள், பம்பாயில் இம் மாநாடு எப்படி நடைபெற்றது என்பதையும், பம்பாய் தமிழ்ச்சங்கம், பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியன பம்பாயில் எவ்வாறு இலக்கியப்பணி புரிகின்றன என்பதையும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்தது.

தமிழ் எழுத்தாளர் மாநாடு நிகழ்ச்சிகளை வர்ணனை செய்த இலங்கையர் இருவரின் பேச்சுக்கள் தெளிவாகக் கேட்டன. ஆனுல், தென்னகத்து எழுத்தாளர்களின் குரல் கேட்டதேயொழிய அவர்கள் என்ன சொன்னுர்கள் என்று 'புரிய' வில்லை. நிகழ்ச்சிகளை ஒலிப் பதிவு செய்தவர்கள் இரண்டு மைக்குகளை வைத்து ஒலிப் பதிவு செய்ய வசதி இருக்கவில்லைப்போலும்.

பம்பாயில் நடைபெற்றதமிழ் எழுத்தாளர் மாநாட்டின் சில நிகழ்ச்சிகளை இலங்கைமக்களும் கேட்பதற்கு வாய்ப்பளித்த இலங்கை வானொலியின் பணி பாராட்டுக்குரியது.

## ஐசனேவரின் ஆசியநாடுகள் விஜயம்

### லாவொஸ் பற்றி ஐ. நா. தாபனத்தின் அறிக்கை

பாரிஸ் நகரில் டிசம்பர் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் வல்லரசுகளின் பெருந் தலைவர் மாநாட்டுக்குச் செல்லும் பொழுது ஒன்பது நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர் தீர்மானித்திருக்கிருர். இவர் விஜயம் செய்யப்போகும் நாடுகள் இத்தாலி, துருக்கி இந்தியா, பாகிஸ்தான், அப்கானிஸ்தான், ஈரான் (பாரசீகம்), கிறீஸ், மொரொக்கோ, பிரான்சு ஆதியன. டிசம்பர் 3ஆம் திகதி வாஷிங்டனில் இருந்து புறப்பட்டு 4ஆம் திகதி

## உலக நிலை

ரோமாபுரிக்கு வருவார். 6ஆம் திகதி பரிசுத்த பாப்பாண்டவரைப் பேட்டி கண்டுவிட்டு அங்காரா வழியாக கராச்சி வந்தடைவார். 9ஆம் திகதி அப்கானிஸ்தான் வழியாக புதுடில்லி வந்தடைவார். 11ஆம் திகதி அமெரிக்க விவசாயக் கண்காட்சியைத் திறந்து வைப்பார். 14ஆம் திகதி ஈரானுக்குப் புறப்படுவார். 15ஆம் திகதி கிரீஸுக்கு வருவார். அங்கிருந்து ஒரு போர்க் கப்பலில் மத்தியதரைக் கடலில் பிரயாணம் செய்வார். 19ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு பாரிஸ் நகரில் நடைபெறும் பெருந் தலைவர் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு 22ஆம் திகதி மொரொக்கோ வழியாக வாஷிங்டனுக்குத் திரும்புவார்.

பதவி வகிக்கும் ஒரு அமெரிக்க ஜனதிபதி ஆசியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும்.

### லாவொஸ் நிலைமை

லாவொஸிற்கு விஜயம் செய்து நெருக்கடி நிலைமையை நேரடியாக ஆராய்ந்த ஐக்கிய

[14ஆம் பக்கம் பார்க்க]

## பரந்தன் இரசாயன தொழிற்சாலை

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரின் நல்லெண்ணத்தைத்தொழிலாளர் நம்ப மாட்டார்கள். ஆதலினுல் இச்சம்பவம் குறித்து இக்கூட்டம் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கிறது.

தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ருதமையினுல், தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்கள் பட்டினியால்சாவதைத் தலைவர் தடுக்க விரும்பினுல் 1959 ஒக்டோபருக்குரிய சம்பளத்துடன் மேற் சொன்ன விகிதங்களையும் முழுத்தொகையாகக் கொடுத்துவிட வேண்டும்.

3 மாதங்கள் சென்றும் இத் தொகையைக் கொடுக்காமலிருக்கும் செயல் எவ்வளவு அநீதியானதென்பதைத் தொழிற்சாலைத் தலைவருக்குச் சுட்டிக் காட்டுவதற்கு வேறென்ன வழிமுறைகளைக் கையாளலாமென்று ஆலோசனை செய்வதற்காக ஒரு செயற் குழு அமைக்கப்பட வேண்டுமென்றும் இப் பொதுக்கூட்டம் தீர்மானிக்கிறது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தலைவராகிய திரு. எஸ். ஐ. விஜயநாயகமும், முன்னுள் தலைவர் திரு. என். இராமநாதனும், சீமந்து தொழிற்சாலையில் வேலை பார்க்கும் திரு. நடராசாவும் பிறரும் இக்கூட்டத்தில் பேசினர்கள்.

# "பாரதத்தின் மாணிக்கமாக நீங்கள் நீண்ட காலம் வாழுங்கள்"

## நேருஜிக்கு மகாத்மாவின் ஆசி

இன்று பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு எழுபது வயதாகிறது. தமக்கு வயது அதிகமானதைப் பற்றி அவருக்கு வருத்தம். அதனால் இன்றைய தினத்தை யாருக்கும் தெரியாத ஓர் இடத்துக்குச் சென்று கழிக்கப் போவதாக அவர் கூறியிருந்தார்!

தமது பிறந்த நாளை, குழந்தைகள் தினமாகக் கொண்டாட வேண்டுமென்பது நேருஜியின் பழைய விருப்பம். ஆகவே, பல இடங்களில் குழந்தைகளுக்கெனப் புதிய பள்ளிக்கூடங்கள் கட்டி, சில செல்வந்தர்கள் நேருவின் பெயரால் தானமாகக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

மகாத்மா உண்ணுவிரதமிருந்த போது நேருவும் உபவாசம் கிடந்தது ஒரு ரகசியம். அவரை மகாத்மா காந்தி நீடூழி வாழுமாறு ஆசீர்வதித்து எழுதிய கடிதத்தையும், அறிஞர் பேர்னுட் ஷோவுக்கும் நேருவுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தையும் இச்சமயம் ஞாபகப்படுத்திக் கொள்வது பொருத்தமாகும்.

டில்லி
16 ஜனவரி 1945
எனது அன்புள்ள ஜவகர்லால்,

தங்கள் உண்ணு விரதத்தைக் கைவிட்டுவிடுங்கள்.

பாகிஸ்தான் பஞ்சாப் சட்டசபைத் தலைவர் சையீத் ஹுடுனிடமிருந்து எனக்குக் கிடைத்த தந்தியின் பிரதியை இத்துடன் அனுப்பியுள்ளேன். நான் உங்களிடம்கூறியபடியேஅவர் சொல்லியிருக்கிறார்.

தாங்கள் நீண்டகாலம் வாழ்ந்து, இந்தியாவின் மாணிக்கமாக இருந்துவாருங்கள்.

பாபுவின் ஆசிகள்

இதுதான் மகாத்மா காந்தி எனக்கு எழுதிய கடைசிக் கடிதம். கடிதத்தை ஹிந்தியில் எழுதியிருக்கிறார். காந்திஜி கடைசியாக உண்ணுவிரதத்தை முடித்த அன்றுதான் இக் கடிதத்தை எழுதினார். டில்லியில் ஏற்பட்ட வகுப்புக் கலகத்தைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டு காந்திஜி பலநாட்கள் உண்ணுவிரதமிருந்தார்.

டில்லியில் நடைபெற்ற சம்பவங்களையும், காந்தியின் உண்ணு விரதத்தையும் கேட்டு என் மனம் குலைந்தது. இரண்டொருநாள் நான் உணவெதுவும் உட்கொள்ளவில்லை. இதை உண்ணுவிரதமென்று சொல்ல முடியாது. எனக்கு சாப்பிடவே பிடிக்கவில்லை. இதைப்பற்றி வெகுவாக யாரும் அறியார்.

எப்படியோ காந்திக்கு இச் செய்தி எட்டியது. அதனால் தான் அவர் என் உபவாசத்தை முடிக்கும்படி இந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

என் பெயரான 'ஜவகர்' என்பதற்கு மாணிக்கம் என்று பொருளுண்டு. அதைக்குறித்தே



"பாரதத்தின் மாணிக்கம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இக் கடிதம் எழுதிய 12 நாள் கழித்து 30-12-48இல் அவர் கொலைஞன் கையால் இறந்தார்.

மேற்கு பஞ்சாப் சட்டசபைத் தலைவரிடமிருந்து மகாத்மாவுக்குக் கிடைத்த தந்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:—

ஜனவரி 13ஆம் திகதி பஞ்சாப் சட்டசபையில் தங்கள் தன்னலமற்ற, உன்னத லட்சியத்துடன் கூடிய மகத்தான உண்ணுவிரதம் பற்றிக் கூறப்பட்டவற்றில் சிலவற்றை இங்கு தருகிறேன். அவற்றை நானும் சபையும் பூரணமாக அங்கீகரிக்கிறோம்.

மலிக்முகமத் பிரோஸ்கான் நூன்: "மத ஸ்தாபகர்களைத் தவிர, உலகில் எந்த நாடும் மகாத்மாகாந்தியைவிட மகத்தான ஒருவரைத் தரவில்லை".

மும்தாஸ்கான் மௌலானு (நிதிமந்திரி) மகாத்மாகாந்தியின் உண்ணுவிரதத்தின் மூலம் அவருக்கு முஸ்லிம்களின் மீதுள்ள உணர்ச்சியை அறிய முடிகிறது. அதைப் பாராட்ட வேண்டியது நமது மேலான கடமையாகும். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தம் உயிரையே தியாகம்செய்யத் தயாராக இருக்கும் ஒருவராவது இந்தியாவில் இருக்கிறார் என்பதை இது காட்டுகின்றது. இந்த உண்ணுவிரதத்தை நீடிக்க இனி எவ்வித தேவையும் இராதென்றே எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். சிறுபான்மையோரைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவருடைய உணர்ச்சியை நாங்களும் பூரணமாகக் கொண்டிருக்கிறோம் என்று இச்சபையிலிருந்து மகாத்மா காந்திக்கு உறுதி கூறுகிறேன்.

பிரதமர் இல்திகார் ஹுசேன் கான்: மேலான நோக்கத்துடன் மகாத்மாகாந்தி மேற்கொண்ட இந்த மகத்தான காரியத்தை நாங்கள் போற்றுகிறோம். அவரது மதிப்புமிக்க உயிரைப் பாதுகாக்க இம் மாகாணத்தில் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

தலைவர், மேற்கு பஞ்சாப்
சட்டசபை.

### பொலிஸ் தடியடி

என் அன்பான ஜவஹர்,

தங்களுக்கு என் அன்பு. எல்லாம் தைரியமாகச் செய்திருக்கிறீர்கள். தாங்கள் இன்னும் அதிக துணிச்சலான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. தங்களை ஆண்டவன் நீடூழி வாழச் செய்து, இந்தியாவை அடிமைத் தளையிலிருந்து விடுதலை செய்ய, தங்களைத் தனது கருவியாகப் பயன்படுத்துவாராக.

வார்தா                தங்கள்
3-12-28                பாபு

"லட்சுமணபுரிக்கு சைமன் கமிஷன் வந்தபோது, நாங்களெல்லாம் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தோம். பொலிஸார், தடியால் எங்களை எல்லாம் பலமாக அடித்தனர். அந்த சம்பவத்தை ஒட்டியே காந்திஜி இக்கடிதத்தை எழுதியுள்ளார் என்று ஜவஹர்லால் நேரு இக் கடிதத்தைப் பற்றி எழுதுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர் பேர்னுட் ஷோ கடிதம் லண்டன்,
18 செப். 1948.
அன்பான மிஸ்டர் நேரு,

எனது அரசியல்எழுத்துக்களை தாங்கள் படிப்பதை அறிந்து மிகவும் பெருமை கொள்ளுகிறேன். தங்கள் விஜயம்என்னைக் கௌரவிப்பதாகுமென்பதைச் சொல்லத் தேவையில்லை. மூலையிலுள்ள இந்தக் கிராமத்துக்கு வந்து உங்கள் பொன்னுன ஒரு மாலை நேரத்தை வீணுக்குவது அவ்வளவு உசிதம் என்று என்னுல்நினைக்கமுடியவில்லை. இங்கு பேர்னுட் ஷோவின் பழைய எலும்புக் கூடுதான் உள்ளது. அது பல வருஷங்களுக்கு முன்பே செத்திருக்க வேண்டும். இதைத்தவிர இங்கு வேறு எதுவும் மிச்சமில்லை.

ஒரு சமயம் நான் பம்பாயில் ஒரு வாரமும், இலங்கையில் மற்ருேர் வாரமும் தங்கியிருந்தேன். இந்தியாவைப்பற்றி நான் நேரில் அறிய முடிந்தது அவ்வளவுதான். இலங்கை "மனித சமுதாயத்தின் பிறப்பிடம்" என்பதை உணர்ந்தேன். ஏனெனில் அங்கு ஒவ்வொருவரும் "ஒரிஜினலாக" (தனிப் பண்புடன்)காணப்படுகிறுர்கள். மற்றத் தேசங்களிலெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக உற்பத்தி செய்யப்படுகிறுர்கள்.

பத்திரிகைகளில் பார்ப்பதைத் தவிர இந்தியாவைப் பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. நான் ஓர்ஆங்கிலேயனல்ல.ஐரிஷ்காரன். அதனுல்நடுநிலையுடன் அதைக் கவனிக்க முடியும். ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலைபெற நீண்ட போராட்டங்களிடையே நான் வாழ்ந்து வந்திருக்கிறேன். அயர்லந்த், வடக்கு, தெற்கு எனப் பிரிவினை செய்ததும், ஹிந்துஸ்தான் பாகிஸ்தான் பிரிவினை போன்றதே.

தாங்கள் கேம்பிரிட்ஜில் எப்படி அந்நியரோ, அதே போலவே நானும் இங்கிலாந்தில் ஓர் அந்நியன்.

காந்தி இறந்ததால் தாங்கள் இங்கிலாந்து வருவது தடைப்படுமோ என்று கருதுகின்றேன். அவருக்குத் தகுதியான வாரிசு வேறு யாருமில்லாவிடில் தாங்கள்தான் நாட்டினைத்தையும் ஆளவேண்டியிருக்கும்.

உண்மையுள்ள
ஜி. பெர்னுட் ஷோ

மே. த. பிரதம மந்திரி
புது டில்லி
இந்தியா.

* *

### தூக்குத்தண்டனையே மேல்

அறிஞர் பேர்னுட்ஷோவுக்கு நேருஜி எழுதிய கடிதம் வருமாறு:-

புதுடில்லி
4 செப். 1948
என் அன்புள்ள மிஸ்டர் ஷோ,

தங்களுக்கு இக் கடிதத்தை நான் ஏன் எழுதுகிறேன் என்பது எனக்கே தெரியவில்லை. நாமிருவரும் அதிக வேலையுள்ளவர்கள். தங்களுக்கு அதிக வேலை கொடுக்க நான் விரும்பவில்லை. ஆனல் ஜுலை மாதம் 16ஆம் திகதி தாங்கள் தேவதாஸ் காந்திக்கு எழுதிய கடிதத்தின் பிரதியை அவர் எனக்குஅனுப்பியிருந்தார்.அதுதான் எனக்கு இக் கடிதத்தை எழுதத் தூண்டியது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் 18 வயதாக இருக்கையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. படித்தேன். அச் சமயம் தாங்கள் அங்கு பிரசங்கம் செய்ததைக் கேட்டேன். அதன் பிறகு தங்களை நான் காணவில்லை. தங்களுக்கு எழுதியதுமில்லை. ஆனல் தங்களது பல புத்தகங்களுடன் சேர்ந்து எங்களில் பலர் வளர்ந்து வந்திருக்கிறோம். அவற்றைப் படித்ததால் என் மனமும் ஓரளவு உருவாகியுள்ளது. ஆனல் அது தங்களுக்குப் பெருமை தரக் கூடியதோ என்பதை நானறியேன்.

தாங்கள் என் மனத்துக்கு மிக அருகில் இருக்கிறீர்கள். அதனல் தங்களை நேரில் வந்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்டேன். ஆனல் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதனல் தாங்கள் எழுதியதைப் படிப்பதே, தங்களைச் சந்திப்பதற்கு மேலான வழி என்று உணர்ந்தேன்.

காந்தியைக் கொன்றவரை என்ன செய்ய வேண்டுமென்று தேவதாஸ் தங்களைக் கேட்டதாகத் தெரிகிறது. அவரை தூக்கிலிடக்கூடும். மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமென்று கடந்த வருடங்களில் நான் ஆதரித்து வந்திருப்பினும், அவரைக் காப்பாற்ற நான் முயலமாட்டேன். இந்த விஷயத்தில் வேறு வழியே இல்லை. வேறு வழக்குகளில் ஒரு மனிதனை பதினைந்து அல்லது இருபது வருடம் சிறையில் வைப்பது, மரண தண்டனையை விடச் சிறந்ததாகுமா என்பது பற்றி எனக்கு இப்போது சந்தேகமாக இருக்கிறது.

உயிர் மிக மலிந்து விட்டது. ஒருசிலகுற்றவாளிகளைக் கொல்லுவதோ கொல்லாமல் விடுவதோ ஒரு பெரிய விஷயமாகத் தோன்றவில்லை. சில சமயங்களில் உயிர் வாழ வேண்டுமென்ற தீர்ப்பே, கொடிய தண்டனையாயும் இருக்கலாம்.

இந்தியாவைப் பற்றி தங்கள் கருத்தை என் நாட்டு மக்கள் கேட்டு தங்களைத் தொந்தரவு செய்வதற்காக நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். மற்றவர்களிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெற வேண்டிய பழைய பழக்கத்திலிருந்து எங்களில் பலர் விடுபடாமல் இருக்கிறோம். எங்களிடமே எங்களுக்கு நம்பிக்கையில்லாததுதான் இதற்குக் காரணம் போலும். பல சம்பவங்களும் எங்களை அதிகம் ஆட்டி விட்டது. எதிர்காலம் நாங்கள் கற்

[15ஆம் பக்கம் பார்க்க]





DALMIA CEMENT (BHARAT) LTD.
DALMIAPURAM (TIRUCHIRAPALLI)
D.C.E.3

இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்:
செட்டிநாட் கார்ப்பரேஷன்
பிறைவேட் லிமிடெட்,
106/118 கெய்சர் வீதி, கொழும்பு.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஐப்பசி மீ 28 உ (14-11-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## தமிழருக்குப் புதிய சங்கடம்

வர்த்தக ஸ்தாபனங்கள் அரசாங்கத்துடன் இனி சிங்கள மொழியில் தான் கடிதப் போக்குவரத்துநடத்த வேண்டுமென்று பிரதமர் தகநாயக்கா பிறப்பித்த சுற்றறிக்கையை சிங்கள வர்த்தக ஸ்தாபனத் தலைவர் கூட எதிர்க்கின்றார்.

"ஆங்கிலம் மூலமே இங்கு வர்த்தகம் நடை பெறுகிறது. அது உலகறிந்த மொழி. சிங்களம் பலருக்குத் தெரியாது. சிங்களத்தில் கடிதப் போக்குவரத்து நடாத்துவது வேலைகளை அதிகரிக்கச் செய்யும். அரசாங்கத்தின் பல நடவடிக்கைகளும் வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளன. இப்புதிய நடவடிக்கை வர்த்தகத்தையும் பாதிக்கும். சிங்களத்தைப் புகுத்துவது வர்த்தகர்களின் இஷ்டத்துக்கும் வசதிக்குமாக இருக்க வேண்டும். வர்த்தக விஷயங்களில் அரசாங்கம் குறுக்கிடக் கூடாது" என்று பலமாக அவர் வாதித்து, பிரதமரின் யோசனையை எதிர்க்கின்றார். ஐரோப்பிய, இந்திய வர்த்தக ஸ்தாபனங்களும் இதை எதிர்ப்பதால், பிரதமரின் இந்த யோசனை இப்போதைக்கு அமுலுக்கு வராமல் போகக் கூடும்.

என்றாலும் புதிய பிரதமரின் இந்த உத்தரவு, சிறப்பாக சிங்களவரல்லாதவரின் கவலையையும் பீதியையும் அதிகரிக்கச் செய்வதாகவுள்ளது. தமிழருக்கு அரசாங்கத்தின் மீது குறை இருப்பதாயும் அவர்களுக்கு நியாயம் வழங்கப் போவதாயும் பத்திரிகை பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் பிரதமர் தகநாயக்கா. புதிய பிரதமரின் பழைய சரித்திரம் எப்படியிருப்பினும், அவர் பொறுப்பான பதவி ஏற்றிருப்பதால், மொழி முதலிய விஷயமாகத் தங்களுக்குச் செய்யப்பட்ட தீங்குகளை அவர் இனி அனுதாபத்துடன் கவனித்து, அவற்றைத் தீர்க்க ஆவன செய்வாரா என்று இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் ஆவலுடனும் கவலையுடனும் எதிர் நோக்கி இருக்கையில், இந்த அறிக்கையை வெளியிட்டதன் மூலம், பிரதமர் அவர்களது நம்பிக்கையை வெகுவாக இழந்து விட்டார்.

இந்த அறிக்கையின் அடிப்படை நோக்கம், சிறுபான்மையோரை வர்த்தகத் துறையிலிருந்தும் ஒதுக்கித் தள்ளுவதுதான் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் டக்டர் நாகநாதன் தெரிவித்துள்ளார். இவ்வித நோக்கம் பிரதமருக்கு இல்லாவிட்டால் இந்த உத்தரவையிட வேண்டிய காரணமென்ன? அரசாங்க மொழியை சிறிதளவாகினும் அதிகமாகப் பயன் படுத்த மட்டுமே அவரது எண்ணமாயின், அவர் சம்பந்தப்பட்ட எல்லாரையும், சிறப்பாக சிங்களவரல்லாதவர்களின் பிரதிநிதிகளையும் முன் கூட்டிக் கலந்து பேசியிருக்க வேண்டும். மொழிப் பிரச்சினையே, நாட்டில் அமைதியையும் சமூக நல்லுறவையும் குலைத்து, உயிர்ச் சேதங்களுக்கும் சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கும் காரணமாக இருந்திருப்பதைப் பிரதமர் உணராதிருக்க முடியாது. அப்படியிருக்க அவர் இப்போது இவ்வித மனப்பான்மை கொண்டிருப்பது நெருப்புடன் விளையாடுவது போலாகும்.

இந்த அரசாங்கத்தின் ஆகக் கூடிய ஆயுள் இன்னும் 17 மாதங்கள் தாம். அதற்கிடையே தீவிர கருத்து வேற்றுமைக்கு இடமான காரியங்களைச் செய்யப்போவதில்லை என்று காலஞ்சென்ற பண்டாரநாயக்கா, தமது மந்திரிசபையைத்திருத்தி அமைத்தபோது உறுதிமொழி கொடுத்தார். அந்த உறுதி மொழிப்படி புதிய பிரதமர் நடப்பதாயின், மிகவும் சங்கடப் படுத்திவிட்ட மொழிக் கொள்கையில் மேலும் கைவைக்கக் கூடாது. ஆனால் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டொரு மொழி வெறியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர் இப்படிச் செய்கிறாரா?

காரணம் எதுவாயினும், தமிழ்பேசும் மக்களுக்கு இந்த நிலை அதிக கவலையைத்தரக் கூடியதாகவுள்ளது. இந்த ஆபத்தைக் கூடுமானவரை தடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் பார்லிமெண்டிலுள்ள அவர்களது பிரதிநிதிகளையே சாரும். தங்களிடையே இதுவரை வேற்றுமைகள் என்ன இருந்திருப்பினும் சரி, இனி பொதுத் தேர்தல் நடைபெறும்வரையிலாவது, இங்கு தமிழருக்கு மேற்கொண்டு புதிய தீங்குகள் ஏற்படாமல் தடுக்க, அவர்களது பிரதிநிதிகள் ஒன்றுகூடி யோசித்து பிரமதரையோ, கவர்னர் ஜெனரலையோ கண்டு கூடுமான முயற்சிகளை எடுக்கவேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

## இந்தியா — சீன சமரசம்?

நேருஜிக்கு கடைசியாக சீனப் பிரதமர் சௌ என்லாய் எழுதியுள்ள கடிதம் சமரச நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக உள்ளது.

சீன—இந்திய எல்லைப் புறத்திலே ஆத்திரமூட்டத்தக்க பல சம்பவங்கள் ஏற்பட்டும், இந்தியப் பிரதமர் பொறுமையையும் நிதானத்தையும் இழக்கவில்லை. அந்நிய இராணுவ வல்லரசுகோஷ்டியில்சேரக்கண்டிப்பாக மறுத்து விட்டார். எதுவரினும் தமது நடு நிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார். இந்த உறுதியான மனப்பான்மை நல்ல பலனை அளிக்க ஆரம்பித்துள்ளதென்றே நம்புகிறோம்.

சீனப் பிரதமரின் கடிதத்தில் 1. கிழக்கே 'மக்மோகன்' எல்லைக் கோட்டிலிருந்து இருதரப்பினரும் சுமார் 12 மைல் தூரம் உடனடியாக விலகிச் செல்ல வேண்டும்; 2. மேற்கே 'லடாக்' பிரதேசத்தில் இப்போது இருதரப்பினரின் அதிகார எல்லையிலிருந்து 12 மைல் விலகிச் செல்லவேண்டும். 3. இரு தேசப் பிரதமர்களும் சந்தித்து எல்லைத் தகராறு இனி என்றென்றும் ஏற்படாமற் செய்யப் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டும் என்ற முக்கியமான மூன்று யோசனைகள் இருக்கின்றன.

கிழக்கில் 'மக்மோகன்' எல்லையை சீனப்பிரதமர் தற்காலிகமாகவேனும் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் மேற்கே காஷ்மீரத்தைச் சேர்ந்த வடக்கில் பல்லாயிரம் சதுர மைல் பிரதேசத்தை சீனத் துருப்புகள் ஆக்கிரமித்துள்ளதாக இந்தியா குற்றம் சுமத்துகையில், அந்தப் பகுதிகளை சீனர்களிடமே தற்காலிகமாக வேனும் விட்டுவைக்க சம்மதிப்பது, இந்தியாவுக்குச் சுலபமன்று. முதலில் இதுவே ஸ்திரமாகி விடவும் கூடும். ஆகவே இதுபற்றியும் நேரில் பேசி நியாயமான முடிவு செய்துகொள்ள இந்தியா நிபந்தனை கேட்கலாம்.

2500 மைல் நீளத்துக்கு மேற்பட்ட சீன—இந்திய எல்லை இதுவரை திட்டவட்டமாக வகுக்கப்பட்டதில்லை. இமயமலை பனிப்பிரதேசம். அது இனியும் எல்லை சரிவர நிர்ணயிக்கப் படாவிடில், அடிக்கடி தகராறுகள் ஏற்படக்கூடும். இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து, இனி நேபாளம், பூட்டான், சிக்கிம் முதலிய பிரதேசங்களும் பாதுகாக்கப்பட, இரு தேச பிரதமர்களும் நேரில் கலந்து பேசி ஒரு திட்டவட்டமான ஏற்பாட்டைச் செய்து கொள்ளவேண்டியது அவசியமாகும். புதிதாக விடுதலை அடைந்த இரு ஆசிய நாடுகளிலும் உள்ள 100 கோடி ஆசிய மக்களின் எதிர்கால நல்லுறவைக் கருதும், இரு பிரதமர்களும் சீக்கிரத்தில் நேரில் கலந்து பேசி, விட்டுக்கொடுத்து, ஒரு நிரந்தரமான சமரச ஏற்பாட்டுக்கு வருவரென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சிங்களத்தில் திருக்குறள்

தமிழ் மறையான திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்க்க ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம் முன்வந்திருப்பதற்காக அதை நாம் பாராட்டுகிறோம்.

உலகின் பல்வேறு மொழிகளிலும் தெய்வப் புலவர் எழுதிய இந் நூல் பெயர்க்கப்பட்டுளது. ஆனால், இதுவரை சிங்களத்திலே ஆக்கப்படவில்லை. இது பெரிய குறையாகும். இக்குறையை நீக்க, அரசாங்க ஆதரவு பெற்ற சாகித்திய மண்டலம் முன்வருவது, சிங்கள இலக்கியச் செல்வம் பெருகவும், இரு சமூகங்களிடையே நட்புறவு இலக்கியமூலம் பலப்படவும் வழி பிறக்கும்.

இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் பேசும் சமூகங்கள் இருப்பினும், இவர்களிடையே இதுவரை இலக்கிய உறவுகளில்லை. சிங்களத்தில் புதிய புதிய நூல்கள் பிரசுரமாகி அந்த இலக்கியம் வேகமாக வளர்ச்சியுற்று வருகின்றது. ஆனால், இங்கு வாழ்ந்துவரும் தமிழருக்கோ இதுபற்றி ஒன்றுமே தெரியாது. அதேபோலத் தமிழில் உள்ள புராதன இலக்கியச் செல்வங்களையும் சிங்கள மக்கள் அறிய வாய்ப்பில்லை. இரு சமூகங்களையும் முன்னிருந்த அரசாங்கம் பிரித்தாண்டதால் இரு சமூகங்களுக்குமிடையே இலக்கிய உறவுகள் வளர இடமில்லாமற் போயிற்று. ஒருவரை ஒருவர் அந்நியர்களாகவும், விரோதிகளாகவும் கூட கருதத் தலைப்பட்டனர். சிங்களம் மட்டும் கொள்கை, இந்தப் பிளவை மேலும் அதிகரித்துவிட்டது. இதனால் இரு சமூகங்களுக்கும், நாட்டுக்கும் ஏற்பட்ட பெருந் தீங்கை இங்கு நாம் விளக்க வேண்டியதில்லை.

திருக்குறளை சிங்களத்தில் மொழி பெயர்க்கவும், மகாவம்சம் என்ற சிங்கள நூலைத் தமிழில் ஆக்கவும், வருகிற மார்ச்சு மாதம், தமிழ், சிங்கள நூல்களடங்கிய புத்தகக் காட்சியை இம் மண்டலம் ஏற்படுத்துவதும் இரு சமூகத்தவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதிக்கவும், சமூகப் பிரிவுகள் நீங்கவும் வழிகாட்டும். இந்த ஆக்க முயற்சிக்கு பொதுமக்களின் ஆதரவும், சிறப்பாகத் தமிழரின் ஒத்துழைப்பும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

---

## ஐசனேவரின் ஆசிய விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி ஐசனேவர் ஆசிய நாடுகளுக்கு அடுத்த மாதம் விஜயம் செய்கின்றார். இந்தியாவில் அவர் நான்கு நாட்கள் தங்கி நிற்பார் என அவருடைய பிரயாணத் திட்டத்தின் மூலம் அறிகின்றோம். ஐசனேவரின் ஆசிய நாடுகள் சுற்றுப் பிரயாணத்தில் இலங்கை சேர்க்கப்படவில்லை. இங்குள்ள அரசியல் நிலைமை சீரடையாதபடியால் அவர் விஜயம் செய்யவில்லையெனக் கொள்வதா? காரணம் எதுவாயினும் இங்குள்ளவர்களுக்கு இது ஏமாற்றத்தை ஊட்டுவதாகும். எனினும் ஆசிய நாடுகளுக்கு அவர் செய்யும் விஜயம் இத்தீவுக்கும் மறைமுகமான நன்மையை அளிக்கக்கூடும்.

இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் விடுதலைக்கு அமெரிக்காவின் முயற்சி பெரிதும் காரணமாகவிருந்ததென்றே கூறவேண்டும். காலஞ்சென்ற ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இதற்காகத் தமது செல்வாக்கைப் பெரிதும் பயன்படுத்தினார்.

மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கு அரசியல் விடுதலை மட்டும் போதாது. பொருளாதார விடுதலையும் கிடைத்தேயாக வேண்டும். இத் துறையில் ஆசிய நாடுகளுக்குப் பலவகையிலும் உதவியளிக்கக் கூடிய அபார சக்தி அமெரிக்காவுக்கு உண்டு. யுத்தத்தை அகற்றி உலகிலே சமாதானத்தை நிலவச் செய்வதற்காக ருஷியப் பிரதமர் குருஷேவின் நட்பை ஐசனேவர் பலப்படுத்திக் கொள்ள முயலுகின்றார். இந்த நன் முயற்சி வெற்றி பெற வேண்டுமென்பதே ஆசிய நாடுகள் அனைத்தினதும் ஆவலாகும். ஆசிய நாடுகளுக்கு ஆயுத உதவி வேண்டியதில்லை. அந்நாடுகள் இன்று வேண்டி நிற்பது பொருளாதார உதவியேயாகும். இது மிகமிக அவசியமானது. ஆகவே, ஆயுதங்களுக்குச் செலவாகும் பணத்தைப் பொருளாதார உதவியாக மாற்ற ஐசனேவரின் ஆசிய விஜயம் துணை செய்யுமென நம்புகின்றோம்.

---

## நீர்மேல் எழுத்து!

யாழ்ப்பாணப் பட்டின மக்களின் குடி தண்ணீர் கஷ்டத்தை நீக்குவதற்கான ஒரு திட்டம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் வகுக்கப்பட்டது. பதவிக்கு வரும் மேயர்கள் அத்தனைபேரும் இத்திட்டத்தின் அவசியத்தைத் தாம் உணர்ந்திருப்பதாகவே கூறி வந்தனர்.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்திற் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணப் பகுதி கிராமச் சங்கங்கள் மாநாட்டுக்கு ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு மந்திரி எம். பி. டபிள்யூ. மெதிவாக்க தலைமை வகித்துப் பேசியபோதும் யாழ்ப்பாண மக்களின் தண்ணீர்க் கஷ்டத்தை நீக்குவதற்குத் தம்மாலான உதவியைச் செய்வதாக உறுதி கூறியிருந்தார். இப்படியே இங்கு வரும் மந்திரிமாரும் பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகளும் உறுதி மொழிகளை உதிர்த்து விட்டு நடை கட்டி விடுகின்றனரேயன்றி மக்களின் தண்ணீர்க் கஷ்டத்தை நீக்க இதுவரை எதையும் சாதிக்கவில்லை. வீடமைப்பு மந்திரி மெதிவாக்கவும் யாழ்ப்பாண மக்களின் தண்ணீர்க் கஷ்டங்களை நீக்குவதற்குத்தம்மாலானதைச் செய்வதாகக் கூறிச் சென்றுள்ளார். அவர் தம் கூற்றும் நீர்மேல் எழுத்தாகி விடக் கூடாதென்பதே எமது பிரார்த்தனையாகும்!

## நேருவா? ராஜாஜியா? யார் வேண்டும்?

"நீங்கள் நேரு கட்சியா? ராஜாஜி கட்சியா?" என்று நேற்று ஒரு நண்பர் வந்து கேட்டார். இதற்கு என்ன பதில் சொல்லுவதென்பதே எனக்குத் திகைப்பாக இருந்தது.

"உனக்கு அம்மா வேண்டுமா? அப்பா வேண்டுமா?" என்று சிலர் குழந்தைகளிடம் ஒரு சங்கடமான கேள்வி கேட்பதுண்டு. என்ன பதில் சொல்வதென்று புரியாமல் குழந்தை திகைக்கும். அதைப்போல்தான் என் நிலையுமிருந்தது.

* * *

நேருவுக்கு இன்று 70 வயதாகிறது. ராஜாஜிக்கு இப்போது எண்பது வயது. இந்த இருவருக்கும் இன்று கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கலாம். காங்கிரஸுக்கு மாறாக ராஜாஜி சுதந்திரக்கட்சியை ஆரம்பித்து, நேருஜியைப் பகிரங்கமாகத் தாக்கியும் பேசலாம்.

ஆனால், இருவரும் பாரத அன்னையின் அருந்தவப் புதல்வர்கள். பலமுறை ஸ்புடம் போட்டு எடுத்த சொக்கத் தங்கம்.

பாரத அன்னையின் கைவிலங்குகளை அகற்ற, காந்தி அடிகளின் தலைமையில் தியாகத் தீயிலே குதித்து, தங்கள் உயிரையும் இந்தியாவின் பாத கமலங்களில் அர்ப்பணஞ் செய்ய முன்வந்த வீரத் தலைவர்கள்.

நாடு சுதந்திரம் பெற்று 12 வருடங்களாகின்றன. அதற்கு முன் இத் தலைவர்களும் எண்ணிறந்த தேசபக்தர்களும் விடுதலைப்போரில் செய்த வீரத் தியாகங்களைப் பலர் இதற்கிடையே மறந்திருக்கலாம். சிலருக்குத் தெரியாது. அதனால் இப்போதைய வேற்றுமைகளை ஏதோ பிரமாதமாக நினைத்து, இருவரும் அரசியல் விரோதிகள் என்ற தப்பெண்ணம் கொள்ளுவது சரியாகாது.

* * *

நேருவிடம் ராஜாஜிக்கும், ராஜாஜியிடம் நேருவுக்கும் அதிக அன்பும் மரியாதையுமுண்டு. இதை இருவரும் பலமுறையும் வாய்விட்டுக் கூறியிருக்கிறார்கள்.

நேருவுடன் கலந்து பேசி, அவர் சம்மதத்தின்மீதே ராஜாஜி ஆங்கிலமும் அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்ற கிளர்ச்சியையும், புதிய கட்சியையும்கூட ஆரம்பித்திருக்கிறாரோ என்று எனக்கு ஒரு சந்தேகமுண்டு.

ஏன் என்று கேட்கிறீர்களா? இலங்கையில் சிங்கள மொழி வெறியர்கள் இருப்பதுபோல, வட இந்தியாவில் இந்தி வெறியர்கள் பலருண்டு. அவர்களால் நேருவுக்கு ஏற்படும் மண்டையிடி கொஞ்சமன்று.

மேலும் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தீவிர இடதுசாரிகளின் செல்வாக்கு வரவர அதிகரித்தது. அது ஒருபக்கமாக சாய்ந்துவிட்டால், காங்ரஸும் இந்தியாவும் மத்திய வழியைப் பின்பற்ற முடியாது போகும்.

தவிர அரசாங்க உத்தரவுகளால் பாதிக்கப்பட்ட சில சுயநல சக்திகளும், பணமூட்டைகளும், கோணல் வழிகளில் சென்று, நாட்டு நலத்திற்கு மாறான தீய சக்திகளுக்கு ஆக்கம் கொடுக்கக்கூடிய ஆபத்துமுண்டு.

* * *

இதைத் தவிர்க்கப் பொறுப்பானவரும், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான ராஜாஜி போன்ற ஒருவரின் தலைமையில் பலமான எதிர்க்கட்சி உருவாகுமாயின்

[9ஆம் பக்கம் பார்க்க]

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

"பெரிய கடையிலே ஒரு காய் பிஞ்சும் இல்லை. கீரை கத்தரிகூட நெருப்புவிலை" என்று யாழ்ப்பாண மக்கள் இந்நாட்களில் குறைபட்டுக் கொள்ளுகின்றனர். ஐப்பசி மாதத்திலேயே இப்படியான புகார் கிளம்பிவிட்டதென்றால் கார்த்திகை மார்கழி மாதங்களில் காய் கறி நிலைமை எவ்வளவு தூரம் மோசமடையுமென்பதை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் பதைக்கின்றது.

### காரணம் என்ன?

இம்மாதிரியான ஒரு நிலைமை இப்போது சில மாதங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்துவருகின்றது. மலைநாட்டுப் பகுதிகளிலிருந்து காய் கறி வகைகள் லொறிகள் மூலம் வந்து குவிந்தாலும் அவையனைத்தும் உடனே விலையாகி விடுகின்றன. இதற்குக் காரணம் சென்ற வருடம் தென்னிலங்கையில் நடைபெற்ற வகுப்புக் கலவரமென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. கொழும்பிலும் வெளி இடங்களிலும் வாழ்ந்து வந்தோர் பலர் 'தப்பினேம் தப்பினேம்' என்று சொல்லி யாழ்ப்பாணம் வந்து குடியேறியிருக்கின்றனர்! எனவே, பெண்களும் பிள்ளைகளும் இப்போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். புருஷர்மார் கொழும்பிலும் பிற இடங்களிலும் வாடகைக்கு ஓர் அறையை எடுத்துக் கொண்டு உத்தியோகம் பார்த்து வருகின்றனர். தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்நிலை யாழ்ப்பாணக் குடிசனப் பெருக்கத்துக்குக் காரணமாகியதோடு கடைகளில் பொருள்கள் வாங்குவோரின் தொகையையும் அதிகரிக்கச் செய்துள்ளது. ஆகவேதான், யாழ்ப்பாணப் பட்டினத்தில் மட்டுமல்ல, ஏனைய பகுதிகளிலும் நாளாந்த தேவைக்கான பொருள்கள் யானை விலை குதிரை விலையாக நாளிலும் பொழுதிலும் ஏறிக்கொண்டு வருகின்றன.

கையிலே நிறையப் பணம் வைத்துச் செலவு செய்து பழகியவர்களுக்கு யாழ்ப்பாணம் எந்த மூலைக்கு! அவர்கள் கடைக்காரர் கேட்கும் பணத்தை எடுத்து விசுக்கி விட்டுக் காரிலே பறந்து விடுகின்றனர். சொல்லுகின்ற விலையில் ஒன்றைப் பாதியைக் குறைத்து வாங்கிப் பழகிய 'நம் நாட்டார்' புதிதாகக் கிளம்பியுள்ள பெருங் கூட்டத்தாருடன் போட்டி போட முடியாது. வெறுங் கையுடன் வீடு திரும்புவதும் உண்டு. இருந்தாற் போலிருந்து ஏற்பட்டுள்ள இந்த நிலைமை யாழ்ப்பாணப் பொது மக்களின் பொருளாதாரத்தில் ஒரு சரிவை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனால் சாதாரண மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திக்கு முக்குப் படுகின்றனர். இந்த நிலைமை இப்படியே நீடித்துச் செல்லுமானால் யாழ்ப்பாணப்பகுதி மக்களின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப் படக்கூடும்.

### வர்த்தகருக்கு யோகம்

யாழ்ப்பாணத்தில் இப்போது எல்லாம் புத்தம்புதிய கடைகள் பொலிந்து விளங்குவதையும் காண்கின்றோம். பல வருடகாலம் யாழ்ப்பாணப் பக்கமே திரும்பிப் பாராதவர்கள் இங்கு அடி எடுத்து வைப்பார்களாயின், பார்க்குமிடம் எங்கும் வியாபார நிலையங்கள் நீக்கமற நிற்பதைக் கண்டு பிரமித்துப் போய்விடுவார்கள். கட்டடங்கள் கிளம்ப முன்னரே முற்பணங் கட்டித் தமக்கென ஒரு கடையைப் பதிவு செய்து கொள்வோரின் ஆர்வம்தான் என்ன! பாவம்! இவர்கள் நாளைக்கு என்ன நடக்கப்போகின்றதென்பதை அறியமாட்டார்கள். இங்கு நிரந்தரமின்றி வாழ்க்கை நடத்துவோர் கொழும்புக்கும் பிறவிடங்களுக்கும் திரும்பிவிடுவார்களாயின் கடைகளை மூடவேண்டியதுதான். இருந்தபோதிலும் அரசாங்க சேவையே உயிர் என நம்பியிருந்த யாழ்ப்பாணத்தவர்கள் வியாபாரத்துறையில் ஆர்வம் காட்டி வருவது வரவேற்கத்தக்கதே. இந்த அழகில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளைகளே வேண்டுமெனப் பிடிவாதம் செய்யும் பெண்கள், இனி வணிகப் பிரமுகர்களுக்கு மாலையிட்டு அவர்களின் பணிவிடைகளைச் செய்ய மனங்கொள்வார்களாயின் அவர்களின் தந்தையர்களுக்கு திருமணப் பிரச்சினையே குறைந்துவிடக் கூடும்!

## நேருவா? ராஜாஜியா?

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனால் காங்கிரஸுக்கு மாறுபட்ட கருத்துள்ளவர்களை அதன்கீழ் ஒன்றுதிரட்டவும், காங்கிரஸையும் அவசரத்தில் தவறுகள் செய்துவிடாமல் தடுக்கவும் அக் கட்சி உதவலாம்.

இதேசமயம் வெறி மொழி முதலிய உபத்திரவங்களும் நேருவுக்குக் குறையும். இது காரணமாக ராஜாஜியின் கட்சிக்கு நேருவின் மறைமுகமான ஆசி இருக்கக் காரணமுண்டல்லவா?

இது எப்படியாயினும் சரி இந்தியாவுக்கு நேரு, ராஜாஜி இவ்விருவரினது சேவையும் வேண்டும். இருவரும் நீடூழி வாழ்க என்றுதான் என் வாயும் உள்ளமும் வாழ்த்தும். உங்கள் கருத்து என்னவோ?

—ஐயாறன்.

## பிரதமர் தகநாயக்கா புத்த பிக்குவாகலாம்?

—நமது நிருபர்—

பிரதமர் தகநாயக்கா, தமக்கு இனி அரசியல் ஆசைகள் எதுவுமில்லை என்றும், இப்போது கிடைத்துள்ள அரசியல் பொறுப்பை, கூடுமானவரை நல்லபடியாக நிறைவேற்றி, எதிர்காலத்தில் துறவு பூண்டு புத்தபிக்குஆகிவிடவேண்டுமென்று எண்ணம் கொண்டிருப்பதாகவும் சென்றவாரம் சில நண்பர்களிடம் அவர் தெரிவித்ததாக அறிகிறேன்.

பிரதமராவதற்கு முன்னால் அரசியல் துறையிலே யாரையும் புண்படுத்தும்படி பேசியிருப்பின் அதையெல்லாம் மறந்து அரசியலில் கூடுமானவரை எல்லாருக்கும் நன்மை செய்து நாட்டை நல்லமுறையில் முன்னேற்றுவதற்குத் தம்மாலான பணியைச் செய்ய வேண்டுமென்பதே தமது நோக்கமென்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

## யாழ்ப்பாணத்துக்கு புதிய அரசாங்க காரியாலயம்

### வீடமைப்பு மந்திரியிடம் குமாஸ்தாக்கள் வேண்டுகோள்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம்.

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையைச் சேர்ந்த ஒரு தூது கோஷ்டி சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. பி. டயிள்யூ மெதிவக்கேயையும் அவருடைய நிரந்தரக் காரியதரிசி திரு. வி. சி. ஜெயசூரியாவையும் பேட்டிகண்டு, யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய செக்கரடேறியட் கட்டடம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். பேட்டி நடந்தபோது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவும் பிரசன்னமாயிருந்தார்.

தாங்கள் இதுசம்பந்தமாகப் பலதடவை அரசாங்கத்துக்கு ஞாபகமூட்டியும் இதுவரை ஒன்றும் நடைபெறவில்லையென்று அவர்கள் முறையிட்டனர். யாழ்ப்பாணத்தில் வேலை பார்க்கும் அரசாங்க ஊழியர்களுக்குப் போதிய குடியிருப்பு வசதிகள் இல்லையென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்கள்.

மந்திரியவர்கள் பதிலளிக்கையில் வீடமைப்பு சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபனங்களே வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடும் ஒரு திட்டத்தைத் தாம் தயாரிப்பதாகவும், இத் திட்டத்தின்படி யாழ்ப்பாண நகர சபை கட்டும் வீடுகளில் 40 வீதத்தை அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும்படி உத்தரவிடுவாரென்றும் உறுதி கூறினர். புதிய செக்கரடேறியட் சம்பந்தமாகவும் தாம் கட்டாயம் மந்திரிசபையினருடன் பேசி ஏதாவதொரு வழியில் நன்மைபுரிவதாகவும் அவர் கூறினர்.

## இந்திய தத்துவத்தில் பௌத்தம் வகிக்குமிடம்

### வித்தியாலயத்தில் விரிவுரை

யாழ்ப்பாணம் சரித்திர ஆராய்ச்சி கழகத்தின் ஆதரவில் இன்று (14-11-59) பிற்பகல் 4 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் கல்வி அமைச்சின் உதவி காரியதரிசியும், வித்தியோதய பல்கலைக் கழகத்தின் நிர்வாக தலைவருமாகிய டக்டர் ஆனந்த குறுகே மேற்கண்ட பொருள் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்துவார்.

## தமிழரசுத் தலைவர்களை தகநாயக்கா அழைத்துப் பேசினர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கத்துக்கும் அவ்வளவு நல்ல உறவு இல்லையென்றும் கூறப்படுகிறது.

### யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்ப இசைக் கல்லூரி

யாழ்ப்பாணத்திலே முதல் தரமான தொழில் நுட்பக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்றும், இசைக் கல்லூரியையும் அங்கு ஆரம்பிக்க வேண்டுமென்றும், "ஸ்ரீ" பஸ் பிரச்சினையைத் தீர்த்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் புதிய பஸ்ஸுகளை அனுப்ப வேண்டுமென்றும், இரு மாகாணங்களிலும் தனிச் சிங்களத்தை அமுலுக்குக் கொண்டு வராமல், தமிழுக்கு முக்கிய ஸ்தானம் அளிக்க வேண்டுமென்றும் தமிழரசுத் தலைவர்கள் பிரதமரிடம் கேட்டதாகத் தெரிகிறது.

இவ்விஷயங்களைப் பற்றி பிரதமர் சாதகமான பதில் அளித்ததாயும் கூடுமானவரை தாம் கவனித்து ஆவன செய்ய முயல்வதாகவும் கூறியதாகத் தெரிகிறது. முன்னர் கல்வி மந்திரியாக இருந்தபோது தாம் நேரடியாக தொழில் நுட்பக் கல்லூரி முதலிய விஷயமாக உத்தரவிட முடிந்ததென்றும், ஆனல் இப்போது தாம் மொழிச் சட்டத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பும் பெற்றுள்ளதால், இரண்டுக்கும் முரண் இல்லாமல் காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளதென்றும் தெரிவித்தார்.

என்றாலும் யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்ப கல்லூரி அமைப்பதில் சற்றே தாமத மேற்படினும், தமிழ் மாணவர்களுக்கு சங்கடமில்லாதபடி, கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் மொழி விஷயமாக வசதி செய்வதாகவும் பிரதமர் உறுதி கூறினர். ஆனல் அக் கல்லூரியில் சில அதிகாரிகள் அனுதாபமற்ற மனப்பான்மை கொண்டிருப்பதாக எடுத்துக் கூறியதற்கு, பிரதமர் தாம் கவனிப்பதாகச் சொன்னர்.

**கூடிய சீக்கிரத்தில் ஆங்கில எழுத்தைக் கொண்ட புதிய பஸ்ஸுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓட ஆரம்பிக்கலாம்.**

### வர்த்தக ஸ்தாபனங்களும் சிங்கள மொழியும்

வர்த்தக ஸ்தாபனங்கள் அரசாங்கத்துடன் சிங்களத்திலேயே கடிதப் போக்குவரத்து நடாத்த வேண்டுமென்று பிரதமர் உத்தரவிட்டுள்ளதைப்பற்றி விசாரித்தேன்.

**அந்த உத்தரவு அமுலுக்கு வராதென்றும், அதை சிங்கள வர்த்தகர்களே எதிர்ப்பதாயும், அது ஒரு கண் துடைப்பு உத்தரவே என்றும், அரசாங்க வட்டாரங்களில் கூடக் கூறப்படுகிறதாம்.**

அடுத்த பொதுத் தேர்தலில் புரட்சி வாதசமசமாஜக் கட்சியினர் மொழி, மதம் இவைகளையே முக்கிய கருவிகளாகக் கொண்டு பிரசாரம் செய்வரென்று அஞ்சப்படுவதால், அரசாங்கக் கட்சி இவ் விஷயமாக உஷாராக இருக்க வேண்டியுள்ளதாம். மேலும் இரண்டொரு தீவிரவாத எம். பிக்களையும் திருப்தி செய்ய வேண்டியிருப்பதாயும், இவையெல்லாம் அரசியல் விளையாட்டாகுமேயன்றி, தமிழருக்குத் தீங்கு எதுவும் இதனால் நேரிடாதென்றும் சமாதானம் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்

நிதிமந்திரி ஸ்டான்லி சொய்ஸா மீதும் வர்த்தக மந்திரி ஆர். ஜி மீதும் எதிர்க் கட்சியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி ஆதரிக்காதென்றும், ஆனல் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால்அதைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்குமென்றும் கூறப்படுகிறது.

பார்லிமெண்ட் எதிர்க் கட்சிக் கூட்டத்தில், தமிழரசுக் கட்சி எம். பிக்கள் இதைத் தெளிவுபடுத்தினர். பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸிட்னிசொய்ஸாவை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற பிரேரணையையும் அவர்கள் ஆதரிக்கவில்லை. மந்திரியின் அனுமதியின் மீதே அவர் தன் கௌரத்தைக் காத்துக் கொள்ள அந்த அறிக்கையை வெளியிட நேரிட்டதென்றும், அதில் ஏதாவது தவறு இருப்பின்,பப்ளிக் சேர்விஸ் கொமிஷனின் தீர்ப்புக்கு இவ்விஷயத்தை விட்டுவிட வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சி கருதுவதாகத் தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தமிழரசுக்கட்சியின் ஆதரவில்லாவிடில், அதற்குச் சாதகமாக 35 வாக்குக்களே கிடைக்கும். அரசாங்கக் கட்சியிலும் சிலர் நிதி மந்திரியை எதிர்த்தனரெனினும் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் தலையீடு காரணமாக அந்த எதிர்ப்பு இப்போது குறைந்துள்ளது. ஆகவே நிதிமந்திரி மீதோ, வர்த்தக உணவு மந்திரி மீதோ கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறுவது சாத்தியமில்லை.

இவ்வாரம் நிதி மந்திரி ஸ்டான்லி, ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்புகிறர். சில மந்திரிகளே தம்மை எதிர்த்துள்ளதைக் கண்டு அவருக்கு மனம் புண்பட்டுள்ளதாக அங்கிருந்து திரும்பிய திரு. ஆர். ஈ. ஜயதிலக்கா தெரிவித்தார்.

ஆகவே அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறு விட்டாலும், அவர் சீக்கிரத்தில் தாமாக விலகி பரதேசம் செல்லலாமென்றும் வெளிநாட்டுத் தூதுவர் போன்ற ஏதாவதொரு பதவியை ஏற்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

## சாவகச்சேரி நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம்

சாவகச்சேரி நகரசுத்தித் தொழிலாளரின்வேலைநிறுத்தம் சென்ற ஒன்பது நாட்களாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. இவ் வேலைநிறுத்தத்தை ஒரு சமரசமுடிவுக்குக் கொண்டுவர, பொதுமக்கள் பட்டினசங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தியும் அது எவ்வித பயனையும் அளிக்கவில்லை. 24 தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்திருப்பதால் இது பொதுமக்களைப் பெரிதும் பாதித்துவருகின்றது.

## புதிய உத்தரவால் வர்த்தக ஸ்தாபனங்கள் கவலை

### நியமன எம். பி.க்களின் ஆதரவை அரசாங்கம் இழக்குமா ?

கொழும்பிலுள்ள பெரிய வர்த்தக ஸ்தாபனங்களான ஹேலீஸ், கோல்ட் ஸ்ரோஸ் இரண்டையும் அரசாங்கம் கட்டுப்பாடு செய்து, அங்குள்ள தொழிலாளர்எவரையும் வேலை நீக்கம் செய்யப்படாதென்று அரசாங்கச் சட்டப்படி போட்டுள்ள உத்தரவு, பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் புதிய கவலை அளித்துள்ளது.

தொழில் மந்திரிக்கு இதனல் என்றுமில்லாத சர்வாதிகாரம் கிடைப்பதாயும், யாரை நியமிக்கவேண்டும் நீக்கவேண்டும் என்ற அதிகாரம் வெளியாருக்கு இருந்தால், தொழிற்சாலைகளில் ஒழுங்கு இல்லாமற்போய்விடுமென்று அஞ்சப்படுகிறது.

முதலாளிகளின் பிரதிநிதிகள் பார்லிமெண்டில் நியமன எம். பிக்களாக இருப்பதால், அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்த உத்தரவை மாற்ருவிடில் தாங்கள் இனி அரசாங்கத்தை ஆதரிக்க முடியாதென்று எச்சரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தலைமை ஆசிரியர் 'கொப்பி' யடித்தார்!

இந்தியாவிலுள்ள அலிகார் பல்கலைக்கழகத்தினர், ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியரைத் தமது பரீட்சைகளில் இரண்டு வருடத்திற்குக் கலந்துகொள்ளக் கூடாதென்ற தடைஉத்தரவை விதித்துள்ளது. இதற்குக் காரணம், ஒக்டோபரில் நடைபெற்ற பி. ஏ. பரீட்சையில், இத்தலைமை ஆசிரியர் 'கொப்பி'யடிப்பது முதலிய ஒழுங்கற்ற முறைகளைக் கையாண்டதேயாகும்.

மாதர் பகுதி

கர்ப்பிணிகள் ஏழாவது எட்டாவது மாதங்களுக்குப் பின் எவ்வித உடைகளை அணிய வேண்டுமென்பதை டக்டரின் தங்கைக்கு அவரது மனைவி இக் கடிதத்தில் எழுதுகின்றார். இது ஆறுவது கடிதமாகும்.

# கர்ப்பிணிகள் அணியவேண்டிய உடையும் உடம்பைக் கவனிக்க வேண்டிய முறையும்

— நந்தினி —

அன்புள்ள நந்தினி,

உனது அண்ணா உனக்குக் கடிதம் எழுதும் பொறுப்பை இந்தமுறை என்னிடம் ஒப்படைத்து விட்டார். அவர் ஏதோ உத்தியோக அலுவலாகக் கண்டிக்குப் போயிருக்கின்றார். அவரைப் போல் அறிவுரைகளை எழுத என்னால் முடியுமா? அதனால் தான் நான் அத்தகைய கடிதங்களை எழுதுவதில்லை. நீ எழுதும் கடிதங்களை உன் அண்ணாவிடம் கொடுக்கமுன் நான்தான் படிப்பேன். அதில் நான் உன் செல்வ முகத்தைக் கண்டு மகிழ்வேன்.

கண்ணே, நான் உனக்குத் தீபாவளிக்கு அனுப்பிய உடைகள் பிடித்தனவா? 'கல்யாணப் பரிசு'ச் சேலை மிகவும் அழகாக இருக்கிறதல்லவா? அதை நான்தான் தேர்ந்தெடுத்தேன். நான் அனுப்பிய ரவிக்கையும் 'நைட் கவுணை'யும் கண்டதும் நீ சிரித்திருப்பாய். அண்ணி தையற்கலையை முற்றாக மறந்து விட்டாளோ என்று நீ சந்தேகித்திருந்தாற் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன். ரவிக்கையும் நைட் கவுனும் உனது அண்ணாவின் கண்காணிப்பில் நான் தைத்த உடைகள். கர்ப்பிணிகள் ஏழாம் எட்டாம் மாதங்களுக்குப் பின் உடுக்கும் ஆடைகள் தளர்த்தியாக இருக்க வேண்டுமாம். ஒரு பெண் கர்ப்பிணியாக இருக்கும்போது அவளின் உடம்பு சற்றுப் பெருத்திருக்கும். ஆகையால் சாதாரண நேரங்களில் நாம் அணிந்துகொள்ளும் ரவிக்கை 'பெற்றிக்கோட்' முதலியன கர்ப்பமுற்றிருக்கும் போது நமது உறுப்புக்களை இறுக்குகின்றன. இப்படி இறுக்கமான உடைகளை உடுத்திருப்பது நல்லதல்ல. அதனாலேயே உனக்கு உனது டாக்டர் அண்ணா தீபாவளிப் பரிசாக அனுப்பிய நைட் கவுண் அந்தக் கோலம் எடுத்தது. அதை ஒரே நேரத்தில் நானும் நீயும் போட்டுக் கொள்ளலாம்! நீ இந்த உடைகளைப் பத்திரமாக வைத்திருந்தால் இனிமேல் கர்ப்பவதியாகும் காலங்களிலும் உபயோகிக்க முடியும் என்று உன் அண்ணா யோசனை கூறினார். நான்வேடிக்கையாக எழுதினாலும் கர்ப்பிணிகளின் உடையைப்பற்றி அவர் கூறுவது உண்மை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உனக்கு நல்லதைத் தானே அவர் கூறுவார்.

வேலைக்காரி மெனிக்கா தனது வீட்டுக்குப் போயிருந்தாள். இன்னும் வரவில்லை. அவளின் அக்காளுக்கு மார்பில் ஒப்பரேசன் செய்தார்களாம். பாவம், அவள் தனது மூன்று மாதக் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறாள். கர்ப்பம் தரித்திருக்கும் போது மார்பை நல்ல முறையில் கவனியாதிருப்பின் இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று உனது அண்ணா சொல்லுகிறார். கர்ப்ப காலத்தில் குளிக்கும்போது மார்புப் பகுதியை நன்றாகக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். முலைக்காம்புகளைத் தினமும் கைவிரல்களால் இழுத்து விடுவது நல்லது. அல்லாவிடின் பிரசவத்தின்பின் குழந்தைக்குப் பாலூட்டுவது கஷ்டமாக இருக்கும். முலைக்காம்புகளுக்கு சிறிது எண்ணெய் தடவினால், காம்புகள் வெடித்துப் புண் உண்டாவதைத் தவிர்க்க முடியும். இந்த உண்மைகளை மெனிக்காவின் அக்காவுக்கு யாராவது கூறியிருந்தால் அவள் இப்போது வேதனைப் படுவாளா? ஒருபோதுமில்லை. நந்தினி, உன் சினேகிதிகளுக்கு நீ இதைத் தெரிவிப்பது அவசியமாகும்.

தீபாவளிப் பண்டிகை ஒருவாறு முடிந்து விட்டது. நல்லவேளையாக நித்தியும் சரசுவும் வந்து எனக்கு உதவியாக இருந்தார்கள். சரசு மிகவும் பருத்து விட்டாள். முதலில் கண்டதும் நான் என் கண்களையே நம்ப முடியவில்லை. 'என்னடி சரசு, வவனியாவில் உங்கள் வயலில் இம்முறை நல்ல விளைச்சலா?' என்று வேடிக்கையாகக் கேட்டேன். அவள் கூச்சப்பட்டுத் தந்த விடை வேடிக்கையாக இல்லை. அவள் இரண்டு மாதக் கர்ப்பிணியாம்! நன்றாக இருக்கிறது அவள் கதை. கர்ப்பிணியானால் இப்படி ஒரு அளவில்

[15 ஆம் பக்கம் பார்க்க]


நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை

நெச்சி

தையல் மெஷின் செய்துகொடுக்கும்.

NECCHI




உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெச்சி தான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெச்சி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்து விடுகிறது நெச்சி தையல் மெஷின்.

சாதாரண தையல்மெஷினில் வேலை செய்வதனால் ஏற்படும் களைப்போ, சோர்வோ நெச்சி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டா.

நெச்சி சூப்பர் நோவா ஓட்டமெட்டிக்கா தையல் மெஷின், பலவித வர்ணப் பூ வேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.

நெச்சி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825 -தொடக்கம்.

நெச்சி எஸ்பெரியா ரூ.375 -தொடக்கம்.

நெச்சி மிரெல்லா (மின்சாரத் தாலும் கையினாலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)


கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். டரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.



விபரங்களுக்கு

றிச்சார்ட் பீரீஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753


## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 21-11-59 க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினால் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

★ சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(14-11-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்........................................................

விலாசம்..............................................

.................................

.................................

கையொப்பம்

பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

## உங்களுக்குத் தெரியுமா?




3283, 1621, 2047, 1705, 467, 1800. இந்த எண்களின் பொருள் யாதெனில் 'இது, சொற்குறிப்பெழுத்து என்னும் புது மொழியாகும்' என்பதே. பல்வேறு மொழிகளிலுமுள்ள சொற்களுக்குப் பதில், எண்களை உபயோகிக்கும் இம்முறையானது, மொழிபெயர்ப்புத் துறைக்குப் பெரும் உதவியளிப்பதாகும். டென்மார்க்கைச் சேர்ந்த ஹான்ஸ் பினெம் என்பவராலேயே சொற்குறிப்பு எழுத்து முறைவிருத்தி செய்யப்பட்டது.



அண்மையில் இங்கிலாந்திலுள்ள ஒரு பெரிய ரேடியோ-தொலைநோக்கி நிலையத்திலிருந்து, இசை, மற்றும் நிகழ்ச்சிகள் சந்திரமண்டலத்தை நோக்கிப் பரீட்சார்த்தமாக ஒலிபரப்பப்பட்டன. இந்த ஒலிகள் அங்கிருந்து திரும்பவும் வந்து, பொஸ்டன் என்னும் இடத்தில் மோதின. சந்திர மண்டலம் ஒலி வாங்கும் ஒரு நிலையமாக உபயோகிக்கப்பட்டமை இதுவே முதல்தடவையாகும். இப்பரீட்சை ஓரளவு வெற்றி அளித்துள்ளதென்றும், சந்திர மண்டலத்திற்கு ஒலிபரப்புதல் சாத்தியமென்பதை நிரூபித்து விட்டதென்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.



அவுஸ்திரேலியாவில் ஒரு வகை எறும்பினம் உண்டு. இந்த எறும்புகளுக்கு, மற்ற எறும்புகள், தேனைச் சேமித்து வைப்பதன் பொருட்டு, அதை இவற்றுக்கு அளிக்கின்றன. இந்த எறும்புகள் தமது அடிவயிற்றில் தேனைச் சேகரித்து வைத்துக்கொள்ளும். இதனால், அவற்றின் அடிவயிற்றின் குறுக்களவு அரை அங்குலம் வீங்கும். கஷ்டகாலங்களில், இத் 'தேன் எறும்பு'களை, ஊர்வாசிகள் சிலர் மிகவும் விருப்பத்துடன் சாப்பிடுகிறார்கள்.

# சிறுவர் பகுதி

## நண்பன் யார்?

[எஸ். ஆர். யேசுதாசன் — ப. எண். 95]

உங்கள் சிந்தனைக்குதிரையைத் தட்டி விடுங்கள். உங்கள் வாழ்க்கையில் சந்தித்த நண்பர்களைப்பற்றிச் சிந்தியுங்கள். உண்மை நண்பன் யார் என்பது நன்கு புலப்படும்.

'அன்பான நண்பனை ஆபத்தில் அறி' என்பார்கள். தன் நண்பனுக்கு வரும் எவ்வித ஆபத்தையும் எதிர்த்து இறுதி மூச்சுவரை போராடுபவனே உண்மை நண்பன். அவன், துன்பச்சுழலில் சிக்கித் தவிக்கும் நண்பனைக் கைவிடாது அவனது துன்பத்தைத் துடைக்கிறான். தவறான வழிகளில் பிரவேசிக்கும்போது நல்வழிப்படுத்துகிறான். உள்ளத்திலே கள்ளம், கபடமின்றி ஏமாற்றும் குணமின்றி நடந்து கொள்கிறான். அவன்தான் உண்மை நண்பன். உயர்வான பண்போடுகூடிய உற்ற நண்பன்.

ஆனால் சிலர் நண்பன் என்று கூறிக்கொண்டு எதையாவது நம்மிடம் எதிர்பார்த்திருப்பார்கள். விஷயம் முடிந்ததும் நண்பன் என்பதையும் மறந்து நான் யாரோ நீ யாரோ என்ற நிலைமையில் வந்துவிடும். இவர்களைப் பொறுத்த அளவில் நாம் மிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

ஒருவரின் குணம், நடை, உடை, பாவனைகளைக் கொண்டே நாம் அவரிடம் நட்புரிமையை எதிர்பார்க்க வேண்டும். இல்லையேல் அவர்களால் நாம் துன்பமடைய வேண்டி நேரிடும். நண்பன் என்ற முறையில் நாம்ஆபத்தை விலைக்கு வாங்கக்கூடாது. கண்டகண்டவர்களை யெல்லாம் நண்பர்கள் என்று எண்ணி நடந்தால் நம் உயிருக்கே ஆபத்து நேர்ந்துவிடும்.

நமது நண்பர்களில்தான் எமது பிற்கால வாழ்வின் ஒழுக்கம் தங்கியுள்ளது. ஆகையால் நாம் எமக்கு உதவக்கூடிய நல்ல குணம் கொண்டவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும்.

எமது வாழ்க்கையை நல்ல பாதையில் அமைக்க நல்ல நண்பர்கள் தேவை.

எமது வாழ்க்கையை நாம் நல்லமுறையில் அமைத்துக் கொண்டால்தான் எம் நாட்டுக்கும், நம் தாய்தந்தையர்களுக்கும் நாம் பெருமை தேடிக் கொடுப்பவர்களாவோம்.

---

செல்வக் குழந்தைகளே,

வணக்கம்.

உங்களில் அநேகரின் கடிதங்கள் எனக்கு மகிழ்ச்சியூட்டி வருகின்றன. ஆனால் விலாசங்களை விளக்கமாக எழுதத் தவறிவிடுகின்றீர்கள். பெயரை எழுதி கொழும்பு என்றோ, மட்டக்களப்பு என்றோ எழுதிவிட்டால் மாத்திரம் போதாது.

விலாசத்தை விபரமாகத் தமிழில் எழுதப் பழகிக் கொள்ளுங்கள்.

சின்னமாமா

---

## குழந்தையும் பாடலும்

[ந. சரோஜினிதேவி — ப. எண். 39]

பாட்டு, கதை என்றாலே குழந்தைகளுக்கு அலாதி விருப்பம். ராஜா ராணிகள் தொடக்கம் நாய் பூனைகள்வரை அவர்களுடைய கதைகளின் கதா பாத்திரங்களாக அமைந்துவிடும். பாடங்களிலும் முன் கூறிய விதம்தான். சிறு கை நீட்டித் தள்ளாடி நடக்கும் சிறு குழந்தை கூட இனிய பாடல்களை இரசிக்கிறது. குழந்தைக்குப் பழக்கமான சொற்களே குழந்தைப்பாடல்களில் இருப்பதைக்காணலாம். கடுமையான சொற்கள் இல்லாத இனிய பாடல்களையே குழந்தைகள் விரும்பிப்படிப்பார்கள்.

சந்திரனைக் குழந்தைக்குக் காட்டிச் சோறு கொடுக்கும் தாயிடம் அக்குழந்தை சந்திரனைப் பிடித்துத் தரும்படி கேட்கின்றது. உடனே தாய் "நிலா நிலா வா வா" என்று கைகளை அசைத்துப் பாடுகிறாள். குழந்தையும் சிரித்துச் சிரித்துப் பாட்டைப்பாடுகின்றது. இப்பொழுது முன்னிருந்த பிடிவாதமெல்லாம் மறைந்துபோகின்றது. இதிலிருந்து நாம் அறிவதாவது குழந்தையின் உள்ளத்தை அந்தத் தெள்ளிய பாடல் கவர்ந்துவிட்டது என்பதாகும்.

குழந்தை, பேசும் பருவத்தில் இனிமையான ஓசையுடைய பாடல்களையே விரும்புகின்றது. கிளி, குருவி முதலிய பறவைகளும், ஆடு, மாடு, குதிரை முதலிய மிருகங்களும். குழந்தைப் பாடல்களில் அநேகமாக இடம் பெறுகின்றன. குழந்தைகள் ஆடும் பல்வேறு விதமான ஆட்டங்களைப் பற்றியும் பாடல்கள் உண்டு. எங்கள் நாட்டில் குழந்தைகளுக்கான பல பாடல்கள் உள. இவற்றை எல்லாம் சேர்த்துப் புத்தகமாக வெளியிடுவது நல்லது.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

591. க. ஆனந்தராஜா, 5, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
592. சு. பழனிச்சாமி, 90, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
593. மு. செந்தமிழ்ச்செல்வம், மில் ஒழுங்கை, சங்கானை.
594. ச. நவரத்தினம், குருக்கள் மடம், மட்டக்களப்பு.
595. இ. மகேஸ்வரன், பிரே குரூப், மடுல்கல.
596. வீ. சங்கரப்பிள்ளை, அசோகா பாடசாலை, எல்கடுவ.
597. செ. பத்மஜானி, வேம்படி பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம்.
598. எஸ். சண்முகநாதன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (மாணவர் விடுதி) யாழ்ப்பாணம்.
599. ச. சிவராஜலிங்கம், மெதடிஸ்ட் மத்தியகல்லூரி, மட்டக்களப்பு.
600. ச. தெட்சணாமூர்த்தி, வலந்தலை, காரைநகர் வடக்கு.
601. சி. பொன்னுசாமி, பெரிய மோலை தோட்டம், எல்க்கடுவ.
602. எஸ். துரைசாமி, 9, இஸ்டேன் மோர் கிரசன்ஸ் வெஸ்டுட், கொழும்பு-7.
603. ப. ஸ்ரீபதி, மே/பா சு. பசுபதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
604. பொ. லீலாவதி, கொம்பமை, மல்லாகம்.
605. சி. செல்வக்குமாரன், மே/பா செ. சின்னத்துரை (ஆசிரியர்) உரும்பராய்.

## நடைப் பிணம்

[க. ஆனந்தராஜா — ப. எண். 592]

ஜம்புலிங்கம் பண்ணையார் என்றால் தன்னையூர் என்னும் குறிச்சியிலே சிறுகுழந்தை கூட யார் என்று சொல்லிவிடும். ஆம். அவர் ஒரு கொழுத்த பணக்காரர். அதோடு ஒரு கருமி. வயது ஐம்பதிருக்கும். பாடுபட்டுக் கஷ்டப்பட்டுச் சீவித்தவர் என்பதைத் தெரிவிக்கும் தொந்தி வயிறு. நெற்றியில் எந்நேரமும் பட்டை. தனவந்தர் என்பதைத் தெரிவிக்கும் மிடுக்கான பார்வை. அக் குறிச்சியிலுள்ள வயல் நிலங்களில் அதிகமானவை அவருடையவை. இதற்கெல்லாம் வாரிசாக ஆறு வயதுள்ள ஒரே ஒரு பெண் பிள்ளை.

சின்னான் அவர் வீட்டில் சில நாட்களில் பாரம் தூக்கியும், சில நாட்களில் அவர் வயலில் களை பிடுங்கியும் வாழும் ஓர் கூலி. அவன், இட்ட வேலையைச் செய்யும் ஒரு ஜந்து. அவன் மனைவி கண்ணம்மாள் அவனை மணம் முடித்து இரண்டு வருடங்களுக்குள்ளேயே ஒரு பெண் குழந்தைச் செல்வத்தை அவனுக்கு அளித்துவிட்டு உயிர் நீத்தாள். அன்று தொடக்கம் அவனே அச்சிறுமியான செல்விக்குத் தாயும் தந்தையுமானான்.

ஆறு வயதைக் கடந்த செல்விக்கு அன்று உடம்பு அனலாய்க் கொதித்தது. சின்னான் தனக்குத் தெரிந்த சிகிச்சையெல்லாம் செய்து பார்த்தும் அது வரவரக் கூடிக் கொண்டே போவதைக் கண்டு புழுவாய்த் துடித்தான். அக் கிராமத்திலுள்ள வைத்தியனொருவனைக் கெஞ்சிக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினான். அவரும் "இது நம் வைத்தியத்துக்கு அப்பாற் பட்ட வருத்தம். ஆகவே இதை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்க் காட்டுவதுதான் உத்தமம்" என்று சொல்லிக் கையை விரித்துவிட்டார். ஆஸ்பத்திரி செல்வதென்றால் கடைசி ஐந்து ரூபாயாவது வேண்டுமே. அவனிடம் ஒரு சதம் கூட இல்லை, என் செய்வான்.

"எசமான் ... எசமான்......" என்று கூவிக் கொண்டே ஜம்புலிங்கம் பண்ணையாரின் வெளிக் கேற்றைத் தாண்டி உள் வாசற்படியையும் மிதித்துவிட்டான் சின்னான்.

"யாரது" ஜம்புலிங்கம் பண்ணையாரின் மிடுக்கான கேள்வியிது. "நான்தான் சின்னானெசமான். என் மகளுக்குக் கடுமையான காய்ச்சலெசமான். அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் டாக்குத்தரிடம் காட்ட ஒரு ஐந்து ரூபாய் கடனாகக் கொடுங்க...... எசமான்......"

"டேய் கீழ்சாதிப்பயலே! ஒரு கேட்டுக் கேள்வியில்லாம வாசல் வரைக்கும் வரத் துணிந்து விட்டாயாடா. போடா வெளியே! காசாம் காசு." அவர் முகத்தில் ஆத்திரம் தாண்டவமாடியது.

"எசமான்!"

"போடா வெளியே!"

"எசமான்! இந்த நேரத்தில் இந்த ஒரு உதவியையும் செய்யுங்க எசமான். உங்களுக்கும் என் மகள் வயதுடைய ஒரே ஒரு பிள்ளைதானே எசமான்? அப்பிள்ளை சாகிற வருத்தத்திற் கிடந்தா உங்க மனசு எப்படித் துடிக்குமெசமான்" சற்று ஆத்திரத்தோடேயே கேட்டுவிட்டான் சின்னான்.

"டேய் அதிகப்பிரசங்கி. போடா வெளியே! டேய் முருகா! கந்தா! இவனை வெளியே பிடித்துத் தள்ளுங்கடா". ஏழைகளின் துன்பத்தைக் காண்பதிற்தானே தனவந்தருக்கு ஒரு தனியின்பம்?

"எசமான்..." துக்கமும் ஆத்திரமும் பீறிட்டுக் கொண்டு வந்தது சின்னானுக்கு. ஆனால் அடுத்த கணம் முருகனாலும் கந்தனாலும் தள்ளப்பட்டு வெளியே விழுந்தான். தாமதிக்காமல், துக்கம் பீறிட எழும்பியோடினான் சின்னான் தன் வீட்டை நோக்கி.

"அப்பா... என்னையாரோ கூப்பிடறாங்க அப்...பா..." என்று பிதற்றிக் கொண்டிருந்தாள் செல்வி. அயலார் தமக்குத் தெரிந்த வைத்தியத்தைச் செய்து பார்த்து விட்டார்கள். ஆனால் உடம்பு இன்னும் அனலாய்க் கொதித்தது! சின்னான் என்ன செய்வான், பாவம்!

அடுத்த நாட்காலையில் செல்வி சின்னானை அனாதையாக்கிவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள். கத்தினான், கதறினான், ஓவென்று வாய்விட்டலறினான் சின்னான். யாருக்காக அவன் வாழ்ந்தானோ அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள். அன்றே அவன் முகத்தில் சோகக் களை பரவியது. அதோடு ஜம்புலிங்கம் பண்ணையாருக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் நட்டுவிட்டான் தன் உள்ளத்தில்.

(அடுத்த இதழில் முடியும்)

## ஔவையார்

நா. இரஞ்சிதமணி
(பதிவு எண் 109)

ஔவையாரைப்பற்றி அறியாத தமிழரே இல்லை. சிறு வயதிலே கவி பாடும் சக்தி பெற்ற ஔவையாரைப் பெரியோர் பலர் போற்றி வந்தனர். பாண்டிநாட்டில் பாரி என்னும் ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் ஔவையாரை உபசரித்துப் பல பரிசுகளை அளித்து வந்தான். மேலும் ஔவையிடம் பெரு நட்புப் பூண்டவன் காரி என்னும் வேளாளன். அவரைத் தன் இல்லத்தில் வரவேற்று உபசரித்தான். ஔவையார் அவனீந்த கஞ்சியைக் குடித்து சந்தோஷத்துடன் மறுநாள் பிரயாணம் செய்தார். அவரை ஆதரித்தவருள் அதியமான் என்னும் அரசனும் ஒருவர். ஔவையாரின் காலத்தில் வேறு பல தமிழ்ப் புலவர்களும் வாழ்ந்தார்கள். ஔவையார் எல்லோரிடமும் அன்புடன் பழகுபவர். அவர் கடவுள் பக்தியும் கல்வியறிவுமுடையவர். அவர் அரிய போதனைகளைத் தமிழில் தந்துள்ளார்.

# சுவர்கள் உயரவேண்டும்

— க. கணேசலிங்கம் —

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்ற முதுமொழி மாறி 'சுவர் இருந்தால் தான் அவலமில்லாமல் வாழலாம்' என்ற புதுமொழி நாட்டில் புகுந்துள்ளதை எல்லோரும் அறிவர். வளர்ந்து வரும் சுவர்களே இதற்குப் போதிய சான்று. குட்டிச் சுவர்கள் ஒழிந்து நெட்டைச் சுவர்கள் நீண்டு வருவதால் ஏற்படுவது யாதெனப் பார்ப்போம்.

'அடுத்த வீட்டில் சண்டை போடுகின்றார்கள்' என்று என் மனைவி சில சமயங்களில் 'யுத்த காலச் செய்தி'களை என்னிடம் கூறுவாள்.

'அவர்கள் சண்டை போட்டால் உமக்கென்னப்பா' என்று தகுந்த புத்திமதியை நான் கூறினால் தனது பேச்சுக்கு நான் மதிப்பளிக்கவில்லை என்று சொல்லி என்னுடன் யுத்தத்திற்குக் கிளம்பி விடுவாள்.

இதனால் எங்கள் வீட்டிலும் சண்டை மூளுவது வழக்கமாகி விட்டது.

பின்னர் என்னவாம்.

அடுத்த வீட்டிலுள்ளவர்கள் தங்கள் சண்டையை மறந்து எங்கள் சண்டையைப் பார்க்க ஓடி வருவார்கள்.

இத்தகைய சண்டைகள் வளர்வதற்குக் காரணம் எல்லையில் இருக்கும் குட்டிச் சுவர் தான். அது பதிந்து இருப்பதால் தான் அடுத்த வீட்டில் நடக்கும் சம்பவங்களை என் சதி அறிந்து பின் பதிசதி விரோதம் வளர ஏதுவாகின்றது.

இதை எண்ணி எண்ணி ஆத்திரத்தில் அந்தக் குட்டிச் சுவரில் தலையை முட்டி மோதிக் கொள்ளலாமா எனப் பல தடவை நான் எண்ணியதுண்டு.

அக் காலத்து அரசர்கள் எல்லைச் சுவர்களை ஏன் உயரமாகக் கட்டினார்கள் என்பது எனக்கு இப்பொழுதுதான் விளங்குகின்றது. அயல் நாட்டில் நடக்கும் சண்டைகளைத் தாம் பார்க்காமல் இருந்தால் வீண் சண்டைகளைத் தவிர்க்கலாம் என்ற காரணத்தினால் தான்அப்படி உயரமாகச் சுவர்களை எழுப்பினார்கள் என நினைக்கிறேன்.

எங்கள் சண்டைகளைத் தீர்க்க என்ன வழி என்று எவரைக் கேட்டாலும் சுவரை உயரமாகக் கட்டுவதே வழி எனக் கூறினார்கள். கட்டுவதென்றால் துட்டு வேண்டுமே. கெட்ட கேட்டில் இதுவேறு என்று தட்டிக் கழித்து விடலாம். ஆனால் மனைவியும் நானும் தினம் முட்டி மோதிக் கொண்டிருப்பதை யாரும் அறிந்தால் எங்களைப் பற்றிக் கெட்ட பெயர் ஊரில் பரவி விடுமே என்ற பயத்தில் சுவரை உயர்த்திக் கட்டி, நமது சண்டைகளுக்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டுமென்று எண்ணினேன்.

எனது நண்பர் கிட்டுவிடம் பணம் கேட்டு வாங்கலாம் என்று வீட்டை விட்டுப் புறப்பட்டேன்.

வழியில் அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் அரசாங்கம், 'உணவுகளைப் பயிரிடுங்கள்' என்று விளம்பரப்படுத்துவது போல் 'சுவர்களை உயரமாகக் கட்டுங்கள்' என்று மக்களை ஊக்கப் படுத்தப் போவதாகக் கூறினார்.

சுவர்கள் உயரமாகக் கட்டப் பட்டால் அவற்றிலேயே பெரிய பெரிய எழுத்துக்களில் இதை விளம்பரப்படுத்தலாம் என நான் அவரிடம் என் யோசனையைக் கூறினேன்.

'உயர் சுவர் கட்டி வாழா
தான் வாழ்வு
உவர் மண்ணில் விதை
விதைத்தாற் போன்று'

இவ்வித வரிகளைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை தெருவில் சிலர் மக்களுக்குக் கொடுத்துச் செல்வதைக் கண்டேன். இதைப்பற்றி விசாரித்த பொழுது அத் துண்டுப் பிரசுரங்களை புதிதாகக் கட்டப் பட்டுள்ள சுவர் கட்டிக் கொடுக்கும் கொம்பனியார் வெளியிட்டுள்ளார்கள் என்பதை அறிந்தேன். நாட்டு நிலைமை அறிந்து நற் பணி புரிந்து பணம் சேர்க்கும் கொம்பனி அது.

இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டே சுவரோரமாகச் சென்று கொண்டிருந்த நான் கிட்டுவின் வீட்டருகே நின்றேன். அருகில் இருந்த வீடு கிட்டுவின் வீடுதான். எனினும் வளர்ந்திருந்த சுவர் என் உள்ளத்தில் ஐயத்தை வளர்த்தது. நந்தனாரின் கதி தான் எனக்கும் ஏற்படுமோ என எண்ணினேன். ஆனால் படலையைத் திறந்து உள்ளே சென்றதும் பழைய சினேகிதனைப் போலவே கிட்டு நடந்து கொண்டான்.

'ஏன் நீ வாசற் சுவரை உயர்த்திக் கட்டியிருக்கின்றாய்' என்று கேட்டேன். 'அரசாங்க உத்தியோகத்தர் முதல் நாகரிகமடைந்த எல்லோரும் இன்று இப்படித்தானே கட்டுகிறார்கள். நீ கவனிக்கவில்லையா?' என்று கேட்டான்.

'சுவர் உயர்ந்திருப்பதால் உள்ளே இருப்பவர்கள் நாகரிகமடைந்தவர்களா என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை', என்றேன் நான்.

'நாகரிகம் இங்கு பயபக்தியுடன்தான் வளர்கிறது' என மனதினுள் நினைத்துக் கொண்டு, வந்த விஷயத்தை விபரமாகக் கூறினேன். கேட்ட பணத்தைக் கையில் தந்தான் கிட்டு. விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். வழியில் சுவர் கட்டும் ஆயத்தத்துடன் சில கூலி ஆட்களையும் கூட்டிச் சென்றேன்.

சுவரைக் காட்டி உயர்த்திக் கட்டும்படி கட்டளையிட்டேன். கட்டத் தொடங்கினார்கள் வேலையாட்கள்.

அதேவேளையில் அடுத்த வீட்டிலிருந்தும் வேலையாட்களின் தலைகள் தெரிந்தன.

எல்லைச் சுவரல்லவா? அவரும் தொல்லைகளை நீக்க உயர்த்திக் கட்ட உளம் கொண்டிருந்தார்.

சுவர் கட்ட வந்தவர்கள் சுவரைப் போல் நின்று கொண்டிருந்தார்கள். உயர்த்திக் கட்ட எண்ணிய நான் கையைக் கட்டிக் கொண்டு நின்றேன்.


யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிறுப்பர்

Std. 14.


காயமுற்று ஆஸ்பத்திரியில் அபாய நிலையிற் கிடந்த் சார்ஜென்ட் செரப்பனு சாவுடன் போராடிய வேளையில், பேராசிரியர் நெகோவிஸ்கி தமது சிகிச்சை மூலம் சாவை விரட்டினார். அந்த வெற்றியின் இரகசியத்தை திரு. எல். ரைட்லண்ட் இக் கட்டுரையில் விளக்குகின்றார். இதன் முதற் பகுதி சென்றவாரம் வெளியாயிற்று.

# வெற்றியின் இரகசியம்

— தமிழாக்கம்: வீ. இராமகிருஷ்ணன் —

இதனை அவர் எப்படிச் செய்தார்?

உயிரைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது புது இயந்திரங்களை அவர் கண்டிருந்தாரா, அல்லது புது வகைமருந்துகளை உபயோகித்தாரா? இரண்டுமே இல்லை.

பேராசிரியரிடம் சில உதவிக் கருவிகள் இருந்தது உண்மை. ஆனால் அவையெல்லாம் ஒரு சிறு கைப்பெட்டிக்குள்ளே அடங்கியிருந்தன. அதனுள் ஒரு சிறு றப்பர்க்குழாயும் சத்திரச் சிகிச்சைக்கென்று தயாரிக்கப் பட்ட சிறு துருத்தி ஒன்றுமே இருந்தன. மற்ற உதவிக்கருவிகள் பேராசிரியரின் கைகளும் அறிவுமே. அவர் அடைந்த வெற்றி அநேகவருட ஆராய்ச்சியால் பெற்ற அறிவுத்திறனின் வெற்றியே.

## முதலிற் செயற்கைமுறை

இராணுவ வீரனை அவர் முதலில் செயற்கை முறையால் சுவாசிக்கும்படி செய்தார். ஆனால் அவர் இதைச்செய்தது ஒரு புதுமுறையில். அவரது உதவியாளரில் ஒருவன் றப்பர்க்குழாயைச் சுவாசக்குழாயுள் நேரடியாகப் பொருத்தினான். துருத்தியின் மூலம் காற்று நேரே நுரையீரலுட் செலுத்தப்பட்டது. இதனால் நுரையீரலின் நுண்ணிய நரம்பு நுனிகள் தூண்டப்பட்டன. இத் தூண்டல்கள் மூளையின் சுவாச இயற்கைப் பகுதியை மறுபடியும் இயங்க ஊக்கின.

செயற்கை முறை சுவாசத்தோடு இரத்தமும் உட்செலுத்தப்பட்டது. ஆனால் பேராசிரியர் இதிலும் ஒரு புதுமுறையைக் கையாண்டார்.

பொதுவாக சிரைகளின் (veins) மூலம்தான் இரத்தம் உட்செலுத்தப்படுவது வழக்கம். அதுவும் மிக மெதுவாகத் தான் உட்செலுத்தப்படும்.

ஆனால் இவர் இரத்தத்தை தமனிகளுள் (arteries) மிகுந்த அமுக்கத்துடன் உட்புகுத்தினார். இது பொபருவுக் கருவியின் (Boborov Apparatus) உதவியுடன் செய்யப்பட்டது. இம்முறை, ராணுவ வீரனின் உயிரைக் காப்பாற்றியதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. ராணுவவீரனின் இருதயத்தை மறுபடியும் இயங்கச் செய்வதே பேராசிரியரின் முதல் வேலையாய் இருந்தது. ஆனால் இரத்தக் குழாய்கள் இருதயத்துள் இரத்தத்தைக் கொண்டு வராவிடில் அது இயங்காது. இராணுவ வீரனே அதிக அளவு இரத்தத்தை இழந்திருந்தான். பேராசிரியர் வருவதற்கு முன்னரே அவனது உடலுள் இரத்தம் செலுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் மற்றும் ஒருமுறை புது முறையில் உட்செலுத்துவது நன்மை பயக்கும் எனப் பேராசிரியர் நம்பினார்.

இருதயத் தசைகளுக்கு உணவளிக்கப்பட்டால்அவைமறுபடி இயங்கக் கூடும். ஆகையினால் உணவுப் பொருள்கள் சீக்கிரத்தில் இருதயத்தசைகளை அடையச் செய்வதே முதலாவதுபிரச்சினை.

## இரத்தம் செலுத்தல்

இரத்தம் கைத்தமனியுள் அமுக்கத்துடன் செலுத்தப்பட்டது. அது அயோட்டா (Aorta) என்னும் பெரும் தமனியை அடைந்தது. தமனிகளிலிருந்து இரத்தம் இருதயத்தை அடையாமல் தடுக்க வால்வுகள் (Valves) இருக்கின்றன. ஆகையினால் அயோட்டாவிலிருந்து உட்செலுத்தப்பட்ட இரத்தம் இருதயத் தசைகளுக்கு இரு சிறு தமனிகள் (Coronary Arteries) மூலம் சென்றது. உட்செலுத்தப்பட்ட 300 C. C. இரத்தம் விரைவில் இருதயத் தசைகளையடைந்து அவைகளுக்கு உணவளித்து நின்றிருந்த இருதயத்துடிப்பை மறுபடியும் தோற்றுவித்தது. இருதயத் துடிப்பு இரத்தச் சுழற்சியை ஆரம்பித்து மூளைக்கு இரத்தத்தை அனுப்பியது.


மற்றும் ஒருமுறை உடலுள் இரத்தம் செலுத்தப்பட்டது. இப்பொழுது இரத்தம் சாதாரணமாக சத்திரசிகிச்சையில் செய்யப்படுவது போல் நாளங்களின் மூலம் மெதுவாக அனுப்பப்பட்டது. இது இராணுவ வீரன் இழந்திருந்த இரத்தத்தை ஈடுசெய்தது.

முதலில் உட்செலுத்திய இரத்தத்துடன் அட்றினலின் (Adreline)கரைசலையும் அவர் கலந்திருந்தார். இது இருதயத்தையும் இரத்த சுழற்சியையும் ஊக்குவிக்கும் ஒரு மருந்து.

## 11 நிமிடங்களில்

இரத்தச் சுழற்சி நின்றதினால் இரத்தத்திலும் இழையங்களிலும் (Tissues) ஒக்சியன் குறைந்து உடலியக்கத்தினால் உண்டாக்கப்பட்ட விடப் பொருள்கள் கூடின. இவையே இவ்வீரன் உயிர் வாழ்வதற்குத்தடையாய் இருந்தன. நான்கு நிமிடங்கள் இவ் வீரனின் இருதயம் இயங்காமலிருந்தது. ஒக்சியன் இல்லாமையால் கலங்களும் (Cells) இழையங்களும் சாகும் நிலையில் இருந்தன. எவ்வளவு விரைவில் இவைகள் ஒக்சியனை அடைகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் கொடூர விளைவுகள் தடுக்கப்படலாம். இதற்காக பேராசிரியர் சிறிதளவு ஐதரசன் பாரோக்சைட்டை (HydrogenPeroxide)யும் இரண்டாவதாக உட்செலுத்திய ரத்தத்துடன் கலந்திருந்தார். இது இரத்தத்திற்கு விரைவில் ஒக்சியனைக் கொடுத்தது. தவிர அவர் 40% குளுகோசு கரைசலையும் இவ்விரத்தத்துடன் கலந்திருந்தார். குளுகோசோ விரைவில் சக்தியைக்கொடுக்கும் உணவுப் பொருள்.

11 நிமிடங்களில் அவரால் இவற்றையே செய்ய இயன்றது. இறந்த இராணுவவீரன் உயிர் பெற்றது சிந்தனைக்கெட்டாத ஒரு லீலை அல்ல. பல வருடங்களாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்மூலம் அடைந்த அறிவுத்திறனே அவன் உயிரைக் காப்பாற்றியது.



கல்கத்தாவுக்கு அருகே பிரிட்டிஷ் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள துர்காப்பூர் எஃகு உற்பத்தி சாலையில் ஆக்கப்பட்ட கல்கரி அடுப்பு பற்றரிகள் மூன்றின் தோற்றம்.

அருள்வழி

# மதங்களிற் கடவுள் காட்சி விலைமதிக்கவொண்ணுத சொத்து

## ஆன்ம தத்துவம் பற்றி விேைபாஜி விளக்கம்

ஒவ்வொரு மதத்திலும் முக்கியமாக ஐந்து அம்சங்கள் உண்டு.

ஒன்று, தம் உள்ளத்தையும் அறிவையும் உலகத்தில் உழலாது விலக்கிக்கொண்டு வாழ்வது; அத்தகைய வாழ்க்கை நடத்துபவர்கள் தம் மனத்தையும் அறிவையும் கடவுளுடன் செலுத்துவார்கள். அவர்களுக்கு கடவுள் காட்சியும் அனுபவமும் ஏற்படும். ஒன்றைக் குறிப்பிட்டு அதுவே கடவுளின் உருவம் என்று சொல்லுவதற்கு, கடவுள் அவ்வளவு சாதாரணமானவருமல்ல, சிறியவருமல்ல. எவரும் இதுவே கடவுளின் உருவம் என்று சொல்லுவதற்கு, கடவுளின் உருவம் என்று ஒன்றை நிர்ணயமாகச் சொல்லுவதற்கில்லை. ஆகையால், எவரேனும் தமக்குக் கடவுள் காட்சி ஏற்பட்டதென்று சொன்னுல் அவர் கண்டது கடவுளின் ஒரு பகுதி, மிகவும் சிறிய பகுதி என்றே கொள்ள வேண்டும். ஆனல் இந்தச் சிறிய காட்சியினலேயே மனிதனது வாழ்க்கை முற்றிலும் மாறி விடலாம். கடவுள் காட்சி பெற்ற மனிதன் ஓர் இமைப்பொழுதில் உருத் தெரியாமல் மாறிப் போவான். இன்று வரை உலகில் தோன்றியுள்ள பல பெரியார்களும் பெற்றது இத்தகைய கடவுள் காட்சியின்பமே. இத்தகைய காட்சிபெற்றவர்களுக்கு தத்தம் அனுபவத்தை உலகிற்கு எடுத்துரைத்தல் கடமையாகிறது. இதற்கும் மதத்திற்கும் தொடர்பே இல்லை; ஆனல் ஒவ்வொரு மதத்திலும் உள்ள முக்கியமான அம்சம் இந்தக் கடவுள் காட்சியே.

### இறை வழிபாடு

இரண்டாவது அம்சம், கடவுளை வழிபடுவது பற்றியது. அதற்கான வழிவகைகள் வெவ்வேருய் வழங்குகின்றன; இவ்வழிபாட்டை எப்படி நடத்துவது? கடவுளின் சித்திரம், சிலை என்று ஒன்றை வைத்துக் கொள்வதா, வேண்டாமா? மண்டியிட்டு வழிபாடு செய்வதா, உட்கார்ந்தோ நின்று கொண்டோ செய்வதா? இவையெல்லாம், இந்த வழிபாட்டு நடைமுறைகளெல்லாம் மதத்தின் மற்ருெரு அம்சம்.

மதத்தின் மூன்ருவது அம்சம், கதைகளும் இதிகாச புராணங்களும். இஸ்லாம் மதத்தில் இப்ரஹீம் வரலாறு, மூசாவின் வரலாறு, ஆப்ரகாம் வரலாறு ஆகியவையும், இந்து மதத்தில் நள-தமயந்தி, ஹரிச்சந்திரன் பற்றிய வரலாறுகளும், கிறிஸ்தவ மதத்தில் ஜோஸப் ஜுலேகாவின் வரலாறு போன்றவையும் இவ்வகையைச் சேர்ந்தவை. ஒவ்வொரு மதத்திலும் இம்மாதிரியான கதைகள், புராணங்கள் உள்ளன.

### விதிகள்

நான்காவது அம்சம், சட்டங்களும், விதிகளும்: இதில் சொத்துரிமை முதலியன பற்றிய சட்டங்களும் அடங்கும். அதாவது தந்தையின் சொத்தில் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் சேரவேண்டியது எவ்வளவு, கலியாணம் செய்வது எப்படி, இறந்த பின்பு சவத்தை மண்ணில் புதைப்பதா தீயிட்டு எரிப்பதா என்பன போன்றவை.

### நீதி, நெறி வழுவாமை

ஐந்தாவது அம்சம் நீதி பற்றிய பெரிய பகுதியாகும். எப்பொழுதும் உண்மையே பேசுதல். ஒருவர் மற்றவரிடம் அன்பாயிருத்தல், தங்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்வது, உடலால் உழைத்துப் பாடுபட்டு உணவைச் சம்பாதித்துக் கொள்வது, சோம்பலைத் தவிர்ப்பது, பொய் பேசாதிருப்பது, திருடாமை, கருணை காட்டுதல் இவை ஒவ்வொரு மதத்திலும் முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன.

### ஒன்ருய் இணைத்தல்

இவ்வாறு ஒவ்வொரு மதத்திலும் ஐந்து அம்சங்கள், பகுதிகள் உண்டு. இவற்றுள் கடவுள் காட்சி என்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஏற்படுவதாகையால் அது ஒன்றைப்போல் ஒன்று இராது: இது இயல்பு. எனக்கு கடவுளின் ஒரு வகைக் காட்சி ஏற்பட்டால் இன்னெருவருக்கு இன்னெரு வகைக் காட்சியும், மூன்ருமவருக்கு இவை இரண்டுமல்லாத வேறென்றும் ஏற்படலாம். இவை அனைத்தையும் ஒன்ருய் இணைத்துப் பார்க்கையில் எது உருவாகிறதோ அதையே கடவுள் காட்சி என்று கொள்ளவேண்டும். குருநானக், மீராபாய், மல்லேசுவரி, கபீர்தாசர் முதலிய எத்தனையோ பெரியார்கள் இருந்திருக்கிருர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட கடவுள் காட்சியின் அனுபவம் வெவ்வேருயிருப்பினும் இவற்றினிடையே முரண்பாடு எதுவுமில்லை; அனைத்தையும் சேர்த்துப் பார்க்கையில், இது மதங்களின் ஒரு முக்கியமான பகுதியென்பது புலனுகும்.

இந்து மதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதம் ஆகியவற்றிலுள்ள இந்தக் கடவுள் காட்சிப் பகுதி இம்மதங்களனைத்திற்கும் தனித்தனியாகவும் பொதுவாகவுமுள்ள விலை மதிக்க வொண்ணுத சொத்து. இது எல்லோருக்கும் பொதுவானது. இதில் எவரும் தனியுரிமை கொண்டாடுவதற்கில்லை.

### எல்லாருக்கும் பொது

இதே வகையில் கதைபுராணங்களிலும் எல்லாருக்கும் பொது உரிமையுண்டென்று கருத வேண்டும். நள-தமயந்தி வரலாற்றையும் ஹரிச்சந்திரன் கதையையும் எல்லா மதத்தவரும் படிக்கவும், அவற்றிலிருக்கும் போதனைகளை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். ராமாயணத்தைப் படித்து இந்துக்களைப் போலவே முஸ்லீம்களும், பிற மதத்தவரும் படிப்பினை பெறவேண்டும். அதிலுள்ள படிப்பினைகள் எல்லோருக்கும் உரியவை; எல்லா மதத்தவருக்கும் அவை பொதுவான சொத்து.

வழிபாட்டு முறைகளில் சிறிது வேற்றுமை இருக்கவே செய்யும். அந்தந்த மதத்தவர் தத்தம் முறைப்படி வழிபாடு செய்கையில் இந்த வேறுபாட்டைத் தவிர்ப்பதற்கில்லை. இதனுல் நஷ்டமும் இல்லை. உதாரணமாக சூரியன் உதித்துக் கொண்டிருக்கிறது; கிழக்குத் திசை ஒளி மயமாயிருக்கிறது. அப்பொழுது அத்திசையை நோக்கி இந்து வழிபாடு செய்தால், காபாவுள்ள மேற்குத் திசையை நோக்கி முஸல்மான் வழிபடுகிருன். இதில் தவறென்றுமில்லை. ஆனல் எல்லாரும் ஒன்று சேர்ந்து நடத்துவதற்கான வழிபாட்டு முறையொன்றும் இருத்தல் வேண்டும். கடவுள் பெயரைச் சொன்னதும், கடவுள் வழிபாடு என்றதும் நாம் தனித்தனியே பிரிந்துபோவது விசனிக்கத்தக்கது. மற்ற எல்லா விஷயங்களுக்கும் ஒன்று சேரும் நாம் 'கடவுள்' என்றதும் இவ்வாறு பிரிந்து போவது தவறல்லவா? கடவுள் வழிபாட்டையும் நாம் ஒன்ருகச் சேர்ந்து செய்வதற்த ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தம்மிஷ்டம்போல் கடவுளை வழிபடுவதில் தவறில்லை. ஆனல் எல்லா மனிதர்களும், எல்லா இனத்தினரும் ஒன்று சேர்ந்து வழிபாடு நடத்துவதற்கு உரிய முறையொன்றும் இருத்தல் வேண்டும்.

### வேற்றுமைகளுக்கு இடமில்லை

மனிதனின் அறிவு இன்று வெகுவாக வளர்ந்து விட்டமையால் பழைய விஷயங்களையே இனியும் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. புதிய விஷயங்களையும் கேட்கவேண்டும். ஆன்ம தத்துவங்கள் எல்லா மத நூல்களிலும் காணப்படுகின்றன. ஒருவர் மற்றவருக்கு உதவுவது, உண்மை தவருமை, எல்லோரிடமும் அன்பும் அனுதாபமும் காட்டுதல், என்ற இவை குரானிலும், கீதையிலும், புத்தமத நூலான தம்ம பதத்திலும், பிற மத நூல்களிலும் இருக்கின்றன. இவையெல்லாம் ஒரே விஷயத்திற்கு அமைந்த பல சாட்சிகள். ஒரு வழக்கில் ஒரே சாட்சி இருப்பதை விட பல சாட்சிகளிலிருந்து விஷயத்தை வற்புறுத்திஞல் கட்சி வலிமை பெறுமல்லவா? அது போன்று இந்து மத நூலில் காணப்படும் ஒரு உண்மை தம்ம பதத்திலும் கிரந்த சாகிப்பிலும் இருக்குமானல் அவ்வுண்மை மேலும் உறுதி பெறுகிறது.

---

# பழம் பெருமை பேசுவதிற் பயனில்லை

[5ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்ப்பணி புரிகிருர்களே, தமிழ் உணர்ச்சியுடன் உழைக்கிருர்களே ஓர் சில மொழிப் பற்றுடையோர்; அவர்களை எவ்வளவு மெச்சினுலும் தகும்! அவர்களே உண்மைத் தமிழ் அன்பர்கள்; நற்றமிழர்கள்; வள்ளுவனர் பாரதியார் முதலியோர் கண்ட **தமிழர்களும்** அவர்களே என்று சொன்னல் மிகையாகாது.

### திடசித்தம் அவசியம்

கஷ்டங்களையும் எதிர்த்து வெற்றிபெறல் வேண்டும் என்பது பெரியோர் வாக்கு; கஷ்டங்களில் வெற்றி பெறுபவன், இடைஞ்சல் இக்கட்டுகளையும் துரும்பென மதித்து முன்னேற்றப்பாதையில் துரிதமாக முன்னேறுபவனே மனிதன். அவர்களாலேயே இவ்வுலகம் இந்நிலையிலாவது இயங்கிவருகிறது. நாமும் இந்நிலையிலாவது வாழ்ந்து கொண்டிருக்கிருேம். எனவே, எம்முன் உள்ள சிறு குறைகளை (சில சமயங்களில் பெரும் கஷ்டங்களையும்) திடசித்தத்துடன் போராடி வெற்றிபெறலே சாலச் சிறந்தது; அதுவே எம் பணியுமாகும். கூடியளவு கஷ்ட நிலையிலும் நாம் தமிழ்ப்பணி செய்யின் அதை எம் தமிழ்த்தாய் நூறு மடங்காகப் பெருக்கி எமக்கெல்லாம் அருள் புரிவாள். எம் நாடும், உலகமும் நன்னிலை பெற்று விளங்கும். தமிழ்ப்பணி தழைக்கவேண்டின் எம்மவரிடையே உள்ள பதவி வேட்கை, சுயநலம், ஆணவம், இன்னேரன்ன கேடுகள் அழிந்தாக வேண்டும். இவைகளே இன்று நம்மவரை மிகவும் பீடித்து வரும்பெரும்குறைகளெனலாம். தமிழரெல்லாம், நற்றமிழராக, நற்றமிழ் உணர்ச்சி யுடையோராக, நானிலம் வாழப் பணி புரிபவராக விளங்கல் வேண்டும். துன்பம் வரும்போது மன உறுதியுடன் வாழப் பழகிக் கொள்ளவேண்டும். சென்ற காலச் சிறப்பை வெறும் வாயளவில் பேசித்திரியாது செயலளவிலும் கருமமாற்றி தம்மையும் பிறரையும் நன்ருக வாழ வைத்தல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் நாம் தினமும் தமிழ்த்தாயை வணங்கிப் போற்றி அவள் நலம்பேணி உழைக்க வேண்டும்! அதுவே எம் நாட்டுக்கும், உலகுக்கும் நன்னுள்; பொன்னுள்!

---

# ★ நமது நூல் நிலையம் ★

**ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்:** தொகுதி I. தமிழாக்கம்: திருமதி அ. மயில்வாகனம் (முன்னுள் அதிபர்: இராமநாதன் மகளிர் பயிற்சிக் கல்லூரி) விலாசம்: மாலினிபாங்க்ஸ், உரும்பராய், இலங்கை; **விலை:** ரூபாய் 2.

ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் உலகப்புகழ் பெற்றவர். அவருடைய நாடக பாத்திரங்கள் ஆங்கில மக்களின் உள்ளங்களையும் அவர்களின் இயல்புகளையும் எடுத்துக் காட்டுவதுடன் நிற்கவில்லை. உலகமக்களின் குணநலன்களையும், அவர்களின் குறைபாடுகளையும், மனிதவர்க்கத்தின் சூழ்ச்சிகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் காதல், வீரம், சோகம் போன்ற உணர்ச்சிகளையும் அப் பாத்திரங்கள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன.

> மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.

ஷேக்ஸ்பியரின் வாணிபுர வணிகன் அல்லது, வெனிஸ் வர்த்தகன் என்ற கதையை அறியாதவர்களே இலர். உலகின் பல்வேறு மொழிகளிலும் இக்கதை பெயர்க்கப்பட்டுள்ளது.

இப்போது வெளிவந்துள்ள இந் நூல் பள்ளிக்கூட மாணவர்களுக்கு உபயோகமான முறையில் அமைந்துள்ளது. பிறநாட்டு நல்லறிஞர்களின் நூல்கள் தமிழில் பல்கிப் பெருகுமாயின் எமது குழந்தைகளின் அறிவு பலதுறைகளிலும் விருத்தியுற ஏதுவாகும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் ஷேக்ஸ்பியரின் ஆறு கதைகள் இடம் பெற்றுள்ளன. கல்வித்துறையில் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியையின் பெரு முயற்சியால் உருவாகியுள்ள 'ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்' எஸ். எஸ். ஸி; ஏச். எஸ். ஸி. மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் மிகவும் உபயோகமானவை. நல்ல தமிழ்நடையைக் கையாண்டு மூலத்தின் சுவை குன்ருது எழுதப்பட்டுள்ள இக் கதைகள் ஆங்கில இலக்கியப் பூங்காவுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் பெற்றி வாய்ந்தன. படங்களுடன் நூல் மிக அழகாக வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலின் இரண்டாவது தொகுதியும்விரைவில்வெளியாகுமென எதிர் பார்க்கின்ருேம்.

---

**திருவாசகத் திருவிழா சிறப்பு மலர்:**—1959 **வெளியீடு:** அருள் நெறித் திருக்கூட்டம், திருச்சிராப்பள்ளி; **விலை:** ரூ. 1-25.

தமிழர்தம் பக்தி நூலாகத் திருவாசகம் விளங்குகின்றதெனின் அது மிகையாகாது. மாணிக்கவாசகர் தந்த இத் திரு நூலுக்கு நாடெங்கணும் தனி விழாக்கள் எடுக்கச் செய்த பெருமை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களையே சாரும்.

திருச்சி, அருள்நெறிக் கூட்டத்தின் சார்பில் ஆண்டு தோறும் திருவாசகவிழா நடைபெற்று வருகின்றது. ஆருவது திருவாசக விழாவின் நினைவாக இம் மலர் வெளியாகியுள்ளது. மணிவாசகரின் மாண்பினை விளக்கும் அறிஞர்கள் புலரின் கருத்தோவியங்கள் இதன்கண் உள. மாணிக்கவாசகரின் திருவுருவங்களுடன் திகழும் இம் மலர் திருவாசகத்தை அறிய விரும்புவோருக்குப் பெரிதும் பயன்படும். மலர் வெளியீட்டுக் குழுவினரின் இந்நன் முயற்சி பாராட்டற்குரியது.


---

**திருவெம்பாவை உரை:** ஆசிரியர்: சி. சுப்பிரமணிய தேசிகர்; **வெளியீடு:** மணிவாசகர் சபை, காரைநகர்; **விலை:** குறிப்பிடப்படவில்லை.

திருவாசகத்தின் ஒரு பகுதி திருவெம்பாவை. இதற்குப் பலர் உரைகூறியுள்ளனர். முன்னர் வெளியான உரைகளிற் காணப்படாத பல விளக்கங்களைத் திரு. தேசிகர் தமது புத்துரையில் தந்துள்ளார். 'மொய்யர் தடம் பொய்கை' என்பதற்கு — வலிய வரம்பினையுடைய இயற்கை நீர் நிலை என்பது பொருள்.

மொய்ஆர் என்பதற்கு வண்டுகள் மொய்க்கும் எனவும் உரைக்கலாம் என்கின்ருர் தேசிகர்.

வரன் முறையாகப் பாடங் கேட்டுத் தமிழ் பயின்ற இப் பெரியாரின் உரை அனைவருக்கும்எளிதில்விளங்கக் கூடியது.



கொழும்புத் திட்டத்தின் கீழ், தொழில் நுட்பத் துறையில், இங்கிலாந்தில் பயிற்சி பெறும் ஐந்து இந்திய மாணவர்கள், ஒரு தோட்டத்தில் பூச்சி நாசினி நுட்பங்களைப் பரிசோதிக்கின்றனர்.

பாலைவனப் பிரதேசமாகிய சகாரா இப்பொழுது எழில் மிக்க பூமியாக மாறி வருவதை இக் கட்டுரையில் விபரிக்கின்றார், ஏ. நோயில்ஸ் தோமஸ்

மொழிபெயர்ப்பு: ஸி. வி. இராஜேந்திரம்.

# பொன் கொழிக்கும் சகாரா
## பாலைவனம் சோலைவனமாகின்றது

சகாரா பாலைவனத்தை அரேபியர்கள் "எல் கேலா" என்று வழங்குவார்கள். வரண்ட பூமியென்பது இதன் பொருள். ஆனல் இவ்வாண்டு தொடக்கம் வரண்ட பூமியென்ற பெயர் இப் பாலைவனத்துக்கு எவ் விதத்திலும் பொருந்தாது என்பதை அங்கு காணப்படும் வளம் கொழிக்கும் காட்சிகள் நிரூபித்து விட்டன.

### அன்றும் இன்றும்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு மண்குவியல்களையும் கற்பாறைகளையும் விட வேறு எதையும் காணமுடியாது. அப்பொழுது அங்கு நிலவிய வரட்சியை கற்பாறைகளினூடே ஒழித்து ஓடும் நீர் ஊற்றுக்கள் ஓரளவு தணிய வைத்தது. ஒட்டகக் கூட்டங்கள் அங்குமிங்கும் பவனி வருவதற்குப் பதிலாக இன்று லொறிகளும் வான்களும் மணல்குவியல்களை பிளந்து செல்லும் காட்சியை நாங்கள் பார்க்க முடிகிறது. முன்பு பாலைவனமாகவிருந்த இப்பிரதேசம் இப்பொழுது எழில்மிகு நகர்மாக மாறிவருகிறது. இங்கே இப்பொழுது இரண்டு விடுதிச்சாலைகள் கம்பீரமாகத் தோற்றமளிக்கின்றன. காளான் போல் உருவாகிவரும் கடைகளும் நவநாகரிக முறையில் இயங்கும் பெற்ரோல் எடுக்கும் நிலையங்களும் இவ்வரண்ட பிரதேசத்தை வனப்புமிக்க நாடாக்கியுள்ளது. இங்கிருந்து மெடிற்றறேனியன் தரைவரை நன்கு அமைக்கப்பெற்ற ஒரு நெடுஞ்சாலையானது மண் மலைகளை ஊடுருவிச் செல்கிறது. இப்பொழுது சகாரா பாலைவனம் அளிக்கும் தோற்றம் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரத்தைத்தான் நினைவுகூரச் செய்யும். ஒரே ஒரு வித்தியாசம். இங்கு பெண்மணிகளில்லை.

### தரத்தில் உயர்வு

இங்குள்ள எண்ணெய்க்கிணறுகள் தரத்தில் உயர்ந்த எண்ணெய்யைப் பலகோடி கலன்களாக வாரி வழங்குகின்றன. ஆம். வற்றாது சுரந்து கொண்டிருக்கும் இப்பிரதேசத்தை எப்படித்தான் பாலைவனமென்று சொல்லமுடியும்!

இங்கிருந்து ஓர் எண்ணெய்க் குழாயை மெடிற்றறேனியன் தரைவரை அமைத்தால் அடுத்த ஆண்டு ஒக்டோபரில் 13,000000 கலன் எண்ணெய்யைத் தாயாரிக்க முடியுமென்று நிபுணர்கள் கணித்துள்ளனர். இன்னும் இரண்டு ஆண்டுகளில் 20,000,000 கலன் எண்ணெய்யை உற்பத்திசெய்ய முடியுமென இதே நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். சகரா பாலைவனத்து எண்ணெய் ஊற்றுக்கள் 'கறுப்புத் தங்கம்' என்று அங்கு பாராட்டப்படுகின்றன.

சகாரா பாலைவனத்தின் பரப்பு 3, 500, 000 சதுர மைல் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இங்கு 900 மைல் நீளம் வரை மலைகள் ஒயிலாகக் காட்சியளிக்கின்றன. இவைகள் 9000 அடியிலிருந்து 11,000 அடி உயரமாகவும் இருக்கின்றன. மேட பூமிகளும் பள்ளத்தாக்குகளும் மலைகளின் மத்தியில் சேர்ந்து இப்பிரதேசத்தின் அழகுக்கு அழகு செய்கின்றன. இங்கு வசிக்கும் மக்களின் தொகை 800,000 எனத்தெரிகிறது.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், சகாரா பாலைவனம் ஒரு செழிப்பான விளைநிலமாக விருந்ததென்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். உலக சுவாத்தியத்தையே மாற்றியமைத்த பனிக்கட்டி யுகம் இப்பிரதேசத்தையும் பாலைவனமாக்கியது. ஆனல் இப்பொழுது, இக் கைங்கரியத்தில் மனிதன் ஈடுபட்டுள்ளதால் சகாரா பாலைவனம் இன்று சோலைவனமாக மாறிவருகிறது. ஆம், சரித்திரம் திரும்புகிறது.

# ஐசனேவரின் ஆசியநாடுகள் விஜயம்

[6ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகள் தாபன பாதுகாப்புச் சபை உப குழுவினர் கடந்த 6ஆம் திகதி தம் அறிக்கையை வெளியிட்டனர். வடக்கு வியற்னைமச் சேர்ந்த ஒழுங்கான கொம்யூனிஸ்ட் படைகள் லாவொஸ் மீது படையெடுத்தனர் என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இல்லை என இவ்வறிக்கை கூறுகின்றது. வட வியற்னும் நாட்டு மக்களின் இலக்கணங்களை ஒத்திருப்பவர்கள் போராட்டங்களில் பங்கு பற்றியிருக்கின்றனர் என்பது உண்மைதான். இவர்கள் வடக்கு வியற்னும் நாட்டைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் கண்டு பிடிக்கவில்லை என மேலும் இவ்வறிக்கை கூறுகிறது. வாக்குமூலம் அளித்த 41 சாட்சிகளுள் 40 பேர் வடக்கு வியற்னும் புரட்சிப் படைகளுக்கு யுத்த தளவாடங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை வழங்கியிருப்பதாகக் கூறியிருக்கின்றனர்.

தனிப்பட்ட முறையில் நிலைமையை ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தலைமைக் காரியதரிசி டக்டர் ஹமர்ஸீல்ட் லாவொஸிற்கு சென்ற செவ்வாய்க்கிழமை புறப்பட்டார். அவர் அங்கு ஏறக்குறைய பத்து நாட்கள் வரை தங்குவார். இவருடைய விஜயத்திற்கும் பாதுகாப்புச் சபை உப குழுவின் அறிக்கைக்கும் தொடர்பில்லையாம். லாவொஸ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இவர் விஜயம் செய்கிறார் எனத் தெரிகிறது.

### பனமாவில் ஆர்ப்பாட்டங்கள்

பனமா கால்வாய் பிராந்தியத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஆதிக்கத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று, அமெரிக்க தூதுவரின் காரியாலயத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க தேசியக் கொடி மாணவர்களால் கிழித்தெறியப்பட்டது. பனமா கால்வாய் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா வசம் இருந்து வருவதை எதிர்த்து இவ்வார்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

என்ன கஷ்டம் வந்தபோதிலும் பனமா கால்வாயை சர்வ தேச பரிபாலனத்திற்கு விடத் தாம் ஒரு போதும் உடன்படப் போவதில்லை என்றும் மத்திய அமெரிக்கா வழியாக இன்னெரு கால்வாய் வெட்ட வேண்டியதன் அவசியத்தை பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் ஜனதிபதி ஐஸன்ஹோவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

### பெல்ஜியன் கொங்கோவில்

பெல்ஜியன் கொங்கோவில் நெருக்கடியான நிலைமை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐரோப்பியர், பாதுகாப்புள்ள இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இம்மாதம் 20ஆம் 30ஆம் தேதிகளுக்கிடையே கொங்கோவின் தலைவர்களடங்கிய ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கு பெல்ஜிய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

### 42வது ஆண்டு விழா

ருஷியாவில் ஒக்டோபர் புரட்சியின் 42வது ஆண்டு விழா கடந்த சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. இவ்வருடம் மொஸ்கோவில் நிகழ்ந்த மரியாதை அணிவகுப்புகளில் விஞ்ஞான முன்னேற்றமும், வாழ்க்கைத்தர மேம்பாடும் வலியுறுத்தப்பட்டன.

### அமெரிக்க எஃகுத் தொழிலாளர்

அமெரிக்காவில் 116 நாட்களாக வேலைநிறுத்தம் செய்யும் 5 இலட்சம் எஃகுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை அமெரிக்க உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியிருக்கிறது. 80 நாட்களுக்குள் உடன்பாடு ஏற்படாவிட்டால் இவர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து மேற்கொள்ள இக்கட்டளை முறைவகை செய்கிறது. சென்ற திங்கட்கிழமை இவர்கள் வேலைக்குத் தற்காலிகமாகத் திரும்பினர்.

### அமெரிக்காவின் புதிய செய்மதி

கடந்த சனிக்கிழமை ஐக்கிய அமெரிக்கா, கலிபோர்னியாவில் இருந்து அனுப்பிய "ஏழாவது டிஸ்கவரர்" என்ற செய்மதி துருவமார்க்கமாக பூமியை வலம்வந்து கொண்டிருக்கிறது. அதன் பாதையின் குறைவான தூரம்பூமியில் இருந்து106மைல் கூடியதூரம் 550 மைல்கள். ஒருமுறை பூமியை வலம்வர 95 நிமிஷநேரம் செல்கின்றது. 17 முறை வலம்வந்ததும் அதிலிருந்து பிரியும் கூம்பு, பரகுட் மூலம் பசுபிக் மகா சமுத்திரத்தில் இறங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் அது கீழே விழத்தவறியதால் ஏமாற்றமடைந்தனர்.


### டூனிசியாவின் ஜனதிபதி

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த தேர்தலில் ஜனப் ஹபீப் பொர்ஹிபா மீண்டும் ஐந்து வருடகாலத்திற்கு ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருடைய கட்சியும் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றது. பெண்கள் முதல் முறையாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


மகத்தான 2-வது வாரம்!

முருகன் ஒடியன் ராணி ஜோதி லிபர்ட்டி

(ஜிந்துப்பிட்டி) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (திருக்கோணமலை) (பதுளை)



★ ஜெமினி கணேசன் ★ ராஜசுலோசன
★ சாவித்திரி ★ வி. ஆர். ராஜகோபால்
★ எம். என். நம்பியார் ★ எம். எஸ். எஸ். பாக்கியம்

முதலியோர் நடித்த

பாக்கிய தேவதை

(தமிழ்)

குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணம் செய்கிருள் கடமை உணர்ச்சியுள்ள ஒரு பெண்!

தன் கணவனின் வீண் சந்தேகத்தைப் போக்கடித்துத் தனது நேர்மையை நிலைநாட்டப் பல கஷ்டங்களையும் எதிர்த்துப் போராடுகிருள் இன்னுமொரு பெண்!

இவர்கள் இருவரையும் "பாக்கிய தேவதை"யில் நீங்கள் சந்திக்கலாம்!


# சங்கானை ஆஸ்பத்திரியின் அவசர தேவைகள்
## சுகாதாரமந்திரிக்கு பட்டினசபைத் தலைவரின்வேண்டுகோள்

சங்கானை ஆஸ்பத்திரியின் அபிவிருத்திபற்றி சங்கானைப் பட்டினசங்கத் தலைவர் சுகாதார மந்திரிக்கு விடுத்த வேண்டுகோள் இன்னும் கவனிக்கப்படவில்லை. குறித்த ஆஸ்பத்திரியின் அத்தியாவசிய தேவைகளாவன: வைத்தியஅதிகாரிக்கும், தொழிலாளிகளுக்கும் வீடுகள் அமைத்தல், ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் வசதி செய்து தருதல், முன்பக்கம் மதில்சுவர் கட்டுதல், இரவு நேரங்களில் நோயாளரை அனுமதிக்க இன்னுமொரு வைத்திய அதிகாரியை நியமித்தல் போன்றவைகளுடன் இன்றுள்ள அதிமுக்கியமான தேவை ஒரு பிரேத அறை கட்டுவதாகும். இது சம்பந்தமாகச் சமீபத்தில் ஓர் இறந்தவரின் உடல் காலைதொடக்கம் மாலை வரையும் வாட்டிலேயே கிடக்க நேரிட்டதென சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

### பிரதமர் நேருவின் கூற்று

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுள் புகுந்திருக்கலாம் என நம்பப்பட்டது. இக் கோஷ்டியில் 3 யப்பானிய வீரரும், ஒரு நேபாள உத்தியோகத்தரும் 26 பொதி சுமக்கும் தொழிலாளரும் இருந்தனராம். நேபாள அரசாங்கம் இவர்களைத் தேடுவதற்கு கோஷ்டிகளை அனுப்பிய பின்பு கடந்த திங்கட்கிழமை இவர்கள் அனைவரும் பத்திரமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### அமெரிக்க ஜனதிபதி

அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர் டிசம்பர் 9 தொடக்கம் 13ம் திகதிவரை இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார். டில்லியில் நான்கு தினங்கள் தங்கியிருப்பார்.

### ருஷிய ஜனதிபதி

ருஷிய ஜனதிபதிவொரோஷிலோவ் 1960 ஜனவரியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கேரளம்

எதிர்க்கட்சிகளின் முன்னணியிலிருந்து புரட்சிவாத சோஷலிஸ்ட் கட்சி விலகியிருக்கிறது. அது ஒரு தனிக் கட்சியாக அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது.

சினிமா உலகம்

# ‘பாகவதரின் ஆத்மா எப்பொழுதோ சாந்தி அடைந்து விட்டது’

## அவரது வாழ்க்கை ஏட்டில் உருக்கமான ஒரு சம்பவம்

சென்னை ‘இந்து’ப் பத்திரிகையில் தியாகராஜ பாகவதரின் மறைவு பற்றி ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. அதிலுள்ள சில பகுதிகள் வருமாறு:

தியாகராஜ நகரிலுள்ள ஒரு வீட்டை, ஒரு நாள் மாலை ஜனங்கள் முற்றுகையிட்டனர். அந்த வீடு, ஒரு பிரபல ஹாஸ்ய நடிகரின் வீடு. அவ் வீட்டின் விருந்தையிலே, ஒரு கட்டிலிலே, மறைந்த ஹாஸ்ய நடிகரின் சடலம் வைக்கப்பட்டிருந்தது. நண்பர்களும், ரசிகர்களும் தமது இறுதி மரியாதைகளை அளிப்பதற்குதவியாகவே அது அவ்வாறு வைக்கப்பட்டிருந்தது. தெருவில் கூடிய கூட்டத்தினிடையே, இறந்த நடிகனுக்கு மரியாதை செலுத்த எந்த எந்த நடிகர்கள் வருவார்கள், எந்த எந்த நடிகர்கள் வராமல் விடக்கூடும் என்ற கேள்விகள் அடிபட்டன. ஆனால், மறைந்த நடிகனுக்கு மிகவும் வேண்டிய நண்பரானவொருவர், கூட்டத்தில் நின்றதை எவருமே கவனிக்கவில்லை. கூட்டத்துடன் கூட்டமாக, இவரும் தள்ளப்பட்டார்; இடிக்கப்பட்டார். ஒரு வேளை, நின்றவர்கள் அவரையும் தங்களில் ஒருவராக எண்ணியிருக்கலாம்.

இந்த நேரத்தில் அந்த மனிதரின் உள்ளத்தில் என்னஎன்ன எண்ணங்கள் தோன்றிற்றே தெரியாது. ஆனால், தன் முன்னிலிருந்த கூட்டத்திலும் பார்க்கப் பெரிய பெரிய ஜனத்திரள்கள், பெரிய, சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் தன்னை ஒரே ஒரு முறை பார்க்கத் தவங்கிடந்தது பற்றி அவர் கட்டாயமாக நினைத்திருக்கத்தான் வேண்டும்.

கட்டுரையில் குறிப்பிடப்பட்டவர் வேறுயாருமல்ல; பத்து வருடங்களுக்கு முன் பல்லாயிரக்கணக்கான ரசிக மக்களைத் தன் குரலின் சக்தியினல் கொள்ளைகொண்ட தியாகராஜ பாகவதரேயாவர்.

மேலும், சிறை வாசத்திற்குப் பின் பாகவதர் பட்ட கஷ்டங்களை எடுத்துக் கூறும் இக்கட்டுரை, ஈற்றில் தெரிவித்திருப்பதாவது: “சென்ற வாரம் அவர் இறக்கும் பொழுது, அவருடைய உடலே இறந்தது. அவருடைய ஆத்மா எப்பொழுதோ சாந்தி பெறுறவிட்டது.”

# “கண் திறந்தது”

## புதுமை நிறைந்த திரைச் சித்திரம்

நாராயணன் கொம்பனியாரின் “கண்திறந்தது” என்னும் படம் தீபாவளித் தினமன்று தமிழ் நாடெங்கும் காண்பிக்கப்பட்டது. தமிழ்த் திரை உலகிலே இப்படம் ஒரு திருப்பத்தை உண்டாக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப்படத்தில் பெரிய நட்சத்திரங்கள் கிடையாது. காட்சி ஜோடனைகளோ, கண்ணைக்கவரும் அலங்கார உடைகளோ இதில் இடம் பெறவில்லை. “கண் திறந்தது” ஒரு முற்றிலும் புதுமை நிறைந்த படம். வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளை அப்படியே படம்பிடித்துக் காட்டும் இப்படத்தில் முக்கிய பாகமொன்றை ஏற்று நடித்துள்ளவன் வியாஸ் என்னும் சிறுவனேயாகும். பல்வேறு குணச்சித்திர இயல்புகளைக் கொண்ட தனது பாத்திரத்தை, அநுபவம் நிறைந்த நடிகர்களைப் போன்று, திறமையுடன் நடித்திருக்கிறான் இச்சிறுவன்.

சகஸ்ரநாமம், மைனவதி, என். எஸ். கே. மதுரம், சூர்யகலா, சாயிராம் முதலியோரும் இப்படத்தில் புதுமையான பாகங்களில் தோன்றித் திறமையுடன் நடித்துள்ளனர்.

## பாவம் சிவாஜி!

‘பாகப் பிரிவினை’ என்னும் படத்தில் முடமாக நடிக்கும் சிவாஜி கணேசன், அப்படத்தில் தாம் ஏற்றிருக்கும் பாகத்தைப் பற்றிப் பின்வருமாறு புகார் செய்திருக்கிறார் :—

“நான் இந்தப் படத்திற்காக, கையிருந்தும் நொண்டியானேன்! காலிருந்தும் முடமானேன்! ஆரம்பத்தில் கதாசிரியரின் கற்பனையில் எனக்குப் புதுமைத் திருப்தி ஏற்பட்டபோதிலும், நடிக்கும்போது, வேண்டுமென்றே சிலர் செய்த சதியோ என்று கூட எண்ணினேன்! ஏனெனில், அந்த நொண்டி நடிப்பு என்னிடமே எனக்கு அனுதாபத்தை உண்டு பண்ணியது.” பாவம் சிவாஜி!

## மாடுகளின் உதவியுடன் மின்சாரசக்தி

### புரட்சிகரமான ஒரு முயற்சி

இயந்திர உலகமாகிய இன்றைய உலகில் மிருகங்களின் உபயோகம் பற்றி மனிதர்கள் அக்கறை கொள்வதில்லை. ஆனல், இந்தியாவிலுள்ள கான்பூர் என்னுமிடத்தில், மாடுகளின் உதவியுடன் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. இப் புதுமாதிரியான பரீட்சை, கான்பூர் கிராமத்தில், அமெரிக்கத் தொழில்நுட்ப வல்லுநரின் உதவியுடனும், கிராம வாசிகளின் ஒத்துழைப்புடனும் நடை முறையில் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. இது ஓரளவு வெற்றிகரமான முயற்சியென்றே சொல்லப்படுகிறது. இம்முயற்சியை இந்தியாவிலுள்ள மற்றக் கிராமங்களிலும் பரீட்சித்துப் பார்க்க இதன் கர்த்தாக்கள் விரும்புகிறார்கள். பிரதமர் நேரு இதனைப் புரட்சிகரமான ஒரு முயற்சி எனக் கூறியிருக்கிறார். மின்சார சக்தி உற்பத்திக்கு உபயோகிக்கப்படாத வேளைகளில், தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு மாடுகள் உதவியாகவிருக்கின்றன.

## “கவியின் கனவு”

நாடக ஆசிரியரான திரு. எஸ். டி. சுந்தரம் எழுதிய ‘கவியின் கனவு’, நாடகமாக நடிக்கப்பெற்றுப் புகழ் ஈட்டியுள்ளது. இப்பொழுது இந்நாடகத்தைத் திரைப்படமாக்க, திரு. எஸ். டி. சுந்தரமும், திரு. ஏ. பி. நாகராஜனும் முயற்சி செய்கிறார்கள். இப்படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், நடிகவேள் எம். ஆர். ராதா, எம். என். நம்பியார் ஆகியோரும் நடிக்கக் கூடுமெனத் தெரிகிறது.

## ‘பெற்ற மகனே பெரும் செல்வம்’

‘வின்னர் பிலிம்ஸ்’ எனும் புதுக் கொம்பனி ‘பெற்ற மகனே பெரும் செல்வம்’ என்னும் கதையைப் படமாக்குகிறார்கள். இப்படத்துக்குரிய கதை, வசனம் இரண்டையும் இளம் எழுத்தாளர் ‘அன்பு’ எழுதுகிறார். உலகத்திலுள்ள செல்வங்களனைத்திலும் சிறந்த செல்வம் மக்கட் செல்வம் என்னும் உயரிய கருத்தை வலியுறுத்துவதே இக்கதையின் நோக்கமாகும். இப்படத்தில் பாலாஜி, மைனவதி, எஸ். வி. சுப்பையா, பண்டரிபாய் முதலியோர் நடிக்கின்றனர்.

## பாரதத்தின் மாணிக்கமாக....

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

பனை செய்தது போல் அவ்வளவு பிரகாசமாகத் தோன்றவில்லை.

அடுத்தஒக்டோபரில்இரண்டு அல்லது மூன்று வாரங்கள் பிரிட்டனிலிருக்க வாய்ப்பு கிடைக்கும் போலுள்ளது. தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு தொந்தரவில்லாமல் இருப்பின், தங்களைப் பார்க்கப் பிரியப்படுவேன். எந்தக் கேள்வியும் கேட்டுத்தங்களை இம்சைசெய்ய மாட்டேன்மனத்தில்அதிகமான கேள்விகள் எழுகின்றன. அவற்றுக்குச் சரியான பதில் தெரியவில்லை. பதில் கிடைத்தாலும் அதை மனிதர்கள் காரியத்தில் நடாத்தி வைப்பது முடியாததாக இருக்கிறது.

கொஞ்ச நேரம் தங்களைச் சந்திக்கக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்குமாயின், அது என்னை இப்போதுள்ளதை விட, சற்றே அதிக செல்வந்தனுக்க் கூடிய ஒரு பொன்னன நினைவைஉண்டாக்கும்.

தங்கள் உண்மையுள்ள,
**ஜவஹர்லால் நேரு.**

## மலைநாட்டுச் செய்திகள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

24ஆம் திகதி தொடக்கம் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸை சேர்ந்த தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். இவ் வேலைநிறுத்தத்திற்குக் காரணம் 12 குடும்பங்களுக்கு வேலை மறுக்கப்பட்டதாகவும், தொழிலாளர் விரும்பாத திரு. ராமையா கணக்கப்பிள்ளையின் கீழ் வேலைசெய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத்தொழிலாளர் காங்கிரசுக்கும்தோட்ட நிர்வாகத்திற்கும் நடைபெற்ற மாநாட்டில் சமரச முடிவு ஏற்படாததாலேயே தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் இறங்கியதாகத் தெரிய வருகிறது.

## கர்ப்பிணிகள் . . .

[10ஆம் பக்கத் தொடர்ச்சி]

லாமல் பெருக்க வேண்டுமா? அவள் கர்ப்பமுற்றதும் வேலைகள் செய்வதை நிறுத்தி விட்டாள். அதனலேயே இரண்டாம் மாதத்தில் இப்படி ஊதி விட்டாள். கர்ப்பிணியாக இருக்கும் போது சுகமான தேகமுள்ள ஒரு பெண்ணின் நிறை எவ்வளவு அதிகரிக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும். அத்துடன் கர்ப்பிணிகள் செய்யக்கூடிய வேலைகளையும் தேகாப்பியாசங்களையும் விபரமாக உனக்கு எழுதும்படி உன் அண்ணவிடம் சொல்லப் போகிறேன்.

உனது அன்புள்ள,
**அண்ணி.**

பி. கு.:- நந்தினி, உனது நிறை என்ன?

# ஆபிரிக்க மொழியில் இந்தியப் படம்

முதல் முதலாகவொரு திரைப்படம் ஆபிரிக்க மொழியிலே பெயர்க்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட பெருமை ஓர் இந்தியப்படத்தையே சாரும். “மிஸ்டர் கியூ” என்னும் இந்த இந்தியப்படம் ஆபிரிக்க மொழியான ஸ்வாஹிலி என்ற மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் ஆக்கப்பட்டுள்ள இப்படத்தில் அமார்நாத், நாஸி என்னும் இரு திறமை மிக்க இந்தி நட்சத்திரங்கள் தோன்றுகின்றனர். சண்டையும், ஹாஸ்யமும் கலந்த படம் இது.

இப்படம் கிழக்கு, தெற்கு ஆபிரிக்காவில் பல தியேட்டர்களில் காண்பிக்கப்படும். படத்தின் வசனம் முழுவதும் ஆபிரிக்க மொழியில் இருந்தபோதிலும், பாட்டுக்கள் ப்டத்தின் மூல மொழியான இந்தி மொழியிலேயே இருக்கும்.

இப் புது மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர், இந்தப் படத்தின் வெற்றியைப் பார்த்தே, வேறு இந்தியப் படங்களையும் ஆபிரிக்க மொழிகளில் பதிவு செய்ய எண்ணியுள்ளார்.

## ‘சிவகாமி’யில் தியாகராஜபாகவதர்

அண்மையில் காலம் சென்ற தியாகராஜபாகவதர் தோன்றும் படமான எம். ஏ. வி. பிக்ஸர்ஸாரின் ‘சிவகாமி’ விரைவில் வெளிவரும். தமது இனிய கானத்தினல் எத்தனையோ மக்களை இன்பமுறச் செய்த காந்தர்வ இசை வேந்தனின் இப்படத்திற்குப் பொது மக்களிடையே நல்ல வரவேற்பிருக்கச் செய்யுமென்று நாம் நம்பலாம். இப்படத்தை மித்ரதாஸ் என்பவர் இயக்குகிறார். கதை, வசனம் வேங்கடராமானுஜம் எழுதியுள்ளார். சங்கீதம் கே. வி. மஹாதேவன் பொறுப்பிலுள்ளது.

## பல்கலைக் கழகங்களுக்குப் பட விநியோகம்


இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குத் திரைப்படங்கள் விநியோகம் செய்ய மத்திய கல்வி இலாக்கா திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, பல்கலைக்கழகங்களில் சினிமாச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். இவை அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதுடன், படங்கள் காண்பிப்பதற்கான செலவையும் ஓரளவுக்குத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழக மாணவர்க்கு 6 படங்கள் காண்பிக்கப்படும். இவற்றில் நான்கு படங்கள் அந்நியதேசப் படங்களாகும்: மற்ற இரண்டும் இந்தியப் படங்களாகும். ஒவ்வொரு பல்கலைக்கழகமும் வருடத்துக்கு ரூபா 3,300 சந்தாவாகக் கட்ட வேண்டும். இப்பணம் குழந்தைகள் சினிமாச் சங்கத்திற்குச் சேரும்.

இத்திட்டத்தால் ஏற்படும் நட்டம் எதனையும் அரசாங்கம் பொறுப்பேற்கத் தயாராகவுள்ளது.

## டைரக்டர் ஸ்ரீதரின் இரண்டாவது முயற்சி

‘கல்யாணப் பரிசு’ மூலம் தமிழ்த்திரையுலகில் பெரும் புகழீட்டிய இளைஞரான டைரக்டர் ஸ்ரீதரின் இன்னுமொரு படம் விரைவில் வெளியிடப்படவிருக்கிறது. “மீண்ட ஸ்வர்க்கம்” என்ற பெயரைத் தாங்கும் இப்படத்தில் ஜெமினி கணேசன், பத்மினி, தங்கவேலு முதலியோர் நடிக்கின்றனர். இப்படத்தின் கதை, வசனத்தையும் ஸ்ரீதரே எழுதியுள்ளார்.



பத்து வருடங்களாகச் செய்யப்பட்ட முயற்சியின் பலனே மேலே காணப்படும் பிரிட்டிஷ் ரேடியோ தொலைநோக்கிக் கருவியாகும்.

## வெற்றி வாகை சூடும் 5-வது வாரம்!

கிங்ஸ்லி - பிளாஸா - நவா (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை)

சரசாவி (அக்கரைப்பத்தன) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) நியூ சினிமா (குருணகலை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (ரத்தினபுரி)

★ கவர்ச்சி அளிக்கும் கருத்தோடு பூத்த கதை!
★ உள்ளத்தோடு உறவாடும் உணர்ச்சி மிகுந்த சம்பவங்கள்!!
★ மங்கையரின் வாழ்வில் நேரும் அதிர்ச்சிகளை சித்தரிக்கும் ஓவியம்!!!
★ மனச்சாட்சியை மதித்து தன் வாழ்வையே சிறப்பித்த பெண்ணின் காவியம்!!!!




நடிகர்கள்:
ஜெமினி கணேசன்
பி. சரோஜாதேவி
நாகேஸ்வரராவ்
விஜயகுமாரி
நம்பியார்
தங்கவேலு
எம். சரோஜா

கதை - வசனம் டைரக்ஷன்:
ஸ்ரீதர்

சங்கீதம்:
ஏ. எம். ராஜா

பின்னணி:
ஏ. எம். ராஜா, ஜிக்கி, சுசீலா, ஜமுனாராணி.

வீனஸ் பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

---

## கொழும்பில் 4-வது மாதம்!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது! கெபிட்டித் திரையில்

சிவாஜி கணேசன், பத்மினி, ஜெமினி கணேசன், எஸ். வரலட்சுமி, ஓ. ஏ. கே. தேவர், ராகினி முதலியோர் நடித்த

# வீரபாண்டிய கட்டபொம்மன்

(முழுநீள டெக்னிக்கலர்)

---

**4-வது வாரம்!** செல்லமஹால் [கொழும்பு]

தினசரி மாலை 2-00, 6-30, இரவு 9-30
காலைக்காட்சி ஞாயிறு 10-00 மணிக்கு

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், சந்திரபாபு, ராகினி, ராஜசுலோசனா, என். எஸ். கே. மதுரம், டி. பி. முத்துலட்சுமி மற்றும் பலர் நடித்த

# பாண்டித்தேவன்

(தமிழ்)

கதை-டைரக்ஷன்:
கே. சுப்பிரமணியம்



---

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம் நடித்த

# மாமியார் மெச்சிய மருமகள்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதி வெளியிடப்பெற்றது.